www.tamilarangam.net

# எரிமலை


ஜனவரி 2000

## ஓயாத அலைகள் 3
### ஆனையிறவு முற்றுகைச் சமர்
ஒரு பார்வை




- உலக நாடுகளின் விடுதலை வரலாறு தமிழீழ மக்களுக்கு கூறுவது என்ன?
- ஆழப்பதிந்த பெரும்சமர்
- 1999 மீள் பார்வை


## அன்பின் வடிவமாய்...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அக்கறைப் பூக்கள்

வெல்லட்டும் தமிழீழம்,

அன்புள்ள எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

தமிழகத்தில் நடைபெற்ற தமிழீழ ஆதரவு நிகழ்வுகளில் கலந்து கொண்டேன். ஐயா பழ.நெடுமாறனையும், தோழர் சுபவீயையும் சந்தித்தேன். தமிழீழ விடுதலை ஆதரவாளரும் மாமனிதருமாகிய குமார் பொன்னம்பலம் அவர்களை சிங்கள பேரினவாத சந்திரிகா அரசு கூலிப்படைகளைக் கொண்டு வஞ்சகமாக படுகொலை செய்துள்ளது. களத்தில் நேருக்கு நேர் நின்று வெல்ல முடியாமல் சூழ்ச்சியால் தமிழீழ உணர்வாளர்களை படுகொலை புரிந்துள்ளதை சர்வதேச சமூகமுணர்ந்து கொள்ள நாம் பிரச்சார பணிகளை முன்னெடுக்க வேண்டும். மாமனிதர் குமார். பொன்னம்பலம் அவர்கட்கு எமது வீரவணக்கம்.

என்றென்றும் தமிழீழ
நேசத்துடன்
மே.வி. புலிக்குமார்
சேலம்
தமிழ்நாடு.

▼ ▼ ▼

ஆசிரியர் அவர்கட்கு,

சென்ற இதழில் வெளிவந்த வெற்றிமனையில் ஒருநாள் என்ற உண்மையின் பதிவை உள்வாங்கிக் கொண்டதில் இருந்து, இதுபோன்ற மனித நேயமிக்க சேவைகளும் எமது மண்ணில் தொடர்வது அறிந்தேன். புலம்பெயர் மண்ணில் வாழுகின்ற நாமும் எம் மனங்களைத்திறந்து, இத்தகைய பணிகளுக்கு உதவிட வேண்டும். இத்தாலி மண்ணிலிருந்து மறுமுறை எம்மண்ணிற்கு செல்கின்றபோது, கட்டாயம் வெற்றிமனைக்கு செல்வோம் என என் நண்பர்கள் பலர் உறுதியளித்துள்ளனர். இதற்கு உதவிய எரிமலைக்கு நன்றி. இது போன்ற மேலும் உண்மை நிகழ்வுகளையும் போர்க்கள உயிர்க்கொடையையும் தாங்கி எரிமலை வளர எம் வாழ்த்துக்கள்.

அன்புடன்
பார்த்தீபனும் நண்பர்களும்
பலர்மோ
இத்தாலி.

▼ ▼ ▼

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அன்பார்ந்த எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

தமிழர்களுக்கும் தமிழுக்கும் குரல் கொடுத்து சிங்கள அரசை எதிர்த்து போராடி வரும் தேசியத் தலைவர் அவர்களின் செயல்களையும், வெற்றிகளையும், போர்ச் செய்திகளையும், அரிய தகவல்களையும் விரிவாக உடனுக்குடன் தெரிவித்துவரும் உங்களின் வியத்தகு எரிமலைப் படைப்புக்களுக்கு எனது பாராட்டுக்கள்.

தமிழுக்கும் தமிழர்களுக்கும் நியாயம் கேட்டு போராடிவரும் விடுதலைப் புலிகளின் மாபெரும் வெற்றிகளுக்கு எனது வாழ்த்துக்கள்.

சா. கிருஷ்ணமூர்த்தி
வேலூர்
தமிழ்நாடு.

▼ ▼ ▼

மதிப்பிற்குரிய எரிமலை வெளியீட்டு ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களுக்கும், தமிழ் வேங்கைகளுக்கும் 2000ஆம் ஆண்டின் பொங்கல் மற்றும் தைப்புத் தாண்டு வாழ்த்துக்கள்.

தமிழீழத்தின் போர்க்களக் காட்சிகளை, தமிழ்நாட்டில் எங்கள் முன் உண்மைக்குச் சாட்சியாகக் காட்டிக் கொண்டிருக்கும் எரிமலை, போர்க்கள நடுவில் பூத்த நெருப்பு இலக்கியம். மாவீரர்கள் புகழ்பாடும் வீர வெளியீடு.

எரிமலை- சிங்கள அரசு தரும் பொய்ச் செய்திகளின் பரப்பல்களுக்கு நடுவே எந்தமிழின வேங்கைகளின் வீரச்சமர்களை விவரிக்கும் உண்மை வெளியீடு.

தமிழீழத் தாயகத்தின் வரலாற்றுக் கண்ணாடி. போர் இலக்கியம்.

புதிய நூற்றாண்டில் ஏற்படப் போகும் புதிய **தமிழீழம்** நாட்டின் வாசலில் நின்று வேங்கைகள் எந்தமிழ் நாட்டவரை வரவேற்கும் நாட்களை எதிர்நோக்கி காத்திருக்கும்

த. இளங்கோவன்
மதுரை
தமிழ்நாடு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை
ஜனவரி 2000

## கட்டுரை


நீரின்றி பயிர் அழிதல் எல்வாறுநிகழும் பக்கம் - 30

தர்மத்தின் வாழ்வு பக்கம் - 12

எல்லாமும் எல்லோரும் விடுதலைக்கே பக்கம் - 48


## சிறுகதை


தோழன் பக்கம் - 34

ஓர் இரவின் எழுதல்கள் பக்கம் - 36


## நேர்காணல்


ச.வே. பஞ்சாட்சரம் பக்கம் - 40


## கவிதை


சடையர் கவிதைகள் பக்கம் - 17

புறப்படு தமிழ் வீரா பக்கம் - 21

கண்கொத்தி பாம்புகள் பக்கம் - 29

சுதந்திரப் பொங்கல் பக்கம் - 33

விடியலுக்கான ஒத்திகை பக்கம் - 43

ஒரு சின்னப்பறவையின் சிறகசைப்பினில் பக்கம் - 47



சிறீலங்காவின் கொலைக் கரங்களால் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம்

05





15 தமிழின வதைப்பில் மும்மூர்த்திகள்





19 தமிழீழ மக்களின் பாரம்பரிய பிரதேசம்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர சுதந்திரம் வேண்டுவோருக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடுகொடுத்து தனது விடுதலைப்பயணத்தில் வெற்றிநடைபோட முடிந்தது என்றால், அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுவேன். நீண்ட வரலாற்று அனுபவத்தில் நான் கண்ட உண்மை இது.

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கிறது. பல நெருக்கடிகளை எதிர் கொள்கிறது.

கொந்தளிப்பான பல சூழ் நிலைகளுக்கு முகம் கொடுக்கிறது. விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு ரணகளம். சாவையும், அழி வையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தைக் காணமுடி யும். கரடு முரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்று கோலாக இருப்பது எமது உறுதிதான்.

இன்று ஒரு புதிய நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தை நாம் சந்தித்து நிற்கிறோம்.

எதிரிப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு நிற்கின்றன. பொருளாதாரத் தடை களை இறுக்கி உணவுப் பஞ்சத்தை உண்டு பண்ண எதிரி முனைகிறான். இராணுவ அழுத்தம், பொருளாதார நெருக்குதல் என்ற ரீதியில் இரு முனைகளில் எமது மக்கள் மீது யுத்தம் ஒன்று ஏவப்பட்டிருக்கிறது. எமது போராட்டத்தின் அசைக்க முடியாத அரணாக நிற்கும் எமது மக்களின் மன பலத்தை உடைத்துவிட எதிரியானவன் எல்லாவித தந்திரோபாயங்களையும் கடைப்பிடிக்கலாம் என்பது எமக்கு தெரியாதது அல்ல.

எமது மக்கள் சிங்கள இனவாத அடக்கு முறையின் அக்கினிப் பட்டறையில் புடம் போடப் பட்டவர்கள் அரச பயங்கரவாதத்தின் அகோரங் களைச் சந்தித்தவர்கள் துன்பச் சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். மரணத்தின் நிழலில் படுத் துறங்கி வாழ்பவர்கள்.

களைத்துப்போனவனின் இறுதி ஆயுதமாக உணவுப் போர் எமது மக்கள் மீது தொடுக்கப்படலாம் பட்டி



னித் தீயால் மக்களின் மன உறுதியைச் சுட்டெரிக்க எதிரி முயற்சிக்கலாம். ஆனால் சுதந்திரப் பசியால் உறுதி பூண்ட மக்களை சோற்றுப்பசி தீண்டி விடப் போவதில்லை.

எனது அன்பான மக்களே!

இன்று நாம் எதிர் கொள்ளும் இந்த நெருக் கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்தச் சவாலுக்கும் நாம் முகம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

எமது மனஉறுதிக்கு எதிரி சவால் விடுகிறான். இந்தச் சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதி யைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
ஜனவரி
2000

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*
*Fax: 01 - 43 58 11 91*

# தலைவாசல்

## ஆட்பிடிப்பும்– ஆட்சேர்ப்பும்

சிங்கள இனவாத அரசும் அதனது படைகளும் 7500 தமிழர்களை புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சனவரி மாதம் கொழும்பில் கைது செய்து பொலிஸ் நிலையங்களுக்கு இழுத்துச் சென்றுள்ளது. இவ்வாறு கைதானவா களில் எண்ணிக்கை தெரியாத தொகையினர் கணக்குக் காட்டப்படாமலே படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அஞ்சப்படுகிறது. களுத்துறை சிறைக் கூடத்தில் 3 தமிழ் கைதிகள் அடித்துக் கொல்லப்பட்டுள்ளமையும், காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமிழ்க் கைதிகள் கால்களும் கைகளும் விலங்கிடப்பட்டு மருத்துவ உதவிகள் வழங்கப்படாமல் துன்புறுத்தப் பட்டுள்ளமையும் புத்தாயிரமாண்டினை சிங்களம் வரவேற்ற விதத்தினை காட்டுகின்றது.

நீண்ட இனக்குரோத பாரம்பரியத்தைக் கொண்ட சிங்களம் போர்முனையில் தமக்கு ஏற்பட்டுவரும் மோசமான தோல்விகளை மக்கள் மீதான தீவிர துன்புறுத்தல் மூலம் ஈடுசெய்ய முற்படுகிறது.

கைதிகளாக சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டுள்ள இளைஞர்களை அடித் துக் கொல்லுவது இம் மனநோயின் அறிகுறியாகும்.

இதன் மற்றுமொரு வெளிப்பாடே மாமனிதன் குமார் பொன்னம்பலம் மீதான வன்முறையாகும். கொழும்பில் இருந்தவாறு தமது சட்டங்களையும்-வாதங் களையும் மறுதலித்து பேசும் குற்றத்தை அவர் புரிந்து வந்ததாக சந்திரிகா அரசு கருதி வந்தது. நீண்டகால இடையூறான அவரை அரசியல்--இராஜதந்திர, காரணம் கருதி அனுமதித்து வந்த சந்திரிகா அரசு பகிரங்கத் தோல்வியால் துவண்டபோது அவரை தீர்த்துக்கட்டி விட்டது. அவர் வாழ்வதற்காக விதிக்கப்பட்ட காலம் அவ்வளவு என்பதே பாசிச சிங்கள இயந்திரத்தின் நினைப்பு.

இவ்வாறான இன அடக்குமுறைக் குற்றங்களால் தமிழர்களின் தேசிய எழுச்சியை நசுக்கி விடமுடியாது என்பது உலகம் அறிந்த உண்மையாகும். பலமான அரசியல் இராணுவ தலைமைகளால் வழிநடாத்தப்படும் தமிழீழ மக்கள் தமது எதிர்காலம் பற்றிய தெளிவான பார்வையை கொண்டவர்களாக இருப்பதை அவர்களது செயற்பாடுகள் தெளிவுபடுத்துகின்றன. வன்னியில் மக்கள் பெரும் எழுச்சி கொண்டு எல்லைக் காவல் படையிலும், ஊர்காவல் படையிலும் இணைவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தென்தமிழீழத்தில் எழுபது வீத நிலப்பரப்பை புலிகள் பாதுகாத்து வருகின்றனர் என்பதும் பல்லாயிரம் மக்கள் அதற்கு போர்ப்பயிற்சி பெற்று வருகின்றனர் என்பதும் உலக ஏடுகளில் எழுதப்பட்ட செய்திகளாகிவிட்டது. புகலிடங்களில் தமிழர்கள் தேசிய உணர்வுடன் செயற்படுவது வெளிப்படையானது.

இம்மக்கள் எழுச்சியை நசுக்க சிங்களம் பல்வேறுவிதமாக முயல்கிறது. யாழ் குடாநாட்டில் உள்ள தமது ஆக்கிரமிப்பை பாதுகாக்க வேண்டும், சிறீலங்காவில் இடம்பெற்றுவரும் குண்டு வெடிப்புக்களையும், தாக்குதல் முயற்சிகளையும் இல்லாதாக்கிட வேண்டும் எனப் பல உடனடி இலக்குடனும் ஒட்டு மொத்த தமிழர் எழுச்சியை நசுக்கிட வேண்டும் என்ற இறுதி இலக்குடனும் இயங்கும் சிங்களப் படைகள் 15000 சிங்களவர்களை படைகளில் சேர்த்திடப் புறப்பட்டுள்ளது. புதிதாக கொழும்புக்கு கொண்டு வரப்பட உள்ள நவீன ஆயுதங்களுடன் இவ் மனிதவலுவும் இணைக்கப் பட்டால் போரை வென்று விடலாம் என சந்திரிகா அரசு மீண்டும் கணக்கு போட்டுப்பார்த்துள்ளது போல் தெரிகிறது.

ஆனால் போர்க்கள யதார்த்தமும் தர்மமும் வேறுவிதமாக உள்ளது. வெறும் ஆட்சேர்ப்பும் கைதுகளும் ஒரு மக்கள் சமூகத்தின் எழுச்சியை நசுக்கி விடமுடியாது !!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தான் என்றோ ஒரு நாள் எதிரியின் துப்பாக்கிக்கு பலியாக நேரிடும் என்று தெரிந்தும், தமிழீழம் ஆயுதப்போராட்டம் மூலமே வென்றெடுக்கப்படவேண்டும் என்று உறுதியாக நம்பினார். அதனை தான் கொல்லப்படுவதற்கு அதாவது ஜனவரி 5ம் திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக 'ராவய' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தனக்கேயுரிய பாணியில் கூறியிருந்தார்.

அப்பாவித் தமிழர்கள் சந்திரிகா அரசினால் வகை தொகையின்றி கைது செய்யப்படுகின்ற வேளையிலெல்லாம் துணிந்து நின்று பிரதிபலன் பாராது சிறீலங்கா காவல்துறை நீதிமன்றுகள் தோறும் சென்று வாதாடினார். கொக்கட்டிச்சோலைப் படுகொலை, கிருசாந்திப் படுகொலை மற்றும் செம்மணிப் பெரும் புதைகுழி வழக்குகளிலெல்லாம் தமிழர் தரப்பு நியாயத்தை வலியுறுத்தினார். மொத்தத்தில் தனது புலமை, ஆளுமை அனைத்தையும் தமிழீழ விடுதலைக்காக செலவிட்டார்.

ஜனவரி 5ம் திகதி அன்று குமார் பொன்னம்பலம் என்ற

# சிறீலங்காவின் கொலைக் கரங்களால் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம்

தமிழினத்தின் விடுதலைக்காக சிறீலங்காவின் தலைநகரில் நின்று குரலெழுப்பியவர், சொல்லிலும் செயலிலும் தமிழீழ விடுதலைக்கு கொழும்பிலும் சர்வதேச அரங்கிலும் தளராது உழைத்தவர்.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானவேடத்தை ஜெனிவாவிலும்(சுவிஸ்) ஹேய்க்(நெதர்லாந்து) நகரிலும் நடந்த ஐ.நா. வின் மனித உரிமைகள் கூட்டத்தொடர்களில் பலதடவைகள் தோலுரித்துக்காட்டியவர். இறுதியாக இரண்டாவது தடவையாக சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்ற போது கூறிய ஆணவமான தமிழர் விரோத உரைக்கெதிராக பகிரங்கமாக பதிலெழுதியவர்.

தனிமனிதரை கொல்லும் நோக்கம் மட்டுமல்லாமல் அவர் சார்ந்த கொள்கையை முறியடிக்கலாம் என்ற எண்ணத்துடனேயே படுகொலை செய்தார்கள். ஆனால் அதில் தோற்றுவிட்டனர் என்றே சொல்லலாம்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழ் புத்திஜீவிகள் சமுதாயத்திற்கு ஒரு விதையை தூவிச்சென்றுள்ளார் (Legacy). அதைத் தொடர்ந்து செல்லவேண்டியது புத்திஜீவிகள் சமுதாயத்தின் கடமையாகும். அவர்களின் தேசத்திற்கான பங்களிப்பு, தனிமனிதர்களை அழிப்பதால் கொள்கை முன்னெடுப்புக்கள் பின்தங்கிவிடாது என்பதை சிங்கள இனவெறியர்களுக்கு புரியவைக்கும்.



ஜெனீவா ஐ.நா. முன்றலில்
தமிழர் உரிமை முழக்கம்
ஏப்பிரல் 97



தமிழர் பாதுகாப்பு ஊர்வலம்
டென்மார்க் ஏப்பிரல் 99



இறுதிக் கிரியைகளின் போது
துணைவியார் அஞ்சலி
09.01.2000



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ‘மாமனிதர்’ குமார் பொன்னம்பலம்



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்,
07. 01. 2000

அன்புடையீர்,

தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து அந்த உன்னத இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றிவந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்துவிட்டோம். விடுதலைக்காக எரிந்துவந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்துவிட்டது. பகைவனின் கோழைத்தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார்.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன் நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பிவந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்துநின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

திரு. பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றாளர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாகவேண்டுமென ஆவல்கொண்டவர். ஆயுதப்போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும், எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல் கொடுத்துவந்தார். நேர்மைத்திறமையுடன், அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப்பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக “**மாமனிதர்**” என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

‘புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்’

அன்புடன்

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆழப்பதிந்த பெருஞ்சமர்!



பெரும் நிலமீட்புச் சமராக வெடித்து பல்லாயிரம் சதுரக் கிலோமீற்றர் நிலத்தை சிங்களப் பேரினவாத ஆதிக்கத்திலிருந்து மீட்டுவரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை தமிழர்களின் நவீன இராணுவ வரலாற்றில் புதியதொரு பரிணாமத்தை வெளிக்காட்டியுள்ளது. இக் கட்டுரை நகர்வு பல்வேறு அரசியல் – இராணுவ – இராஜதந்திர நகர்வுகளை தூண்டிவிட்டுள்ளது.

புத்தாயிரம் ஆண்டு பிறந்த வேளையில் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் சிங்களத் தரைப்படைத் தளபதி லெப்.ஜெனரல் சிறீலால் வீரசூரிய தன் உயரதிகாரிகளைச் சந்தித்தார். வன்னியில் ஏற்பட்ட தோல்வியால் துவண்டுவிடாதீர்கள் எனவும் கடந்த காலத்தில் சுழலாமல் எதிர்காலத்திற்குள் செல்லுங்கள் எனவும் அவர் ஆலோசனை சொன்னார். வன்னியில் ஏற்பட்ட தோல்வி தற்காலிகமானது. இத்தகைய தோல்விகளை போரில் சந்திப்பது தவிர்க்க முடியாதது எனவும் சுய ஆறுதல் சொல்லிக் கொண்ட வீரசூரிய இராணுவப்பலம் மூலமே தீர்வு சாத்தியமாகும் என வீரமுழக்கம் செய்தார். (The Island 02.01.00)

சந்திரிகாவுக்கு நெருக்கமானவர் என கொழும்பு வட்டாரங்கள் கரு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தப்படும் வீரசூரிய சிங்களத்தின் தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டத்தை தெளிவாக அங்கு முன்வைத்தார். அவ் உரையின் தொடர்ச்சியாக இராணுவத்திற்கு பெரும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கான பரப்புரைகளை தூண்டிவிட்டன. சிங்கள நாடு பூரா வும் 144 ஆட்சேர்ப்பு மையங்கள் திறக்கப்பட்டன. வீடுவீடாகச் சென்று ஆட்சேர்ப்புப் பணியில் இராணுவம் ஈடுபடும் என வீரசூரிய மீண்டும் அறிவித்தார். போதிய சிங்களவர்கள் படையில் சேராவிடின் கட்டாய இராணுவப் பயிற்சிக்கான முடிவைக் கூட அரசு மேற்கொள்ளலாம் என அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஊகம் கூறினார் (The Hindu 29.01.00)

படையின் ஆட்பலத்தை கூட்டுவதற்கான முயற்சிகள் இடம்பெறும் வேளையில் கொழும்பில் சிறீலங்காவுக்கான ஆயுத விநியோகம் தொடர்பாக பல்வேறு அறிவிப்புக்கள் வெளியாகின. இஸ்ரேலிடம் இருந்து கடற்போர்க் கலங்களை கொள்வனவு செய்த அரசு அவற்றை இயக்குவதற்கான பயிற்சியினைப் பெற 150 கடற்படையினரை அங்கு அனுப்பி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. மறுபுறம் அமெரிக்காவுடனான சிங்களத்தின் இராணுவ உறவு அதிகரித்துவிட்டதாகவும் புலிகளின் பீரங்கிகள் மற்றும் எறிகணைகளை கண்டுபிடிக்கும் ராடர்களை 20 மில்லியன் டொலர்கள் செலவில் சிறீலங்கா கொள்வனவு செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டது.

போர் முனையில் நிலவும் ஒப்பீட்டளவிலான அமைதியை சிங்கள இராணுவத்திற்குக் கிடைத்த வெற்றி என சிறீலங்காவின் பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலகெல கொழும்பில் அறிவித்தார். ஆனையிறவில் தமது படைகள் புலிகளை தோற்கடித்துவிட்டதாக சிங்கள அரச ஏடான டெய்லி நியூஸ் அறிவித்தது. எவ்வாறு புலிகளின் ஓயாத அலைகளை முறியடித்தோம் என 54-ம் படைப்பிரிவின் முன்னைய தளபதி கொழும்பு ஏடுகளுக்கு செய்தி வழங்கி இராணுவம் பற்றிய பிரமிப்பான எண்ணங்களை ஏற்படுத்த முனைந்தார். இவ்வாறான பின்னணியில், சிங்கள இயந்திரம் ஓயாத அலைகளை எதிர்கொள்ளவும் தமிழீழம் மீதான ஆக்கிரமிப்பை தொடர்வதற்கான இறுதியான ஆயுதமாக இராணுவத்தையே தொடர்ந்தும் நம்பியுள்ளதை அவதானிக்கலாம். இராணுவத்தை சுற்றி எழுப்பப்பட்டுள்ள இன அழிப்புக் கோட்பாடுகளில் சிங்கள இயந்திரம் தொடர்ந்தும் இயங்குவதை துல்லியமாக இங்கு அறியமுடிகின்றது. ஆனால், இதன் சாத்தியத்



தன்மைகள் எவ்வாறு உள்ளன?

1995-ம் ஆண்டு புதிய உற்சாகத்துடனும் நவீனரக ஆயுத தளபாடங்களுடனும் தமிழர்களின் பெருநகர்களை தாக்கிக் கைப்பற்றும் போர்த் திட்டத்தை அமுல்படுத்தப் புறப்பட்ட சந்திரிகா அரசு இன்று யாழ்.குடாநாட்டினுள் பலமான போர்வியூகங்களுடன் உள் நுழைந்துள்ள. புலிகளின் தொடர்நகர்வுகளை எதிர்கொள்கின்றது. வன்னியில் ஏற்பட்ட பெரும் இராணுவக் கட்டுமான உடைப்பினால் குப்புற வீழ்ந்த எதிரி இன்று யாழ். குடாநாட்டில் தப்புவதற்கான தரைமார்க்கமாக இல்லாத மூன்று பெரும் படைப்பிரிவுகளின் நிலைகளை பாதுகாக்க வேண்டிய தேவையைக் கொண்டுள்ளனர்.

குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் நிரம்பிய பகுதிகளில் கால் பதித்து சிங்களத்தின் ஆக்கிரமிப்பு நிலைகளை புலிகள் ஊடறுத்து செல்வதால், ஆனையிறவு – இயக்கச்சி நிலைகளை பாதுகாத்தல் என்ற தேவை முழுச் சிங்களத்தினதும் பிரதான அச்சமாகிவிட்டது. புலிகளை அழிப்பதற்காக உலக நிபுணர்களால் பயிற்றுவிக்கப்பட்டு வன்னிக்கு அனுப்பப்பட்ட 53-வது படைப்பிரிவு 54-வது படைப்பிரிவுடன் இணைந்து ஆனையிறவு – இயக்கச்சி நிலைகளை பாதுகாத்தவாறு பலாலியுடனான தொடர்பை பேணும் பணியை இவ் 53-வது படைப்பிரிவு புரிகின்றது. இவ்விரு படைப்பிரிவுகளும் சுமார் 25000 துருப்புக்களாலும் நவீன டாங்கிகள், கவசவாகனங்கள் என்பனவற்றாலும் பீரங்கிகளாலும் பலப்படுத்தப்பட்டவை.

யாழ்.குடா ஆக்கிரமிப்பை பாதுகாக்கும் பணிக்காக பல உயரதிகாரிகளை அங்கு அனுப்பி வைத்துள்ள சந்திரிகா அரசு, குடாநாட்டில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள வான் தாக்குதல்கள் மூலம் யாழ். குடாநாட்டில் ஓயாத அலைகளின் பலத்தை ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், புலிகளின் நகர்வுகளை இடைநிறுத்துவதற்கான உத்தியாக மக்களை கவசங்களாக்கும் முயற்சியை இராணுவம் ஆரம்பித்தது. தமது பீரங்கி நிலைகளை மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அமைப்பதன் மூலம் புலிகளின் பதிலடித் தாக்குதல்களை தடுக்க முனைந்துள்ளமையை எதிர்த்து மக்கள் குரலெழுப்புகின்றார்கள். வடமராட்சிப் பகுதியில் இராணுவம் மக்கள் பயணம் செய்யும் வாகனங்களைப் பாவித்து புலிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கும் உத்திகளை பாவிப்பது பற்றி புலிகள் பகிரங்க



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சந்திரிகா அரசின் பெரும் படையெடுப்புக்கு திரையிட உருவாக்கப்பட்ட தீர்வுப் பொதி தற்போது மீள தூசு தட்டப்பட்டு ஓயாத அலைகளிற்கு தடுப்பிட பயன்படுத்தப்படுகின்றது. வெறும் அரசமைப்பு திருத்தம் மூலம் சிங்கள பேரினவாதத்தை இல்லாதொழிக்கலாம் என்ற பொய்யை மீண்டும் சந்திரிகா அரசு தூக்கிப்பிடித்துள்ளது.**

எச்சரிக்கையை அண்மையில் விடுத்திருந்தனர்.

இவ் ஆயத்தங்களை அவதானித்தவாறு புலிகளின் இராணுவ வியூகம் பல்வேறு திசையூடாக விஸ்தீரணமாகி வருவதை உலக ஆய்வாளர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர். அண்மையில் வன்னிக்குச் சென்று திரும்பிய கத்தோலிக்க பிதா தெரிவித்த கருத்துக்கள் பெரும் பரபரப்பை கொழும்பில் ஏற்படுத்தியது. வன்னியில் ஏற்பட்டு வரும் பெரும் அரசியல் – இராணுவ எழுச்சி பற்றி அவர் கூறினார். 2000 ஆண்டை போர் ஆண்டாக பிரகடனப்படுத்தி பெரும் போர்ப்பயிற்சிகளில் தமிழர்கள் ஈடுபட்டுள்ளனர் என அவர் கூறினார். (The Satuday Express 29.01.00)

போரின் தீவிரத்தை சற்றுக் குறைத்து அதனை தந்திரோபாய வழிநெறியூடாக நகர்த்தும் போக்கு இப்போது நிலவுவதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனையிறவுத் தளத்தின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு வடமராட்சி கிழக்கு ஊடான தரைப் பாதையும் தனங்கிளப்பு, கேரதீவு ஊடான பாதையும் புலிகளினால் திறக்கப்பட்டுள்ளது. மறுபுறம் ஆனையிறவுத் தளத்தின் தெற்கு – கிழக்கு அரண்களை கைப்பற்றியதன் மூலம் ஆனையிறவுத் தளத்தின் பெரும் தளத்தை நெருங்கியவாறு அமர்ந்துள்ளனர். இயக்கச்சிப் பகுதிகளில் இராணுவ நிலைகளை நெருங்கக் கூடிய தூரத்தில் புலிகள் நிலையெடுத்துள்ளதை சிங்களம் வெளியிடும் போர்ச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

இந் நிலையை உற்றுநோக்கும் ஆய்வாளர்கள் இரு விடயங்களை அவதானிக்கின்றனர்.

1. போரின் பிடி அல்லது முன்னெடுப்பதற்கான வாய்ப்பு இன்று எதுவித சந்தேகங்களுமின்றி புலிகளிடம் உள்ளது.

2. யாழ்.குடாநாட்டில் உள்ள சிங்கள நிலைகள் புலிகளின் ஒரு வலைவிரிப்புக்கு வெறுமனே பிரதிபலிக்கின்றன.

தற்போது பெறப்படும் அல்லது பெற உள்ளதாக அறிவிக்கப்படும் அமெரிக்க ஆயுத உதவிகள் போர்க்களத்தில் புலிகள் பெற்றுள்ள இராணுவ மேலாதிக்கத்தை உடைக்க உதவாது என இந்திய ஆய்வு ஒன்று கூறுகின்றது. சிங்கள ஆய்வாளரான தயான் ஜெயதிலக சிங்களத்திற்கு தேவையானது பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுத தளபாடங்களே எனக் கூறுகின்றார். அதற்கு ஏற்புடைய இராணுவ தளபாடங்கள் வாங்கப்பட வேண்டும் என அவர் கூறுகின்றார். இராணுவத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை பற்றி கருத்து வெளியிட்ட பௌத்த பீடாதிபதி வண.சோபித தேரர் 'தோல்விகளுக்கு ஒவ்வொரு காரணங்களைக் கொண்டு வருகின்றனர்' என விபரித்தார். அமெரிக்க அரசு தனது ஆயுத விநியோகம் தொடர்பாக விடுத்த செய்தியில் தமது அரசு அப்படியொன்றும் பிரமாதமான உதவிதகளைப் புரியவில்லை எனவும் தமது உலகளாவிய பயிற்சித் திட்டங்களின் அடிப்படையில் 20 — 60 அமெரிக்க இராணுவத்தினர் பங்கேற்கும் பொது பயிற்சியிலேயே ஈடுபட்டதாக கூறுகின்றனர். அவை போரிற்கு வெளியேயான செயற்பாடுகள் பற்றிய பயிற்சியென அமெரிக்கா விபரித்துள்ளது.

இவ்வாறான இராணுவ புறநிலையில் ஓயாத அலைகளின் வலிமையால் வலுப்பெற்ற அரசியல் இணக்

## மக்கள் குடியேற்றம்

ஓயாதஅலைகள் 3 நடவடிக்கையினால் விடுவிக்கப்பட்ட வன்னிப்பிராந்திய நகரற்களிலும், கிராமங்களிலும் மக்கள் மீள குடியிருக்க ஆரம்பித்துள்ளனர். பல்லாயிரம் மக்கள் ஜெயசுக்குறுய், ரணகோச மற்றும் பிற இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர், மாங்குளம், ஒலுமடு, கரிபட்டமுறிப்பு உட்பட பல பிரதேச மக்கள் மீள குடியிருக்க ஆரம்பித்துள்ளனர். முரசுமோட்டை, ஊரியான மற்றும் பரந்தன் கிழக்குப் பகுதியில் மக்களின் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன, இது தொடர்பான ஆலோசைனக் கூட்டம் நெடுங்கேணியில் இடம்பெற்றது. தைப்பொங்கள் முதல் மக்களின் மீள குடியமர்த்தல் நடவடிக்கையில் துடிப்பு ஏற்பட்டுள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப்பாடு பற்றிய விடயம் முன்னணிக்கு வந்துள்ளது. சந்திரிகா அரசின் பெரும் படையெடுப்புக்கு திரையிட உருவாக்கப்பட்ட தீர்வுப் பொதி தற்போது மீள தூசு தட்டப்பட்டு ஓயாத அலைகளிற்கு தடுப்பிட பயன் படுத்தப்படுகின்றது. வெறும் அரசமைப்பு திருத்தம் மூலம் சிங்கள பேரினவாதத்தை இல்லாதொழிக்கலாம் என்ற பொய்யை மீண்டும் சந்திரிகா அரசு தூக்கிப்பிடித்துள்ளது. கடந்த காலங்களில் இப் பொதிக்கு எதிர்ப்பு தெரிவித்த ரணில் விக்கிரமசிங்கவின் மேல் இனச்சிக்கல் தொடர்வதற்கான காரணம் எனப் பழியைப் போட்ட சந்திரிகா அரசு, ரணில் விக்கிரமசிங்க பொதிக்கு ஆதரவு தரத் தயார் என அறிவித்தமையால் பொதியை சிறிது காலத்திற்கான விவாதப் பொருள் ஆக்கியுள்ளது.


அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவதன் மூலம் இனச்சிக்கலை தீர்க்கலாம் என்பது விஞ்ஞானபூர்வமற்ற செயற்பாடு. இரு தேசியங்களின் ஆழமான சரித்திர பிளவை ஆராயாது வெறுமனே ஓயாத அலைகளின் பலத்தினால் இணக்கத்திற்கு ஒப்புக்கொள்ள முற்படும் (?) அரசும் இனவாத இயந்திரமும் தற்காலிக ஓய்வுக்குப் பின் இன அடக்குமுறையை தொடர்வர். இங்கே அரசமைப்பு என்பது சிங்கள பௌத்த ஆட்சி பீடத்தின் சட்டமாகும்.

பெரும் இன அழிப்பு இடம்பெறும் புறச்சூழ்நிலைகளில் புலிகள் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நோர்வே போன்ற நாடுகளின் தலையீடு கூட புலிகளின் இக் கோரிக்கையின் நியாயங்களை ஏற்றுக்கொள்ளும் கடந்த காலங்களில் பல சிங்கள தலைமைகள் இருந்த போதும் பேச்சுக்களின் போது தமது இராணுவச் சூழ்நிலைகளை பாதுகாத்தவாறே சிங்களம் பேச முயன்றது. இராணுவ விடயங்களை புலிகள் இணக்க மேடையில் கொண்டு வந்த வேளைகளில் பேச்சுக்கள் முறிந்து போயின.

இன்னிலையில் புதிதாக எழுந்துள்ள அரசியல் – இராஜதந்திர சூழ்நிலைகளானது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் கடந்த மாவீரர் உரையில் கோடிட்டுக்காட்டியஇணக்கப்பாட்டுக்கான தேவைகளை உள்வாங்கியதாக இருக்க வேண்டும் மாறாக, சிங்களத்தின் தேவைகளுக்கு ஏற்புடையதொரு பேச்சுவார்த்தைக்கு புலிகள் உடன்பட வேண்டிய அவசியம் நிலவவில்லை.

இவ்வாறான மாற்றங்களின் ஊடு ஓயாத அலைகள் 3 நகர்ந்து வருகின்றது. இதுவரை இந் நடவடிக்கை சாதித்த அல்லது ஏற்படுத்திய மாற்றங்கள் ஒருபுறமும் ஏற்படுத்த உள்ள தாக்கங்களும் மாற்றங்களும் மறுபுறம்மும் தமிழீழ சிங்கள தேசிய உறவுகளை வடிவமைத்து வருகின்றன. போரின் பிடியை தமது கைகளில் வைத்துள்ள புலிகளே இவ் வரலாற்றின்நாயகர்கள் ஆவார்.

## கேணல் கிட்டு அவர்களின் 7ம் ஆண்டு நினைவலைகள்




**சங்கமும் சோழமும்**
**சொல்லிய வீரம்**
**வஙகக் கடலில்**
**வரலாறானது**
**தினை என நினைத்து**
**பனை என நின்ற**
**பெரும்பகை முன்னே**
**வலையினை தகர்த்து**
**மலையினை நிகர்த்தீர்கள்.**

-களமுனைப் போராளி-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிகிச்சையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் அவர் இருந்த வீட்டுக்குள் சொறி பிடித்த நாய் நுழைந்து கொண்டது. கிட்டண்ணாவுடன் உதவிக்கு நின்ற போராளிகள் அவர் பேசிவிடுவார் என்று நினைத்து அந்த நாயைத் துரத்த முயன்றுகொண்டிருந்த வேளையில், அதனை அவர் கண்டுகொண்டார். உடனே அந்த நாயை கூட்டிவரச் சொன்னார். குளிப்பாட்டினார். அதன் உடல் மீது காணப்பட்ட புண்களுக்கு மருந்திட்டு சிகிச்சை அளித்தார். விரைவில் புண்கள் மாறி அது நன்கு குணமடைந்தது. அன்றிலிருந்து அது கிட்டண்ணாவின் உற்ற நண்பனாகி விட்டது. கிட்டண்ணா உணவருந்தும் போதுதான் அது உணவருந்தும். எவ்வளவு நேரமாக இருந்தாலும் சரி அவருக்காக அது காத்திருக்கும். இவ்வாறாக அவர்களின் உறவுகள் வளர்ந்து கொண்டே சென்றது இருவரும் நல்ல நண்பர்களாயிருந்தனர். காலங்கள் கழிந்தன. 1988 புரட்டாதி நடுப்பகுதியில் இந்திய காவல்த்துறையினரால் கிட்டண்ணா கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இப்படியான துரதிஸ்டமான நிகழ்வினை அது நினைத்துக் கூட பார்த்திருக்காது. அவரின் பிரிவுத் துயரை தாங்க முடியாமல் சோகத்துடன் அங்குமிங்கும் ஓடித்திரிந்து அவரைத் தேடியது. உணவு உண்ண மறந்தது. அவர் இருக்கும் இடத்தினை மோர்ந்து மோர்ந்து பார்த்து சோகத்துடன் ஒரு மூலையில் ஒதுங்கி அவ்விடத்திலேயே இறந்து போனது. சேதி அறிந்த கிட்டண்ணா மிகவும் வேதனையடைந்தார். பிற்காலத்தில் அவர் மேற்குலகில் வாழ்ந்த காலத்தில் அழகான விதம்விதமான நாய்களை காணும் போதெல்லாம் அந்த நாயின் முகம் அவரின் மனக்கண்ணில் தோன்றி அவரின் இதயத்தை ஈர

# அன்பின் வடிவமாய்...

புரட்சிக்காரன் என்றால் உலகம் அவனை கடினமானவனாகவே எண்ணுகின்றது, ஆனால் அவன் மனிதனுக்குள் மென்மையானவன், சாதுவானவன், அதனால்தான் அவன் சமூகத்தில் நடக்கும் அநீதிகளை தாங்க முடியாதவனாக போராடப் புறப்படுகின்றான்... கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் வீரகாவியமாகிய பதினான்கு தோழர்களின் நினைவைத் தாங்கிய 'விடிவிற்கு முந்திய மரணங்கள்' நாவலுக்கு கிட்டண்ணா எழுதிய முன்னுரையின் தொடக்க வரிகள் இவை. கிட்டண்ணா தன்னுள் கொண்டுள்ள போர் ஆற்றல் உலகம் அறிந்த ஒன்றே. ஆனால் அதையும் தாண்டி அவர் இதயத்தை அலங்கரித்த ஆன்மீக ஈடுபாடு, எவரையும் அன்பு செய்யும் பண்பு, மக்கள் துயர்கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்கும் அவரது மனது, இதற்கும் மேலாக வாய்பேசாப் பிராணிகளிடம் அவர் காட்டிய அன்பு எல்லோராலும் புரிந்து கொள்ளமுடியாதது. போராட்டப் பாதையில் தனது இதயத்தின் பாதியை கடினமாக்கிக்கொண்ட போதிலும் மீதியை அவர் ஈரமாக்கியே கொண்டார் இயற்கையாகவே இரக்க சுபாவம் கொண்டவராகவே விளங்கினார். 1987ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி எதிர்பாராத விதமாக நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் தன் ஒரு காலினை இழந்தது அறிந்ததே. இதன் பிற்பாடு இந்தியா சென்று



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாக்கும். இவை மட்டுமல்ல 1983ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்திய அரசு வழங்கிய இராணுவப் பயிற்சிக்காக சென்ற போராளிகளுக்கு இரண்டாவது பொறுப்பாளராக கிட்டண்ணா சென்றிருந்தார். அவர் காட்டிய அசாதாரண திறமை அதிகாரியை வியக்கவைத்தது. அதிலிருந்து அந்த அதிகாரி கிட்டண்ணாவை கவர்ந்துவிட்டார். அதிலிருந்து அவர்களின் அன்பு மலரத்தொடங்கியது. பயிற்சியும் நிறைவு பெற்றது. அங்கிருந்து அனைவரும் வெளியேறுவதற்கு தயாராகிக்கொண்டிருந்தனர். எதையும் எதிர்பார்க்காத அன்பினை விதைக்கும் கிட்டண்ணாவின் உள்ளமோ சோகத்தில் மூழ்கிப்போயிருந்தது. பிரிவுத்துயரை தாங்க முடியாமல் தேம்பித் தேம்பி விம்மத் தொடங்கியதையும் அந்த அதிகாரியும் கண்ணீர்மல்கிக்கொண்டு மெல்ல விடை கொடுத்ததையும் அவருடன் கூடச் சென்ற தோழர்கள் நினைவு கூருவார்கள். போராட்ட வாழ்வில் மட்டுமல்ல இயற்கையாகவே தனது மனதை அன்பினால் நிரப்பி தூய்மையை போற்றி வாழ்ந்தவர். ஏழை மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டிருந்தார். அவர்களின் வாழ்வு வளம்பெறவேண்டும் என்பதற்காக அயராது பணியாற்றினார். பின்னைய காலங்களில் போராட்டப்பணி தமிழீழத்திலிருந்து வெகு தூரத்திற்கு அவரைப் பிரித்திருந்தாலும் சிந்தனைகளில், செயல்களில் ஏன் அவர் வரைந்த ஓவியங்களில் கூட தமிழீழம், மக்கள், அவர்களின் வளமான வாழ்வு என்பதையே காட்டிநின்றது. ஆன்மீகத்தில் அவர் கொண்டிருந்த அதிக ஈடுபாடு புரட்சிக்கும் ஆன்மீகத்துக்கும் உள்ள தொடர்பினையும், ஒற்றுமையையும் தெளிவுபடுத்தக்கூடிய வகையில் அவரை உயர்த்தியிருந்தது. தனது துணைவிக்கு எழுதிய கடிதக் குறிப்பொன்றில்...



விறகு கொத்தும் கந்தனும்
கள் வடிக்கும் பூதனும்
கோவணத்துடன் தோட்டம்
கொத்தும் ராமையாவும்
கரைவலை இழுக்கும் கோபுவும்

தனது வாழ்நாளிலும் சரி வயது போன காலத்திலும் சரி மற்றவர்களில் தங்கி வாழ்ந்ததையும், பிச்சையெடுத்துச் சேர்த்ததையும் பார்த்திருக்கிறேன். இவர்களின் வாழ்வு வளம் பெறவேண்டும். இதைத்தான் ஆன்மீகமும் சொல்லுகின்றது, புரட்சியும் சொல்லுகின்றது. ஆன்மீகம் போதிக்கின்றது. புரட்சி வழிகாட்டுகின்றது ஆன்மீகமும் புரட்சியும் வேறல்ல. இரண்டும் ஒன்றுதான் என மனதின் வெளிப்பாட்டை அதில் வரைந்திருந்தார். மக்கள் படும் துன்பங்களில் பங்கெடுத்து அவர்களுக்கு ஒரு அமைதியை ஏற்படுத்தி வளமான வாழ்வை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு அவரது சமாதானப் பயணம் ஆரம்பமாகியது. அவரின் தற்காலிக பிரிவுத்துயரை இந்தியாவில் பிறந்த இராணுவ அதிகாரியால் மட்டுமல்ல அங்கு பிறந்த அந்த நாயினால் கூட தாங்கிக்கொள்ள முடியாது போனது. ஆனால் இந்திய வல்லாதிக்கமோ அவரையும் அவரது தோழர்களையும் இவ்வுலகிலிருந்து நிரந்தரமாகவே பிரித்துக்கொண்டது. இந்திய வல்லாதிக்கம்பலிகொண்டது ஒரு புரட்சி வீரரை மட்டுமல்ல, ஒரு ஆன்மீகவாதியை. இதற்கும் மேலாக எல்லாமே உருவாகிய அன்பின் வடிவத்தையுமே பலிகொண்டது. மாற்றானிடம் சரணாகதியடையாமல் தானும் தன் தோழர்களுடனும் கப்பலைத் தகர்த்து வீரகாவியமாகிய இந் நினைவு நாளில் அவர்களின் நினைவுகளுடன் ஆயுதங்களை இறுகப் பற்றிக்கொள்வோம்.

அருணா(போராளி)







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தர்மத்தின் வாழ்வு

இன்னும் இழக்கப்படாமல் இருக்கும் என் தர்மத்தின் நம்பிக்கையில் இந்தத் துப்பாக்கியுடனான என் உறவின் வாழ்வு நீள்கிறது.

துப்பாக்கிக்கும் எனக்கும் உள்ள உறவின் விரிசலுக்காய் எத்தனை நிகழ்வுகள் எத்தனை நினைவுகள் என்னை நிர்ப்பந்திக்கின்றன. இதை தூக்கியெறிந்துவிட்டு என்பாட்டிற்கு நடக்காமல் இதனுடனான என் உறவை வைத்திருக்க எத்தனை வலிமை எனக்குத் தேவைப்படுகிறது.

நினைவுகள் அலைக்கழிக்கும் என் மனதை ஒரு நிஜத்திற்காய் நிலைநிறுத்த ஒவ்வொரு விடியலிலும் எத்தனை தாக்கங்கள் எனக்குச் சாதகமாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. என்னை எனக்கே நிறுவிக்கொள்ள வேண்டியிருக்கிறது.


எனக்கும் இந்தத் துப்பாக்கிக்கும் என்ன உறவு? ஏதுமில்லை. எல்லாம் ஏற்படுத்திக்கொண்டதுதான். சூழலின் நிர்ப்பந்தம்; என் வாழ்வின் நிர்ப்பந்தம்; இதை ஏற்காவிட்டால் எங்களில் எவரும் தன் அடையாளத்துடன் வாழமுடிகிறதா? இல்லை. அந்த இல்லை என்ற உண்மையின் நிர்ப்பந்தம் தான் எனக்கும் என் துப்பாக்கிக்கும் உறவை ஏற்படுத்தியது.

எவரும் ஏற்படுத்திக்கொள்ளாமல் ஏற்பட்ட உறவு இருக்கிறது; வாழ்வின் நியதியாக அதுதான், என்னைப் பெற்றவர்களின் உறவு; என்னுடன் பிறந்தவர்களின் உறவு; நான் நினைக்காமல் என் நினைவுகளில் பிரவாகமெடுக்கும் உறவு. அந்த உறவின் பிரிவையும், பிரிவில் உறவையும் எப்படி விளங்கிக்கொள்ள முடியும் ஒரு விடுதலைப் போராளியாகாமல்.

விடுதலைப் போராளி. இந்தச் சொல்லிற்குள்தான் எத்தனை அர்த்தம். இதன் அர்த்த பரிமாணம் சொல்லிற்குள் சிக்கிவிடக்கூடியதா?

ஒருவேளை இது சாதாரணமாக இருக்கக்கூடும்; விடுதலைப் போராளியாக தம்மை கற்பனை செய்து காண்போருக்கு.

கபோதியின் உணர்வுகளை தன் கண்களை மூடி அர்த்தப்படுத்திக்கொள்ளும் இவர்களும் இருந்துவிடக்கூடும். ஒருவேளை நானும் அப்போது அப்படித்தான் இருந்தேனோ என்னவோ. பிரிவில், பெற்றவரின் உணர்வை



விளங்கிக்கொள்ள பிள்ளையால் முடிவதில்லை. பிள்ளையின் உணர்வை பெற்றவர்களால் விளங்கிக்கொள்ள முடிவதில்லை. சுயம்தான் நினைவை அசைக்கிறது.

அப்படியிருக்க, இரண்டிற்கும் அப்பால் இருப்பவர்களால் எப்படி முடியும்? அவர்களின் எண்ணங்களை அவர்களின் சுயம்தான் அசைக்கக்கூடும்.

இதன் பிரிவென்ன சாதாரணமானதா? மரணத்தின் எதிர்பார்ப்பிற்கும், உறவிற்கும் உள்ள பிரிவல்லவா இதன் பிரிவு.

பாசத்தின் நினைவுகள் இதயத்தை வலிக்கிறது. இருக்கின்ற திடத்தையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி விடுதலைப் போராளியாய் இருப்பதற்கு செலவிடுகிறேன்.

எனக்குள் வசப்பட்ட தாக்கங்களால் என்னை நானே நிறுவிக்கொள்கிறேன். என் உணர்வுகள் என்னை இழுத்துச் செல்லாமல் நாளுக்கு நாள் என் நிறுவல்களை வலுப்படுத்திக்கொள்கிறேன்.

என் தாக்கங்கள் ஒவ்வொரு வேளையும் என் உணர்வுகளை வெல்லவேண்டும். இல்லாவிட்டால் நானும் என்னால் அருவருக்கப்படும் 'ஒட்டுண்ணி மனிதர்கள்' போல அவர்கள்தான் மற்றவர்களின் சுகங்களை உறிஞ்சிவாழும் மனிதர்களைப் போல



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகிவிடக்கூடும்.

அது வேண்டாம். அந்த தூஷணை மனிதனாய் நான் இருக்கவே வேண்டாம்.

'நான் ஆழமறிய முடியாத ஒரு அர்த்த புருஷன்' என்ற என் நினைப்பே எனக்கு அலாதி சுகம் தருகிறது. மற்றவர்கள் அப்படி நினைக்கிறார்களோ இல்லையோ என் நினைப்பே எனக்குத் திருப்தியைத் தருகிறது. இது போதாதா எனக்கு.

என்னைப்போல எத்தனை மனிதர்கள் இப்படித் தன்னுடன் தானே போராடி ஒரு தேசத்தின் இருளை விடியலை நோக்கி இழுத்துச் செல்கிறார்கள். நிச்சயமான விடியலுக்காக இருளை அதன் எல்லைவரை அசைப்பதற்கு இழப்புக்கள் தவிர்க்கமுடியாததே. இழக்கப்படாமல் அடையப்பெற்றது ஏது? அப்படி ஏதும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.

இருளில் உழல்வதைவிட விடியலை நோக்கி இருளை அசைப்பது மேல். அதில் என்னை நானே இழக்க நேர்ந்தால், அது விடியல்வரை இழப்புக்களை உறிஞ்சி வாழ்வதைவிட மேல். எப்படியோ நான் மேலானவன் என்ற தர்க்கம் என்னை இயக்குகிறது. என் தர்மம் இதுதான்.

என் வாழ்வின் ஆயிரம் நினைவுகள் என்னை அலைக்கழிக்கக்கூடும். ஆயினும், ஆதாரமான நியாயம் ஒன்று இருக்கிறதே அடிப்படைத் தர்மம் இருக்கிறதே அது என்னை இயக்கும்.



ஏதோ ஒரு நாளின் ஏதோ ஒரு செய்தி கூட எப்படிப் போராளியின் இதயத்தை வலிக்கிறது.

'பாதை மூடிப் பல நாள் ஆகிவிட்டதாம். பாதை திறப்பு சரிவரப் போவதில்லையாம். அதனால் ஊரில் பஞ்சமாம்' இதெல்லாம் செய்திதான்; மற்றவர்களுக்கு.

போராளிக்கு இது செய்தியாக இருப்பதில்லை. இது ஒரு காட்சிப் பிரவாகமாக இருக்கும். செய்திகளை மனம் காட்சிகளாக்கும். பசித்திருக்கும் என் தம்பி, தங்கையின் முகம், எதையாவது கொடுத்துவிடத் துடிக்கும் தாயின் முகம்,


## — எழில் —

இயலாமையில் அலையும் என் தந்தையின் முகம், இருள் வெளிச்சத்திற்கு ஏதுமிடமில்லாத இருள் அவர்கள் என்ன செய்யக்கூடும்? அவர்களால் என்ன செய்ய முடியும்?

கேள்விகள், கேள்விகள். உணர்வுகள் கேள்விகளாய் பிரவாகம் கொள்ளும். கேள்விகள் உணர்வுகளை உலுப்பும்.

அவர்கள் வாழ்வார்கள் என்று நம்ப ஆசைப்படுவேன். என் மனதை அப்படி நம்ப வேண்டுமென வற்புறுத்துவேன். இருந்தாலும் இறுதியில் என்னிடம் நானே தோற்று, என் கேள்விகளே என்னைத் தோற்கடித்து அந்தரத்தில் கைவிட்டு விடும் கடமைகளில் மூழ்கி நினைவுகளைக் கலைத்துவிட முயல்வேன்; கரைத்தும் விடுவேன். ஆனாலும் முடிந்துவிடுமா?

ஆறுதலான ஒரு அவகாசம் பார்த்து மீண்டும் மேலெழும் உணர்வுகள், ஒரு விடுதலைப் போராளி நான் என்ற தர்மத்திற்காக ஆயிரம் தியாகங்களை அடுக்கிக் கொண்டே போவேன். ஆயிரம் தர்க்கங்களால் நிறுவி என்னை



விடுதலைப் போராளியாய் நிலைநிறுத்திக்கொள்வேன்.

இப்படித்தான், இப்படித்தான் ஒவ்வொரு வேளையும் ஒரு விடுதலைப் போராளி தன்னை நிலைநிறுத்த உணர்வுகளைப் பிழிகின்றான். இதை யார் அறியக்கூடும்?!

ஒவ்வொரு வேளையும் எத்தனை செய்திகள், எத்தனை நினைவுகள் ஒரு போராளியை சோதிக்கக் கூடும். யாராலும் உணரமுடிகிறதா?

அத்தனையையும் ஒவ்வொரு வேளையும் தாண்ட அவன் தன்னுடன் தானே போராட வேண்டியிருக்கின்றதே. இதை உணர முடிகிறதா யாராலும்?

இதனால்தானோ என்னவோ எனக்குள் என்னைப் பற்றிய பெருமை; நான் மேலானவன் என்பதில்.

இது கூடச் சிலவேளை என்னை நான் நிலைநிறுத்த தேவையான நியாயமாக இருக்கக்கூடுமோ? இருக்கலாம்! ஆனாலும் கூட நான் கீழானவன் இல்லையே. அதுபோதும் எனக்கு.

ஒரு தேசத்தின் இருளை விடியலை நோக்கி அசைக்கும் ஆயிரமாயிரம் பேருடனான என் பயணம் ஒரு நாள் இலக்கை அடையும். இருள் என்பதே அர்த்தமிழந்து எங்கும் ஒளிப்பிரவாகம் நிறையும். இருளைச் சுமந்த மக்கள் ஒளிதெறிக்க எங்கும் உலாவருவர். இந்த மண்ணின் பிறப்பு ஒவ்வொன்றும் வாழ்வின் அர்த்தத்தைக் காணும். அப்போது நான் உயிருடன் இருந்துவிடக்கூடுமா? இல்லை! அதற்காய் இன்றே என்னுயிர் வீழ்ந்துவிடக்கூடுமா!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழின வதைப்பில் மும்மூர்த்திகள்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஒரே வகை அரசியல் கொள்கையைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை. இதை எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க குடும்ப வரலாறும், அதில் உதித்த கணவர் பண்டாரநாயக்க, மனைவி சிறிமாவோ, மகள் சந்திரிகா ஆகியோர் தமிழினம் சம்பந்தமாக நடைமுறைப்படுத்தும் அழிப்புத்திட்டங்களும் உறுதிப்படுத்துகின்றன.

சிங்களவர் பெற்ற சுதந்திரம் 1947ல் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பெரி அரசியல் யாப்பு. 1947இன் இலங்கை சுதந்திரச் சட்டம், 1947இன் இலங்கை சுதந்திர விரிவாக்கச்சட்டம் என்பன ஊடாகக் கிடைத்தது. தனி சிங்களச் சட்டம் 1956 இல் நிறைவேற்றப்பட்டாலும் அதற்குப் பல தசாப்தங்களுக்கு முன்பாகவே தனிச் சிங்களத்தின் சாயல் தோன்றிவிட்டது. 1936 ஆம் ஆண்டுத் தேர்தலின்பின் அமைக்கப்பட்ட மந்திரிசபை தனிச் சிங்கள மந்திரிசபையாக அமைக்கப்பட்டது.

1937இல் சிங்களப் பேரினவாதத்தின் தந்தையாகக் கருதப்படும் பண்டாரநாயக்க சிங்கள மகாசபை என்ற சிங்கள பௌத்த அமைப்பை உருவாக்கினார். அவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் படித்துத்தேறி பின் நாடு திரும்பியதற்கு அத்தாட்சியாக இந்த அமைப்பை உருவாக்கி தன்னை இனங்காட்டினார். 'இசிஸ்' எனப்படும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மாணவர் சஞ்சிகையில் அவர் எழுதிய இலங்கை பற்றிய கட்டுரையில் இத்தீவு சிங்களவர்களின் உடமை என்பதை வலியுறுத்தினார்.

**1955 இல் தனிச் சிங்களமே எனது வழியென்று பண்டாரநாயக்க தெரிவித்தார். பாதிக்கப்பட்ட தமிழர்கள் பற்றி யாரும் கவலைப்படவில்லை. தங்களுடைய அரசியல் வெற்றிதான் அவர்களுக்கு முக்கிய மாகப்பட்டது. இன்றும் அதே நிலை தொடர்கின்றது.**

1947ல் இலங்கையில் நடந்தேறிய பொதுத் தேர்தலில் இலங்கையின் முதற் பிரதமராக டி.எஸ். சேனநாயக்க தெரிவு செய்யப்பட்டார். எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்க மாதிரி இவர் இனவாதத்தை வெளிப்படையாக காட்டாவிட்டாலும் இவருடைய செயற்பாடுகள் அதே பாணியில் இருந்தன. 1949 இல் இலங்கை குடியுரிமை சட்டத்தை நிறைவேற்றி மலையகத் தமிழர்களின் பிரசா உரிமையைப் பறித்தார். இது எம்மைப் பாதிக்காது என்ற நம்பிக்கையில் சேனநாயக்கவே சரணம் என்று வாழ்ந்த தமிழ் தலைவர்கள் எதிர்வரும் ஆபத்துக்களை உணரத்தவறினர்.

தமிழர் நிலப்பறிப்பையும் சிங்கள குடியேற்றத்தையும் டி.எஸ்.சேனநாயக்க ஆரம்பித்து வைத்தார். இன்று தமிழர்களின் மூலாதாரத்தை களையெடுக்கும் குடியேற்றத் திட்டங்களுக்கு முன்னோடியான கல்லோயா திட்டம் இவருடைய கைங்காரியமாகும். மிகவும் அமைதியான முறையில் இவர் தமிழ்த் தலைவர்களின் ஒத்துழைப்புடன் கருமமாற்றினார். கொழும்பு வாழ் இன்றைய தமிழ் குழுக்களைப் போன்று கண் இருந்தும் குருடர்களாக அவர்கள் தமது சொந்த நலனே குறியாகச் செயற்பட்டனர்.

தமிழர்களின் சிறுபராயத்தவர் மீது திணிக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் சேனநாயக்காவை 'தேசபிதா' என்று வர்ணிப்பதை எந்தவகையிலும் எம்மால் நியாயப்படுத்த முடியாது. பண்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டாரநாயக்கவும் 'இலங்கைத் தேசியத்தின் தந்தை' என்று வர்ணிக்கப்படுவது வழமை. உண்மையில் அவர் சிங்களத் தேசியத்தின் தந்தை என்று குறிப்பிடுவதே மிகப் பொருத்தம்.

1948இல் பதவியேற்ற டி.எஸ் சேனநாயக்க அமைச்சரவையில் அதியுயர் பதவியைப்பெற்ற பண்டாரநாயக்க பிரதமர் சேனநாயக்கவின் எதிர்கால வாரிசாகப் பரவலாகக் கருதப்பட்டார். ஆனால் சிறீலங்காவின் சாபக்கேடான குடும்ப அரசியல் அவருக்குத் தடையாக நின்றது. 1952இல் சேனநாயக்க இறந்தார். அவருடைய மகன் டட்லி சேனநாயக்க, இதுவரை காலமும் விவசாய அமைச்சராகப் பதவிவகித்தவர் திடீர் பிரதமராக மாறினார்.

ஏற்கனவே காற்று எந்தப்பக்கம் வீசுகின்றது என்பதை அனுமானித்த பண்டாரநயக்க டி.எஸ் உயிரோடு இருக்கும்போது தனது அமைச்சர் பதவியையும், ஐ.தே.க.கட்சி அங்கத்துவத்தையும் உதறித்தள்ளினார். சிங்களவர்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த கட்சியென வர்ணிக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் போட்டியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்ற அமைப்பை வெளியேறிய அதே வருடமான 1951 இல் உருவாக்கினார். வேடிக்கை என்னவென்றால் புதிய கட்சி உருவாக்கத்திற்கு உற்சாகமும், கடனுதவியும் புரிந்தவர்கள் தமிழ் தலைகள் என்பது தான்.

1953 இல் உட்கட்சிப் பூசல் காரணமாக டட்லிசேனநாயக்க பதவி விலகினார். அமைச்சர் சேர். ஜோன் கொத்தலாவல பிரதமரானார். இவர் முதல் வேலையாக மீன்பிடி மற்றும் தொழிற்துறை அமைச்சராகப் பதவி வகித்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைப் பதவி நீக்கம் செய்தார். 1954 இல் அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வந்து சிங்களம் — தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப் போவதாக கொத்தலவல தெரிவித்தார்.

இதற்குப் போட்டியாக 1955 இல் தனிச் சிங்களமே எனது வழியென்று பண்டாரநாயக்க தெரிவித்தார். பாதிக்கப்பட்ட தமிழர்கள் பற்றி யாரும் கவலைப்படவில்லை. தங்களுடைய அரசியல் வெற்றிதான் அவர்களுக்கு முக்கியமாகப்பட்டது. இன்றும் அதே நிலை தொடர்கின்றது. தமிழர்களைக் கேளாமல் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு செய்ய போகிறார்களாம். அதிகாரப் பகிர்வை தமிழர் மறுக்காமல் ஏற்கச்செய்ய இராணுவ நடவடிக்கை எடுக்கிறார்களாம்.



வரலாறு நகரும் பாதையை நோக்குங்கள். 1954 இல் சம அந்தஸ்து பற்றிப் பேசிய ஐ.தே.க. தலைமைப் பீடம் 1956 — இல் மாநாடு கூட்டித் தனது கொள்கையும் தனிச்சிங்களமே என்று பிரகடனம் செய்தது. ஆனால் சிங்கள மக்கள் பண்டாவுக்கே ஆதரவு அளித்தனர். ஏனென்றால் தனிச்சிங்கள சட்டம் அதன் அமுலாக்கம் என்பவற்றை 24 மணி நேரத்தில் நடத்திக் காட்டுவதாக அவர் பிரச்சாரம் செய்தார்.



சுதந்திரபுரம் படுகொலையில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பச்சிளம் சிறார்கள்.

அத்தோடு விட்டாரா பண்டாரநாயக்க! உயர் மட்டத்தினருக்கு மாத்திரம் ஏகபோகமாக இருந்த அரசியலை பாமர மக்கள் வரையில் செறிவாக்கப் போவதாக மேடைகளில் முழங்கினார். இதற்கு அவர் 'அப்பே ஆண்டுவ' எங்கள் ஆட்சி என்று பெயரிட்டார். பண்டாரநாயக்க பழம் பெரும் நிலப்பிரபு. சொந்த வாழ்வில் மேற்குநாகரிகத்தில் ஊறியவர். இருப்பினும் அரசியல் மேடையில் தேசிய உடையில் தோன்றுவார். அக்காலத்தில் ஆங்கில பாணியில் உடையணிந்து மேடையில் தோன்றுவதே வழமை.

1956இல் பிரதமர் பதவியை பொதுத் தேர்தல் மூலம் கைப்பற்றிய பண்டாரநாயக்க தனிச் சிங்கள சட்டத்தை நிறைவேற்றினார். அந்தளவில் நின்றால் பரவாயில்லை. சிறீலங்காவில் நடந்த முதலாவது இனக்கலவரத்தை நடத்திக் காண்பித்தார். கல்லோயா வாழ் தமிழர்கள் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்ட செய்தி கேட்டதும் வாய்விட்டுச் சிரித்தார். அவருக்கு தேர்தல் நிதி வழங்கிய தமிழ் வர்த்தகர்கள் அவரிடம் நேரடியாக தமிழர் மீதான தாக்குதலை நிறுத்தும்படி கோரியபோது 'நீங்கள் இதுவரையில் திரட்டிய செல்வம் போதும்' இனி நீங்கள் வெளியேறலாம்' என்றார்.

1957இல் பண்டா— செல்வா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அதே வருடமே அதை ஒருதலைப்பட்ச



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**சந்திரிகா மிகக் கொடூரமானவர் என்பதில் ஐயம் இல்லை. ஏமாற்று வித்தை, கூசாமல் பொய் உரைப்பது, தமிழர் தேசியத்தை வேருடன் சாய்ப்பது என்பவற்றில் மிகத் தீவிரமாக ஈடுபடுபவர். மேற்குலகில் நடைமுறை எதிர்பார்ப்புகளை புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப நடிப்பவா**

மாக கிழித்தார். இதற்குப் பொருத்த மான ஒரு வாசகம் ஜேர்மன் சர்வாதி காரி அடொல்ப் ஹிட்லர் எழுதிய நூலில் காணப்படுகின்றது.

'நான் ஒப்பந்தங்களில் கைகூசா மல் ஒப்பிமிடுவேன். வாக்குறுதிகளை தயங்காமல் வழங்குவேன். அவற்றை மீளப்பெறும் நிராகரிக்கும் நேரம் எனது கணிப்பில் இருக்கும்.' ஒரு தாரகமந்திரம் போன்ற இந்த வாக்கியம் சிங்களத் தலைமைக்கு மிகப் பொருத்தம்.




1959இல் பண்டார நாயக்க படு கொலையுடன் ஒரு சகாப்தம் முடிவுக்கு வந்தது. ஆனால் அவருடைய எச் சங்களான அவரு டைய மனைவியும் நெடுங் காலத்தின் பின் அவருடைய மகளும் கணவன் தந்தை வழியில் தமிழர் களைக் கருவறுக்கும் கொள்கையை நடைமுறைப்படுத்தினர். தமிழர் நிலப் பறிப்பு சிறீமாவோ பண்டாரநாயக்க பிரதமர் பதவிவகித்த காலத்தில் உச்சகட்டம் அடைந்தது. திருகோண மலை மாவட்டத்தில் இராணுவ உதவியுடன் சிங்களவர் மாத்திரம் வாழும் தேர்தல்தொகுதி தமிழர் நிலத்தில் உருவாக்கப்பட்டது. திரு கோணமலை நகரம் சிங்களவர் மயமாக்கப்பட்டது.

தமிழர்களின் எழுச்சியை வடக்கு — கிழக்கு பிராந்தியத்தில் நசுக்குவ தற்கு முழு அள வில் இராணுவத் தைப் பயன்படுத் தியவர் பிரதமர் சிறீமாவோ என்பது மறுக்க முடியாத உண்மை. யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவம் 1961— இல் புரிந்த அராஜகம் சொல்லில் வடிக்க இயலாது. மலையக தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதின் தொடர் நிகழ்ச்சியாக அவர்களை நாடு கடத்தும் செயற்பாட்டையும் 1964 இல் நிறை வேறிய சிறீமா — சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் சிறீமா ஆரம்பித்தார்.

சிறீமா இரு காலப்பகுதிகளில் சிறீலங்காப் பிரதமராகப் பதவி வகித்தார். முதலாவதாக 1960—1964 வரை, இரண்டாவதாக 1970—1977 வரை இரண்டு காலப் பகுதிகளும் தமிழர்களுக்கு துன்பம் நிறைந்த கட்டங்களாக அமைகின் றன. இரண்டாவதில் மிகக் கொடூர மான சம்பவங்கள் நிகழ்ந்தன. 1972 இல் புதியதோர் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இதில் சிங்களம் அரசமொழி என்பதோடு பௌத்தம் தேசிய மதம் என்ற அந்தஸ்தைப் பெற்றது. 1948 இல் புகுத்தப்பட்ட யாப்பில் காணப்பட்ட அற்பசொற்ப தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்டன. மமதையின் உச்சிக்குச் சென்ற சிறீ மாவோ சொன்னார், 'நான் கொடுப் பதை ஏற்க தமிழர்கள் சித்தமாக இருத்தல் வேண்டும்'.

எது எப்படி இருப்பினும், கை விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில தமிழ் தலைவர்களின் வீடுகளி லும், அவர்கள் போட்ட அரசியல் மேடைகளிலும் மாத்திரம் உலாவிய தமிழர் அரசியல் சிறீமாவோவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் இளைஞர் சமுதாயத்தின் கைகளுக்கு மாறியதோடு பெரும் விடுதலைப் போராக உருப்பெறுவதற்கும் வழி அமைத்தது. இதற்கு இரண்டு முக் கிய காரணங்களை எடுத்துக் கூறலாம்.

(01) தமிழ், தமிழர் பண்பாடு, தமி ழர் விழிப்பு என்பவற்றின் வெளிப்பா டான 1974இல் யாழ் நகரில் நடந்த



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை சிறீமாவோ தனது காவல் துறையினர், விசுவாசமான அரசியல் தலைவர்கள் என் போர் மூலமாகச் சிதைக்க முற்பட்டது. விழாவில் பொலிஸாரால் கொலை செய்யப்பட்ட 09 தமிழர்கள் இறவாவரம் பெற்றனர். ஆயுத வன்முறைக்கு ஆயுத பலமே சிறந்த தடுப்பு உபாயமென நாம் நம்பிக்கை கொள்ள வழி பிறந்தது.

(02) தமிழ் மாணவர்களின் கல்வியைச் சிதைப்பதில் சிறீமாவோ அக்கறை காட்டினார். கூடுதல் புள்ளி பெற்ற தமிழ் மாணவர்களை நிராகரிப்பதற்கும் குறைந்த புள்ளி பெற்ற சிங்கள மாணவர்களை பல்கலைக்கழக உள்நுழைவுக்கு வகை செய்வதற்கும் பொருத்தமான உத்தரவுகளை வழங்கினார். கல்வி அறிவிற் சிறந்த தமிழ் மாணவர்கள் கல்வி பெறும் வாய்ப்பை இழந்தனர். தனி நாடு ஒன்றே தமக்கு சுபீட்சம் தரும் என்று செயற்படத் தொடங்கினர்.

இதைவிட, மிகவும் கூடுதலான காலம் (16 .03 .1971 — 15.02.1977) அவசரகால நிலைமை மூலம் ஆட்சிசெய்த முதலாவது சிங்களத் தலைவர் என்ற காரணத்தால் தமிழர்கள் மத்தியில் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தியவரும் சிறீமாவோ தான் என்பது வரலாறு. பூவாகி, கனியாகி, முற்றிப் பழுத்த முழுப் போராக இரு இனங்களுக்கு இடையிலான விவகாரம்மாறுவதற்கு பண்டாரநாயக்க குடும்ப மும்மூர்த்திகளே காரணம்.

இதில் மிகக் கொடூரமானவர் சந்திரிகா என்பதில் ஐயம் இல்லை. ஏமாற்று வித்தை, கூசாமல் பொய் உரைப்பது, தமிழர் தேசியத்தை வேருடன் சாய்ப்பது என்பவற்றில் மிகத் தீவிரமாக ஈடுபடுபவர். மேற்குலகில் நடைமுறை எதிர்பார்ப்புகளை புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப நடிப்பவர். சந்திரிகாவின் திட்டங்கள் அழிவதற்கு தமிழர் பலம் மேலும் பெருக வேண்டும். போர்க்கள வெற்றியொன்றே எமக்கு விடுதலை அளிக்கும். ◘

---

## சடையர் கவிதைகள்

## கிரகமாற்றம்

பேப்பர் புத்தகம் இன்னபிற சிறப்பிதழ் விரித்து ...
ராசி பலன் பார்த்தேன்.
அகதியாய் நாங்கள் இங்கும்
அங்கும் எங்குமாய்,
வதிவிடம் விட்டு வாழ்விடம்
தேடி அலைவதுபோலே..
விண்ணில் கிரகங்கள் இருப்பிடம் விட்டு
புதுஇடம் தேடி அடிக்கடி அலைவதால் ...
எங்கள் வாழ்க்கையில் இத்தனை அலைச்சல்
ஏழாம் இடத்துச் சனியன் இன்றுடன்
எட்டாம் இடத்துள் எகிறிக்குதிப்பதால் ...
என் ராசியின் பலனோ.. சஞ்சலம் மிக்கது.
சவி பிடித்த மூக்கதாய்
எப்போதும் துன்பம் என்பதே என்பலன்.
அமைதி என்பதே அதற்குப பரிகாரம்.
தப்பான பேச்சுக்குக்கூட எங்குமே
எதிர்ப்பேச்சுக் கூடாது.
தொழில்துறை தனிலே பிரச்சினை வரலாம்..
அதிகாரியுடன் சண்டை ஆகாது
சொன்னதைச் செய்து நற்பலன் பெறுக..
என்பதே
புளியடிச் சாத்திரி சொன்ன வைத்தியம்.
ஆக... கைகட்டி நிற்பதே என்நிலையாது..
கடந்த அண்டும் வியாழன் மாறி இதேபலன்
சொன்னதே..?

## நாளை

*நேற்று ஒரு கனாக்கண்டேன்.*
*மூச்சுத் திணற...*
*அவலம் நிறைந்த அந்தப் பொழுதில்*
*பேய்பிசாசென கறுத்தொரு உருவம்*
*உயிர்நிலை மீது அழுத்திப்பிடிக்க...*
*இன்னொரு உருவமோ தொண்டையை*
*நெரித்தது.*
*இரத்தம் சொட்டும் கூரிய பற்களை*
*காட்டியபடிக்கென்...*
*கழுத்தை நோக்கி குனிந்து பணிந்தது.*
*கடித்துக்குதறும் வெறியினை உமிழும்*
*கண்கள் உறுத்த...*
*இரத்தச் சுவையால் ஊறித்திளைத்த நாவின்*
*மிரட்டலில்...*
*என் சதுரம் துடித்தது.*
*நாடிநரம்புகள் முறுக்கிப் பிணைய... கத்தினேன்!*
*உலகம் அதிர ஓங்கிக் கத்தினேன்...!!*
*அதிர்வின் வீச்சம் அதிகம் போலும்...*
*குரல்வரவில்லை; ஆனால் கத்தினேன்.*
*உடல் முழுதும் வியர்வையால் நனைய...*
*கை கால் உதறி விழித்துக் கொண்டேன்.*
*அருகில் கிடந்த குழந்தை விழித்து.....*
*அழகாய் சிரித்தது.*
*சிங்கள ஆமியை அறியாச் சிரிப்பு.!*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்




கலாநிதி சி.க.சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை, யாழ் /பல்கலைக்கழகம்)

(முன்னிதழ் தொடர்ச்சி)

அநுராதபுர மன்னர் உத்தர தேசத்தில் (வடபகுதியில்) சமய நிறுவனங்களுக்கு மேற்கொண்ட தானங்கள், சமய நிறுவனங்களை அமைத்தல் ஆகியனவே பாளி நூல்களில் இடையிடையே குறிப்பிடப்படுகின்றன. அரசியல் ரீதியான தொடர்புகள் மிக அருகியே காணப்படுகின்றன. ஆனால் கிழக்கு மாகாணத்தில் பொதுவாகவே இந்நிலை காணப்பட்டாலும் ஆங்காங்கே இம் மன்னர்கள் சிற்சில காலங்களில் குளங்களை அமைத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் புதுமையானவை அன்று. வலிமையுள்ள மன்னன் பிறபகுதிகளில் தனது செல்வாக்கை பரப்பும் நடவடிக்கை போன்றே இவை அமைந்தன. ஆனால் இவர்கள் மேற்கொண்ட நிருவாக ஒழுங்குகள் பற்றிய சான்றுகள் காணப்படவில்லை.

கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல் கலாச்சார மறுமலர்ச்சியின் தாக்கம் ஈழத்திலும் ஏற்பட்டது. முதலில் பல்லவ வம்சமும் பின்னர் பாண்டிய சோழ வம்சங்களும் தமிழ் நாட்டின் அரசியலதிகாரங்களைப் பெற அவற்றின் அரசியல் ஆதிக்கமும் ஈழத்திலும் ஏற்பட்டது. பல்லவர் எழுச்சியோடு தமிழகத்தில் திராவிட கலாச்சாரத்தின் மேன்மை காணப்பட்டது போன்று ஈழத்திலும் சிங்கள – தமிழ் மொழி பேசியோர் ஈழவர் என்ற நிலையிலிருந்து மாறி இனத்துவ ரீதியாக தனியான பாதையில் செல்லத் தொடங்கினர். இக்காலத்திற்குள் சிங்கள என்ற நாட்டுப் பெயர் சிங்கள் மக்கட் கூட்டத்தினருக்கு வழங்கப்பட்டதோடு கி.பி. 7–ம் நூற்றாண்டிற்குள் சிங்கள வரிவடிவமும் எழுச்சி பெற்றது. இவ்வரலாற்று நிகழ்ச்சியைக் கே.எம்.டி.சில்வா பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள 5–ம், 6–ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலே மூன்று இந்து அரசுகள் (பாண்டியர், பல்லவர், சோழர்) எழுச்சி பெற்றன. இதன் விளைவாக இவைகளுக்கும் சிங்கள ராஜ்யத்திற்குமிடையே இருந்த உறவுகளை இனத்துவ முரண்பாடுகள் ஊறுசெய்தன. இத்திராவிட அரசுகள் சமய நோக்கைப் பொறுத்த மட்டில் போர்க்கோலம் மிக்க இந்துத் தன்மையைக் கொண்டு விளங்கியதோடு தென்னிந்தியாவிலும் பௌத்த செல்வாக்கினை அடியோடு களைந்தெறிவதையே நோக்கமாகக் கொண்டும் செயற்பட்டன. காலப்போக்கில் போர்க்கோலம் மிக்க இந்து மதத்தினால் தென்னிந்தியாவில் பௌத்த மதம் முற்றாக அழிக்கப்பட்டது. இதன் விளைவாக தென்னிந்தியா சிங்கள ராஜ்யங்களுக்கிடையே இருந்த மிக முக்கிய பண்பாட்டு உறவு துண்டிக்கப்பட்டது. தவிர, ஈழம் மீது தென்னிந்திய அரசுகள் கொண்டிருந்த பொறுப்பு வழக்கமாக இவ்வெறுப்புணர்ச்சிக்குக் கொள்ளை அடிக்கும் வேட்கை ஆர்வமூட்டியது. இப்போது முதற்தடவையாகச் சமய ஆர்வத்தாலும் இனத்துவத்தின் பெருமை உணர்வினாலும் முனைப்புப் பெற்றது.



16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் யாழ் மக்களின் வாழ்க்கை

இதிலிருந்து முக்கிய விளைவு என்னவென்றால் ஈழத்திலிருந்த தமிழர் தமது இனத்துவம் பற்றிக் கூடுதலாக பிர





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



க்ளை செலுத்தத் தொடங்கினர். இந்த இனத்துவ உணர்வினைப் பண்பாட்டு ரீதியாகவும் சமய ரீதியாகவும் அவர்கள் நிலைநாட்ட முனைந்தனர். இதுதான் திராவிட– தமிழ் – இந்து என்ற வடிவமாகும்.


மேற்கூறிய பின்னணியிற்றான் ஈழத்திலும் வாரிசுரிமைப் போர் ஓர் முக்கிய அம்சமாக 7–ம், 8–ம் நூற்றாண்டுகளில் நடைபெற்றது. இதனால் தமிழகத்தின் செல்வாக்கு மிக மேலோங்கிய காலகட்டம் இதுவாகிறது. வட கிழக்கு மாகாணங்களிலும் தமிழர் தனித்துவத்தினை நிலைநாட்ட மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாளி நூல்கள் இப்பகுதிகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளைச் சிங்கள மன்னர்கள் அடக்கிய சம்பவங்களாகக் கூறுகின்றனபோற் தெரிகிறது.

சூளவம்சம் ஸிலாமேகவண்ணன் (கி.பி.619—628) ஆட்சிக்காலத்தை உத்தர தேசத்தினை ஸிரிநாய என்பவன் கைப்பற்ற முயற்சித்தான் எனவும் இக்கலகக்காரரை ஸிலாமேகவண்ணன் உடனே அடக்கி உத்தர தேசத்தினைத் தனது ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்தான் எனவும் கூறுகிறது. இதே நூல் மீண்டும் கி.பி 8ம் நூற்றாண்டில் இப்பகுதியில் நடைபெற்ற கிளர்ச்சி பற்றிக் கூறுகின்றது.

இக் கிளர்ச்சியை இரண்டாவது மகிந்தன் (கி.பி.777– 797) வெற்றிகரமாக அடக்கியதாக இந்நூல் கூறுகிறது. இப் பின்னணிக்குள் யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் உக்கிர சிங்கன் – மாருதப்புரவல்லி ஆராயப்பாலன கி.பி 8–ம் நூற்றாண்டிற்குரிய இக் கதைகளைத் தென்னக, ஈழ அரசியற் பின்னணியில் நோக்கும் போது கதிரமலையில் (கந்தரோடையில்) இருந்து அரசு செய்த ஓர் அரசைப் பற்றியே இவை குறிப்பிடுகின்றன எனலாம்.

இத்தகைய கதையை ஒத்த கதையே மட்டக்களப்புத் தமிழகத்திற்குரிய ஆடகசவுந்தரி கதையுமாகும். இக் கதைகள் இப்பகுதி அரசுகள் பற்றிய மரபுகளை வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன எனக் கூறலாம். கி.பி. 8–ம் நூற்றாண்டில் பாண்டியர் படையெடுப்பும் ஈழத்தில் ஏற்பட்டது. இப் படையெடுப்பை மேற்கொண்டவன் சிறிமாற சிறிவல்பன் ஆகும். இப் படையெடுப்பும் ஈழத்தில் வட பகுதியூடாகவே நடைபெற்றது. அநுராதபுர அரண்மனையும் அழிக்கப்பட்டது. இப்படையெடுப்பின் இறுதியில் முதலாவது சேனன் (கி.பி. 833–853) பாண்டியரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் அரசுரிமையை மீண்டும் பெற்றுக்கொண்டான். இப் பாண்டிய படையெடுப்புக்கு பதிலடி கொடுக்க இரண்டாவது சேனன் (கி.பி.853– 867) பாண்டிநாட்டின் மீது படையெடுத்து வெற்றி ஈட்டியதாகக் கூறப்படுகிறது.

இக் காலத்தில் பாண்டியரோடு (சோழருக்கு எதிராகச்) சிங்கள அரசு சினேகித உறவு பூண்டது. தமிழகத்தில் பாண்டியருக்கு உதவி செய்ய ஈழத்துச் சிங்களப் படை சென்றது. பாண்டியர் சோழருடன் தோல்வி கண்டதால் தமது ஆதிக்கத்திற்கு பாண்டி – ஈழ நட்புறவில் இருந்து எதிர்ப்பு வருவதைத் தடுக்க சோழர் ஈழத்தினைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டி ஏற்பட்டது.



கி.பி 1000 ம் ஆண்டில் சோழர்காலச் சிற்பம்

முதலாம் பராந்தகன் காலத்தில் சோழப்படை அநுராதபுரத்தினை அழித்தது. பின்னர் இரண்டாம் பராந்தகச் சோழன் காலத்தில் இப் படை வடபகுதி ஆகிய நாகதீபத்திலுள்ள ஊர்காவற்றுறை வழியாக ஈழத்தினை அடைந்தது. இப்படையெடுப்பை நடாத்திய மன்னனாக "வல்லப" என்ற மன்னன் சூளவம்சத்தில் குறிக்கப்படுகிறான். சோழரைக் குறிக்கும் "வளவன்" என்ற பதம் தான் வல்லபன் என வழங்கப்பட்டதுபோல் தெரிகிறது.

பின்னர் முதலாம் இராஜராஜன் காலத்தில் ஈழத்தின் வடபகுதி சோழர் ஆணைக்குக் கொண்டுவரப்பட அநுராதபுர தலைநகரம் அழிக்கப்பட்டது. இது நிகழ்ந்தது கி.பி. 997–ஆம் ஆண்டிலாகும் பின்னர் இவனது மகனாகிய முதலாவது இராஜேந்திரன் காலத்தில் ஈழம் முழுவதும் சோழரது ஆணையை ஏற்றபோது முதன் முதலாவது சோழ அரசின் ஒன்பதாவது மாகாணமாகி இது மும்முடிச் சோழ மண்டலம் எனவும் அழைக்கப்பட்டது.

பொலநறுவைக் காலம் சோழராட்சியுடன் ஆரம்பமாகின்றது



## 1697ல் ஒல்லாந்தர் தமிழீழ இராச்சியம் மீது விதித்த வரிகள்

ஒல்லாந்தர் விதித்த வரிகளைப் பார்க்கும் போது தமிழீழத்தின் வளம் அக்கால அந்நியர்கள் தொடக்கம் இக்கால ஆக்கிரமிப்பாளரன சிங்களவர்கள் வரை சுரண்டப்படுபதை அறியக் கூடியதாக இருக்கும்.

ஒல்லாந்தரால் வரிகளாக தலைவரி, நிலவரி, மரவரி, துறைமுகவரி, ஆயவரி என்பவற்றோடு ஆனையிறவு, கச்சாய் ஆகிய இடங்களில் சுங்கச் சாவடிகள் நிறுவப்பட்டன.

விசேடமாகவும் பயிற்செய்கைக் காலங்களில் பயிர்களின் பெறுமதிற்கேற்ப தீர்வைகள் விதிக்கப்பட்டன. மொத்தமாக 1697ல் மட்டும் 140480 இறைசால்கள் அறவிடப்பட்டதாக ஒல்லாந்தர்களின் குறிப்பேடுகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் காலம் கி.பி 1000 – 1250 ஆகும். பொலநறுவைக்கு இராஜராஜனின் விருதுகளில் ஒன்றாகிய "ஜனநாத" என்ற பெயரைத் தழுவி ஜனநாத மங்களம் எனப் பெயரிடப்பட்டது. இன்றும் பொலநறுவையில் காணப்படும் சிவாலயங்களும் தமிழ்க் கல்வெட்டுக்களும் அகழ்ந்தெடுக்கப்பட்ட இந்து விக்கிரகங்களும் இவ்வரசில் தமிழ்க் கலாச்சாரம் பெற்றிருந்த முக்கியத்தினை விளக்குகின்றன எனலாம்.

சோழர் காலத்தில் சோழப் பேரரசின் இராசப்பிரதிநிதியே சோழ அரசின் சார்பாக ஈழத்தினை நிர்வகித்தான். இவன் 'சோழ இலங்கேஸ்வரன்' என அழைக்கப்பட்டதை கந்தளாய், மானாங்கேணி ஆகிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. சோழர்களின் தலைமையகம் திரிகோணமலையில் காணப்பட்டது போற் தெரிகிறது. காரணம் இங்குதான் பிற மாவட்டங்களைவிட அதிகமான சோழக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.



முதலாவது ராஜராஜன் தான் கட்டிய தஞ்சைக் கோயிலுக்கு மானியமாக அளித்த ஐந்து கிராமங்கள் கூட இம்மாவட்டத்திற்குள் காணப்பட்டன.

திரிகோணமலையோடு மாந்தை, ஊர்காவற்றுறை ஆகியன சோழரின் கடற்படைத் தளங்களாக விளங்கின. வட மேற்கே புத்தள மாவட்டத்தில் மட்டுமன்றி தென்கிழக்கே றோகணைப் பகுதியிற் சாகம என்ற இடம் வரை இவர்கள் படைகள் நிலை கொண்டிருந்தன.

முதன் முதலாகத் தமிழ் நாட்டில் சோழ அரசியல் காணப்பட்ட நிருவாகப் பிரிவுகளும் ஈழத்திற் புகுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள. நிருவாகப் பிரிவுகளில் நாடு, வளநாடு ஆகியன குறிப்பிடத்தக்கன. மாதோட்டப்பகுதி பேரரசனாகிய ராஜராஜனின் பெயரால் அருள்மொழித் தேவ வளநாடு, என அழைக்கப்பட்டது. திரிகோணமலை மாவட்டத்தில் ராஜராஜச் சோழ வளநாடு, விக்கிரம சோழவளநாடு, வீரபரகேசரி வளநாடு, ராஜேந்திர சோழவளநாடு போன்ற பிரிவுகள் இயங்கியமை கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்டுள்ளன. நாடு, சபா, ஊர், நகரம் போன்ற உள்ளூராட்சி அமைப்புக்களும் ஈழத்தில் அக்காலத்திற் காணப்பட்டன. திரிகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாயில் அமைக்கப்பட்ட பிராமணக் குடியேற்றம் முதலாம் ராஜராஜனின் பெயரால் 'ராஜராஜச் சதுர்வேதி மங்கலம்' எனப் பெயர் பெற்றது. இதே மாவட்டத்திலுள்ள நிலாவெளிப் பிள்ளையார் கோயிற் சாசனம், மானாங்கேணிக் கோயிற் சாசனம் ஆகியன திரிகோணமலை பற்றியும் இங்கே காணப்பட்ட சிவாலயம் பற்றியும் அரிய குறிப்புக்களைத் தருகின்றன. நிலாவெளிக் கல்வெட்டில் 'கோணபர்வதம் திருக்கோணமலை மச்சகேஸ்வரமுடைய மகாதேவர்க்கு' என்ற குறிப்பு காணப்படுகிறது. கோணேஸ்வர ஆலயம் மச்சகேஸ்வரம் என அழைக்கப்பட்டதை தக்ஷிண கைலாய புராணம், திருகோணசல புராணம் ஆகியன எடுத்துக்காட்டுவது ஈண்டு அவதானிக்கத்தக்கது.

(அடுத்த இதழில் தொடரும்)

# தமிழருக்குரிய தேசவழமைச் சட்டம்

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்கள் தமக்கென உரிய சட்டங்களையும் சட்ட நிறுவனங்களையும் கொண்டிருந்தார்கள். இவற்றுள் சில இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட டச்சுக்காரரினால் (ஒல்லாந்தரினால் சேகரிக்கப்பட்டு ஒன்றாகத் தொகுக்கப்பட்டுத் தேசவழமைச் சட்டத் தொகுப்பென, சட்ட உருக் கொடுக்கப்பட்டது). 1706–ம் ஆண்டில் சைமன்ஸ் தேசாதிபதியினால் ஐசாக்ஸ் (Isaacs) என்பவர் யாழ்ப்பாணப் பட்டணத்திலுள்ள பழக்கவழக்கங்களையும், சமூக ஒழுக்க விதிகளையும் மற்றும் அங்குள்ள மக்களின் சிவில் விவகாரங்களில் எப்படியான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன என்பதையும் சேகரித்துத் தொகுத்தமைக்கும் படி ஆணையதிகாரம் வழங்கப்பட்டார்.

டச்சுக்காரரின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சகல தமிழர்களுக்கும் பொருந்தக்கூடியதான பழக்கவழக்கங்களின் தொகுப்பாகப் பிரயோகிக்கப்பட்டதாக அந்தச் சட்டத்தொகுப்பு காணப்பட்டது. டச்சுக்காரரின் சட்டக் கோவைத் தொகுப்பு யான் பிரூஸ் (Jan Pirus) என்பவராற் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதுடன், அதன் பிரதிகள், நுண்ணாய்வுக்கும் திருத்தத்திற்குமாக முதலியார்களுக்கிடையில் அனுப்பப்பட்டது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருக்கும் பழக்கவழக்கங்களை அவை ஒத்திருக்கின்றதென ஏற்றுக் கொண்டனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புறப்படு தமிழ் வீரா



இன்னுமா தூங்குகின்றாய்
இளந்தமிழ் வீரா உன்றன்
பொன்னனை மண்ண கத்தே
போர்ப்படை கொண்டு வந்து
அந்நியன் குவிக்கின்றானே
அதனை நீ கண்டபின்னும்
இன்னுமா தூங்குகின்றாய்
எழுந்திடு தமிழ் வீரா

அன்னைநாட்டுள்ளே எங்கும்
அந்நியன் ஆர்ப்பரித்து
பொன் பொருள் சூறையாடி
பொசுக்கிறான்
உடைமையாவும்
கொன்றுன திளைஞர் தம்மை
கொக்கரிக்கின்றான் நாளும்
இன்னுமா தூங்குகின்றாய்
எழுந்திடு தமிழ் வீரா

பொன் பொருள் தேடிச் சேர்த்து
பூதமே போலக் காத்து
உன்னவர் இருக்கப் போதுள்
உலுத்தரோ அழக்கின்றாரே
புன்தலைக் கொடியர் தம்மை
புறமுது கிடவைத்தாலே
என்னரு நாட்டார் உய்வர்
எழுந்திடு தமிழ் வீரா

உளத்தினை வலிய தாக்கி
உடலினை உறுதி செய்து
பலத்தினை திரட்டி ஒன்றாய்
பாவமொன்றறியார் தம்மை
நிலத்தினில் இம்சை செய்யும்
நீசரை இல்லாதாக்கி
குலத்தினைக் காக்க இன்றே
குதித்தெழு தமிழ் வீரா

வீட்டினுக் கொருவனாக
வெளிக்கிடு தமிழ வீரா
போர்க்களம் அணியாய்
போவோம்
புறம் புகழ் தமிழ் வீரா
ஏர்க்களம் பாடி முன்னே
இசைபட வாழ்ந்தோர் இன்று
போர்க்களம் பாடட்டுமே
புறப்படு தமிழ் வீரா

எழுந்திடு தமிழ் வீரா
எழுந்திடு தமிழ் வீரா
குலத்தினை அழித்தொழிக்க
கொடியவர் எண்ணிவிட்டார்
விழுத்தெழு தமிழ் வீரா
விரைந்திடு களத்தினுக்கு
ஒழித்திட இவரையெல்லாம்
உடனெழு தமிழ் வீரா

# இடிந்துபோன தேசங்கள்

இடிந்துபோன தேசங்கள்
நிமிர்ந்து பார்த்ததால்
எழுந்து நிற்கின்றன
அவை;
தன் மேனியை நசித்த
அன்னியன் பாதச் சுவடுகளை
அழித்து விட்டதால்
இனிய சுதந்திரக் காற்றைச்
சுவாசிக்கின்றன.

முருகு பாரிமகன்

# நீயென்ன நிழல் வைத்தாய்?

கோடி பனை நிமிர்ந்த நாட்டில்
மாடிமனை நிமிர மரம் தறித்தவனே!
மழையற்றுப் போனதடா மண்
நிற்க நிழலற்ற நெடும்பாலையாவதற்கு
குற்றமென்ன செய்தாளெம் தாய்
பூட்டன் நாட்டிய பனை மரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலாமரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி
நீயென்ன நிழல் வைத்தாய்?

புதுவை இரத்தினதுரை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1999 மீள் பார்வை

## ஜனவரி

04- வன்னியில் விடுதலைப் புலிகளினால் சர்வதேச தொலை தொடர்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

23- மாங்குளம் பகுதியிலிருந்து முன்னேற முனைந்த படையினரை 3மணி நேர சண்டையின் பின்னர் பழைய இடங்களுக்கே விரட்டியடிக்கப்பட்டனர்.

28. குருநகர் கடற்ப்பகுதியில் வைத்து MI-24 உலங்கு வானூர்தி கடற்புலிகளின் தாக்குதலில் பலத்த சேதம்.

29. சிங்களப் படையின் உலங்கு வானூர்தி தாக்கியதில் மதகுரு பலி பலர் படுகாயம்.

## பெப்ரவரி

8. மக்கள் விரோதக் குழுக்களான டெலோ,புளட் தமக்கிடையே மோதிக் கொண்டதில் இருவர் பலி. பலாலி தளம் அருகே புலிகள் தாக்குதல் 5 சிங்களப் படையினர் பலி.

10. விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர்களை சிறீலங்கா சர்வ மதக்குழு வன்னியில் சந்தித்து பேச்சுக்களை ஆரம்பித்தது

18. கிளாலியில் கடற்சிறுத்தைகள் தாக்குதல், நவீன ராடார்கைப்பற்றப்பட்டது.

27. நெல்லியடியில் தேசவிரோத கும்பலான புளட்டின் முகாம் எரித்தழிக்கப்பட்டது.

## மார்ச்

6. சிறீலங்காவின் ரணகோச நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டது.
-செம்மணியில் புதைகுழி பற்றி அறிவதற்கு 55 செய்தி நிருபர்கள் யாழ் குடா நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

18. தள்ளாடி முகாம்மீது கிட்டு பீரங்கி படையணி தாக்குதல் 212 படையணி தலைமையகம் சேதம்.

21. புதுக்குடியிருப்பில் சிங்கள விமானங்கள் வீசிய குண்டுகளால் மாணவி ஒருவர் பலி.

22. ஐந்து நூற்றாண்டு பழமையான மடுத்திருத்தலத்தின் உள்ளே இராணுவம் உள்நுழைந்தது.
-யாழ் விளையாட்டரங்கில் 20ற்கு மேற்பட்ட மண்டையோடுகள் கண்டெடுக்கப்பட்டன.

-உலகில் காணமல் போனோரில் 2வது இடமென ஐ.நாமனித உரிமைகள் குழு அறிவிப்பு.

## ஏப்ரல்

14. எதிரி ஆக்கிரமித்துள்ள யாழ் குடாநாட்டில் இளவயதினரை சிங்களப் படையில் இணைத்து கொள்ள முயற்சி.

25. மட்டக்களப்பு சிங்களப் படை விமான தளம் மீது கிட்டு பீரங்கிப் படையணி தாக்குதல்.

## மே

16. பள்ளமடுவில் ரணேகாச 3நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் விரட்டியடிப்பு.

29. சிறீலங்கா இனவாத இராணுவத்துடன் இணைந்து தமிழின அழிப்பில் ஈடுபட்ட இனத்துரோகி ராசிக் கரும்புலி மேஜர் அரசப்பனால் கொன்றழிக்கப்பட்டான்.

## யூன்

3. பூநகரியை கைப்பற்றவென ஆரம்பிக் கப்பட்ட சிங்களப்படையின் சுழல் காற்று நடவடிக்கை பலத்த தோல்விய டைந்தது


## யூலை

13. பொலநறுவ வெலிகந்த படை முகாமில் 23-1 படையணியின் களஞ்சியம் முற்றாக அழிந்தது.

25. மக்களை பயன்படுத்தி மூன்று முறிப்பில் முன்னேற முயன்ற இராணுவத்தின் முன்னேற்ற முயற்சி முறையடிப்பு. வவுனியாவில் இருந்து முன்னறிவிப்பின்றி வந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

## ஒகஸ்ட்

9. வாகரை முகாம் அதிகாரியும், தென்தமிழீழத்தின் பல தமிழினப் படுகொலைகளுக்கு காரணமாக









தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தவருமான கருணாநாயக்க தற்கொடை குண்டு தாக்குதல் மூலம் கொல்லப்பட்டார்.

30. ராஜபக்ஸவினால் செம்மணியில் பல புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டன.
ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் சிறீலங்கா இராணுவத்தால் அடித்துச் சேதமாக்கப்பட்டது.

## செப்டெம்பர்

2. மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டு வந்த மாணிக்கதாசனும் மற்றுமிருவரும் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.
12. ரணகோச 5 நடவடிக்கை மூலம் பள்ளமடுவை கைப்பற்றும் முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டது. 100ற்கும் மேற்பட்ட படையினர் பலி. 800க்கும் மேற்பட்டோர் காயம்.
15. முல்லைத்தீவு சுதந்திரபுர பகுதியில் சிறீலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு சிறுவர்கள் உட்பட 22 அப்பாவி தமிழ்மக்கள் பலியாகியதோடு 50ற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.
26. யாழ் தீவக கடற்பரப்பில் கரை ஒதுங்கிய 13ற்கும் மேற்பட்ட சடலங்கள் மக்களால் கண்டெடுக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன.

## ஒக்டோபர்

15. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பலாம் என யாழ்குடநாட்டு மக்களுக்கு அழைப்பு விட்டிருந்த சிங்களப் படையினரால் கிளாலிப் கடனீரேரிப் பகுதியில் வைத்து 9 தமிழர்கள் சுடடுக் கொல்லப்பட்டனர்.
28. நீர்சிந்து இரணுவநடவடிக்கையில் அம்பகாமம் பகுதியில் கடும்சமர் 30 ற்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் பலி 200க்கும் மேற்பட்டோர் படுகாயம்.
30. நீண்டகாலமாக மலையகத் தமிழ் மக்களின் தலைவராக இருந்தவரும், மூத்த பாரளுமன்ற உறுப்பினரும், நீண்டகாலம் அமைச்சராக இருந்தவருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் தனது 86 வயதில் காலமானார்.

## நவம்பர்

2. விடுதலைப்புலிகளினால் ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
வன்னிப் பெருநிலப்பரப்பில் ஒட்டிசுட்டான் நெடுங்கேணிப் பகுதிகள் மீட்கப்பட்டன.
தென்னிலங்கையில் தினமுரசு ஆசிரியர் அற்புதராசா இனம் தெரியா தொரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
3- MI-17 உலங்குவானூர்தி விடுலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படையினரால் சுட்டுவீழ்த்தப்பட்டது.
ஒலுமடு, மாங்குளம், கனராயன் குளம், புளியங்குளம், மூன்று முறிப்பு மற்றும் மணலாற்றின் பெரும் பிரதேசங்களிலிருந்தும் சிங்களப் படையினர் விரட்டியடிப்பு.
18. ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத் தாக்குதல்கள் மன்னார் பெருநிலப் பரப்பில் ஆரம்பிக்கப்பட்டது.
மடு, பள்ளமடு மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து சிங்களப் படையினர் விரட்டியடிப்பு. தள்ளாடி இராணுவ தளத்தின் மீது பெரும் வலிந்து தாக்குதல்.
20. மடு தேவாலயத்தினுள் தப்பியோடிய சிங்களப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் 44 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.
27. தமிழீழ தேசியத் தலைவரின் விசேட பணிப்பின் பெயரில் மாவீரர் நினத்தை முன்னிட்டு 7 சிங்களப் படையினர் விடுவிக்கப்பட்டனர்.

## டிசம்பர்

11. ஓயாத அலைகள் 3ன் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு பகுதிகளை மீட்டபடி ஆரம்பமாகின.
16. பரந்தன் இராணுவத் தளம் 23மணி நேரச் சமரின் பின்னர் மீட்கப்பட்டது.
17. MI-24 உலங்குவானூர்தி விடுலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படையினரால் வெற்றிலைக்கேணியில் சுட்டுவீழ்த்தப்பட்டது.
28. சந்திரிகா படையின் கட்டுப்பாட்டிலிருக்கும் புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயபூசகரின் மகளான திருமதி சாராதாம்பாள் சரபவணபவானந்தன் (வயது 20) என்ற இளம் தாய், கடற் படையினரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.
27. உமையாள்புரம் முகாமை துடைத் தெடுத்தவாறு ஓயாத அலைகள் நடவடிக்கை ஆனையிறவு தளம் நோக்கி தொடர்கிறது.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடி வழிகாட்டலில் "ஓயாத அலைகள் 3" மண் மீட்பு நடவடிக்கையானது இரண்டு மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. முதல் இரண்டு கட்டங்கள் எடிபல, ஜெயசிக்குறு படைநடவடிக்கையில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை மீட்ட மக்கள் சமர்களாக முடிவடைந்தன. தற்போது முற்றிலும் வேறுபட்ட தந்திரோபாயம் மிக்க ஒரு முற்றுகை – வலிந்து தாக்குதல் சமராக ஓயாத அலைகள் மூன்றின் மூன்றாவது கட்டம் உருப்பெற்றுள்ளது.

தமிழீழத்தின் உருவாதலை சிதைத்து உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு எதிரி யாழ் குடாநாட்டை 1996–ல் ஆக்கிரமித்துக்கொண்டான். பாதுகாப்பதற்கு குடாநாட்டின் வாயிலில் இறுக்கிக் கொண்டிருக்கும் ஆனையிறவுத் தளத்தை விடுதலைப் புலிகளிடம் இழந்துவிடாமல் இருப்பது அவசியம். தமிழீழ விடுதலைப் புலிகளால் 1991–ல் முற்றுகையிடப்பட்ட ஆனையிறவுத் தளத்தை,



சிறீலங்கா அரசுபறிகொடுக்குமாயின் மனவுறுதி குலைந்து இராணுவத்தின் தப்பியோட்டங்களை தடுக்கமுடியாத நிலைக்கு சிங்களம் தள்ளப்பட்டுவிடும். தமிழீழ மீட்பின் இறுதி துடைத்தெடுப்புக்களில் ஆனையிறவும் ஒன்றென்பதை நன்குணர்ந்த சிறீலங்கா, ஆனையிறவுத் தளத்தைக் காப்பாற்றிக் கொள்ள தனது அதியுயர்ந்த இராணுவ வலுவை பிரயோகிக்க முயலும்.

1991–ல் புலிகளால் கைப்பற்றக் கூடிய நிலையில் இருந்தது ஆனையிறவுப் படைத்தளம். ஆனால் அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் மரபுரீதியாகப் படைக்கல வளர்ச்சியை போதியளவு பெற்றுக்கொள்ளாததால் சிறீலங்கா அரசால் கடல்மூலமாக தரையிறக்கத்தை மேற்கொண்டு 53 நாட்கள் நத்தைபோல ஊர்ந்து பலத்த சுடுவலுவை பிரயோகித்து ஆனையிறவைக் காப்பாற்ற முடிந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளை விட பலமடங்கு ஆட்பல, ஆயுத பலத்துடன் முப்பது வருடங்களாக ஒரு பிரதேசத்தில் நிலைகொண்டிருக்கும் எதிரியை, அகற்றுவதற்கு பாரிய முற்றுகையை மேற்கொண்டு அதன்பின்னர் தாக்குதலை மேற்கொணர்தல் விடுதலைப் புலிகளுக்கு அவசியமாகும்.

சிங்கள இராணுவத்தினது படைக்கலங்களைக் கொண்டே இதுவரை காலமும் ஓயாத அலைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பெருந்தொகை நிதி இருக்குமாயின் நவீன படைக்கலங்களை கொள்வனவு செய்வதன் மூலம் ஆனையிறவு வீழ்ச்சியை விரைவுபடுத்தலாம். ஆனையிறவு வீழ்ச்சியை விரைவுபடுத்த வேண்டியது புலம்பெயர்ந்த மக்களின் நிதிப் பங்களிப்பில் பெருமளவு தங்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் கரங்களை பலப்படுத்துவதன் மூலம் இது விரைவில் சாத்தியமாகும். ஆனையிறவு வீழ்ச்சி என்பது உறுதியாகிவிட்ட நிலையில் வீழ்ச்சியை விரைவுபடுத்துவதே தற்போதுள்ள விடயம்.

ஆனையிறவு கூட்டுத்தள தகர்ப்பிற்கு பெருமளவிலா சுடுவலு தேவைப்படும். மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இதனை மேற்கொள்வது என்பது கடினமான காரியமே.

யாழ் குடாவும் மீண்டும் மைந்தர்களின் கரங்களில் வீழ்ந்து விடாமல் இருப்பதற்காகவும் சிறீலங்கா தரப்பிற்கு பல்வேறு நாடுகளில் இருந்தும் இராணுவ உதவிகள் வந்துகொண்டிருக்கும் நிலையில் பல்லாயிரக்கணக்கான போராளிகளும் பொதுமக்களும் களத்தில் தேசியத் தலைவரின் வழிநடத்தலில் அணிதிரளத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். வெற்றியை நோக்கி வீறு நடை போடும் தமிழீழப் படையினர் வெற்றியை விரைவுபடுத்தி இழப்புக்களை குறைப்பது புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நிதி வழங்கும் வேகத்திலும் தங்கியுள்ளது.

வன்னியின் கிழக்கு மேற்குப் பகுதிகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓயாத அலைகள் 3
## ஆனையிறவு முற்றுகைச் சமர்
### ஒரு பார்வை

**ஓயாத அலைகள் 3 நடவடிக்கை யாழ்குடா மீட்பு வரை தொடரும் என தேசியத் தலைவரால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நிலையில் 3-ம் கட்ட ஈழப்போரில் குறிப்பிடத் தக்க நீண்டகால முற்றுகைச் சமர்களாக ஆனையிறவு இருக்கும்.**

வலிந்து தாக்குதலால் மீட்கப்பட்டன. ஆனால் ஆனையிறவை அவ்வளவான உத்தியைப் பாவித்து மீட்பது என்பது எமது தரப்பிற்கான இழப்பு வீதத்தை அதிகரிக்கலாம். ஏனெனில் இலக்கானது எதிரியினால் நன்கு பலப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதுடன் எதிரிக்கு சாதகமான புவியியல் பிரதேசத்தில் அமைந்துள்ளது, இராணுவக் கிராமங்களை உள்ளடக்கிய ஒரு தளம் மீது வலிந்து தாக்குதலைவிட முற்றுகைத் தாக்குதலே தாக்கும் தரப்பிற்கு சாதகமானதாகும்.

சிங்கள இராணுவம் பளைப் பகுதியில் புதிய தளம் ஒன்றை அமைத்துள்ளது. அதைவிட புதிய பட்டாலியன்கள், இராணுவ அணிகள் யாழ் குடாநாட்டில் இருந்து ஆனையிறவு தளத்தை நோக்கி நகர்த்தப்படுகின்றன. இருந்தும் ஆனையிறவுடனான கடல், தரை தொடர்புகள் விடுதலைப் புலிகளினால் துண்டிக்கப்பட்டுள்ளன. புலிகளின் நடமாடும் தாக்குல் அணிகள் யாழ் குடாநாடு எங்கும் பரவி எதிரிகளை தாக்கி அழிக்கத் தொடங்கியுள்ள நிலையில் ஓயாத அலைகள்—3 ஆனையிறவுத் தகர்ப்பை குறைந்த இழப்புக்களுடன் மேற்கொள்வதற்கான காத்திருப்பு அவசியமாகின்றது.

ஓயாத அலைகள் 3 நடவடிக்கை யாழ்குடா மீட்பு வரை தொடரும் என தேசியத் தலைவரால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நிலையில் 3–ம் கட்ட ஈழப்போரில் குறிப்பிடத் தக்க நீண்டகால முற்றுகைச் சமர்களாக ஆனையிறவு இருக்கும். மேலும் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் ஆ.க.வெ சமரில் இருந்த புலிகளின் கட்டமைப்புக்கும் இன்று உள்ள புலிகளின் இராணுவ நிலைக்கும் வித்தியாசம் பாரியது. இவற்றோடு மக்கள் படை என்ற பின்பலம் இன்று முழுமையாக இணைந்துள்ள நிலையில் உலக வரலாற்றில் இடம்பெற்றவை தமிழீழத்திலும் இடம்பெறலாம். பிரான்சிய நெப்போலியனுக்கு வாட்டர்லூ போல, 1–ம் உலகப் போரில் ஜேர்மனியத் தளபதி மோல்ட்டெக்சிற்க்கு மார்ண் சமர்போல, சந்திரிகா அம்மையாருக்கு ஆனையிறவு அமையும் என்பது உறுதி.

மார்ண் சமரில் எவ்வாறு ஜேர்மனியப் படைகள் பிரான்சிய பொதுமக்களிடம் முற்றுகைத் தாக்குதலுக்குள்ளாகி தப்பியோடினதோ அதே போன்று ஆனையிறவுப் படையினரும் விரட்டியடிக்கப்படுவர்.

தமிழீழம் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காக இன்று பால், வயது வேறுபாடின்றி அனைத்து தரப்பினரும் அணிதிரண்டு கொண்டிருக்கும் நிலையில் ஆனையிறவில் சிங்களப் படையினர் என்ற பேச்சிற்கே இடமில்லை.

“போருக்கு நீ செல்வதற்கு முன்னர் உன்தரப்பு இழப்பிற்கும் எதிரிக்கும் உன்னால் ஏற்படுத்தக்கூடிய இழப்பின் இடைவெளியை கணித்துக் கொள்ளவேண்டும்”

என்று கூறினார் சீனப் போரியல் பேறிஞர் சன்சூ அவர்கள். 25 வருட போரியல் அனுபவங்களூடாக அனைத்து கணிப்பீடுகளோடும் படை நடைத்துகின்ற எமது தேசியத் தலைவரால் வழிநடாத்துகின்ற ஓயாத அலைகள் மூன்றின் அலையடிப்பில் ஆனையிறவு வீழ்த்தப்படுவது உறுதி.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலக நாடுகளின் விடுதலை வரலாறு

# தமிழீழ மக்களுக்கு கூறுவது என்ன?

ஒரு தேசத்தின் முதல் மரியாதைக்குரியவர்கள் அத் தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய வீரர்கள். அவர்கள் உயிர்வாழும் காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி அவர்களுக்கே முதல் மரியாதை கிடைக்கப்பெறுகின்றது. இதேவேளை, ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்ட காலத்தில் உயிர் வாழ்வதற்கும் அதில் பங்களிப்புச் செய்வதற்கும் கிடைக்கும் சந்தர்ப்பமானது மிக மிக அரிதாகும்.

ஆனால், ஒரு தேசத்தின் சுதந்திர போராட்ட காலத்தில் வாழ்ந்தும் போராட்டத்தில் பங்களிப்புச் செய்யாமல் இருப்பது வரலாற்றுத் தவறாகும். இது தமது தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமையில் இருந்து தவறியதாக அர்த்தப்படக் கூடியதாகும். இது விடுதலைப் போரில் ஈடுபடும் ஒரு இனத்திற்கு மட்டுமல்ல, சகல தேசத்திற்கும் பொருத்தப்பாடானதாகும்.

**போரிடும் வலுவுள்ள மக்கள் அனைவரும் தமது இனத்திற்காகவும், மண்ணிற்காகவும் போரிடத் தயாராக இருந்தால் எப்பெரிய வல்லரசுகளினால் கூட சிறுபான்மை இனத்தவர் என்ற ரீதியில் தோற்கடித்துவிட முடியாது**

1992 இல் கிளிங்டன் ஜனாதிபதி வேட்பாளராக ஜனநாயகக் கட்சியினால் நிறுத்தப்பட்டபோது, எதிர்த்தரப்பான குடியரசுக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட கிளிங்டன் மீதான குற்றச்சாட்டில் முக்கியமானது, அவர் அமெரிக்க இராணுவத்தில் சேவையாற்றுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் போலிக் காரணங்களை சமர்ப்பித்துத் தப்பித்துக் கொண்டவர் என்பதாகும்.

இக்குற்றச்சாட்டானது. அமெரிக்காவின் தலைமைப் பொறுப்பை ஏற்பவர், இராணுவத்தில் சேவையாற்றியிருத்தல் அத்தியாவசியமானதொன்றாக மக்கள் கருதுவதன் விளைவே ஆகும். ஏனெனில், இராணுவத்தில் கடமை ஆற்றுதல் என்பது தேசத்திற்கு அவர்கள் ஆற்றும் கடமை ஆகும். அவ்வாறு கடமை ஆற்றியவர்களே தேசத்தின் தலைமைத்துவதற்குத் தகுதியானவர்கள் என்ற பொதுவான அபிப்பிராயமும் இதற்குக்காரணமாகும்.


அமெரிக்காவைப் பொறுத்து அதன் அதிபர்களாக இருந்தவர்கள் அனேகர் அமெரிக்க ஆயுதப்படையிலோ அன்றி அதன் புலனாய்வுத் துறையிலோ அங்கம் வகித்தவர்களாகவே இருந்து வந்துள்ளனர். அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான ஜோர்ஜ் வாசிங்டன் அமெரிக்க சுதந்திரப் போரில் தலைமைத் தளபதியாராகும் அமெரிக்காவின் புகழ் பூத்த ஜனாதிபதிகளில் ஒருவரான ஜோன் கெனடி, இரண்டாம் உலகப் போரின்போது கடற்படையில் பணிபுரிந்தவராவர். அப்போரில், ஜப்பா



முதலாம் இஸ்ரேல் அரபு யுத்தத்தின் போது வெற்றி கொடி நாட்டும் இஸ்ரேலிய படையினர் 1970




தாயகம் நோக்கிய பயணத்தில் ஹவானா கப்பலில் இஸ்ரேலிய அகதிகள் 1945



நாஜிக்களின் யூத மக்கள் மீதான படுகொலை 1939



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னின் தாக்குதலுக்குள்ளான அமெரிக்க கடற்படைகப்பல் ஒன்றிலிருந்த தனது சக கடற்படை வீரர்களைக் காப்பாற்றியதற்குப் பாராட்டப்பட்டவர் ஆகும்.

இவ்வாறு ஆயுதப்படையில் சேவை ஆற்றியவர்களைத்தவிர நாட்டின் உளவு சேவையில் பணியாற்றுபவர்களும் அமெரிக்காவின் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்பவர்களில் முக்கிய இடம் பெறுகின்றனர். இவர்கள் தேசத்தின் 'நலனுக்காக' முழுமையாகச் செயற்படுகின்றமை காரணமாகவே இவர்கள் இதனை அடைய முடிகின்றது. அண்மைக்கால அமெரிக்க ஜனாதிபதிகளில் ஜோர்ஜ் புஷ், றொனால்ட் றீகன் போன்றவர்கள் அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி ஐ ஏ யுடன் நெருக்கமான தொடர்பும், அதில் முக்கிய பொறுப்பும் வகித்தவர்களும் ஆகும்.

ஆனால், இது போன்றவை தனியாக அமெரிக்காவிற்கு மட்டும் உரியதல்ல. பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஆண்கள் அனைவரும் — தமது நாட்டின் ஏதோ ஒரு படையில் அனேகமாக கடற்ப்படையில் பணிபுரிபவர்களாகவே உள்ளனர். இது அவர்களின் கௌரவத்திற்கானதும், பதக்கப் பட்டியலுக்கானதுமான தொரு நடவடிக்கையாக இருப்பினும்கூட, இதில் ஆபத்துக்கள் இல்லாமலும் இல்லை. 1975 இல் போக்லண்ட் போரின் போது, பிரிட்டன் கடற்படை உலங்கு வானூர்தியொன்றில் போக்லண்டில் தரையிறங்க முற்பட்டபோது ஏற்பட்ட விபத்தில் இருந்து இளவரசர் 'அன்ரூ' மயிரிழையில் உயிர்தப்பியிருந்தார்.

இது ஒருபுறம் இருக்க தமக்கு என ஒரு நாடு தேவை எனப் போராடி பெரும் இரத்தம் சிந்தி நாடு ஒன்றை இஸ்ரேலியர் ஸ்தாபித்தனர். இதன் பின்னர் இஸ்ரேலுக்கு தலைமைப் பொறுப்பேற்ற பலர் விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்றவர்களே ஆகும். ஒருவகையில் இவர்கள் தேசத்தின் தலைவர்களாக வருவதற்கு அவர்கள் தமது தேசத்திற்கு ஆற்றியதொண்டே அடிப்படையில் இருந்தது.

**சிறுபான்மை இனம் ஒன்றை ஜனநாயகம் என்ற ரீதியிலோ அன்றி வேறு எந்த வடிவிலோ ஆட்சியில் இருக்கும் பெரும்பான்மைச் சமூகமானது ஒடுக்க முனைகையில் சிறுபான்மை இனமானது தாம் உயிர்வாழ்வதற்காகப் போராடவேண்டியுள்ளது. அப் போராட்டத்தில் வயது, பால் வேறுபாடு இன்றி சிறுபான்மை இனம் ஏதோ ஒருவகைகளில் போராட்டத்தில் பங்கு கொண்டே ஆக வேண்டும்**

இதேவேளை, தமது தேசத்தின் நலன்கருதி அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகளில்கூட, ஆயுதப் பயிற்சி என்பது ஓர் அவசியமாக்கப்பட்டதொன்றாகவே உள்ளது. அதாவது இளைஞர்கள் எவ்வேளைகளிலும் இராணுவத்தில் சேவையாற்றத் தயாராக இருக்கும் வகையில் பயிற்றப்படுகின்றனர்.

இதேவேளை, இஸ்ரேல் போன்று என்றும் யுத்தத்திற்குத் தயார்நிலையில் இருக்கும் நாடுகளில் சகலருக்கும் இராணுவப்பயிற்சி என்பது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. 18 வயதில் இருந்து 26 வயதிற்குள் ஆண்—பெண் இருபாலாரும் இராணுவத்தில் சேவையாற்றுதல் வேண்டும். இதில் ஆண்கள் 30 மாதங்களும், பெண்கள் 24 மாதங்களும் சேவை புரிய வேண்டும். இச்சேவையில் ஈடுபடும் அவர்கள் அதன் பின்னர் தமது விரும்பிய துறையில் சேவை புரிகின்றனர். ஆனால் இஸ்ரேலைப் பொறுத்து இது அதன் பாதுகாப்பிற்கு அவசியமானதொன்றாகவே உள்ளது.

இஸ்ரேல் அரசு இன்று கைக்கொள்ளும் கொள்கைகள், நடவடிக்கை என்பன குறித்த வாதப்பிரதிவாதங்கள் ஒருபுறம் இருக்கட்டும். அதாவது அவை நியாயப்பாடானவையா? அவற்றுடன் எமக்கு உடன்பாடு உள்ளதா? என்பது ஒரு புறம் இருக்க இஸ்ரேல் என்ற நாடு ஒன்று நீடித்து வாழ வேண்டுமானால் அது தன்னை எப்பொழுதுமே ஓர் யுத்தத்துக்குத் தயாராகவே வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இஸ்ரேலை சூழவுள்ள நாடுகள் அனைத்தும் அண்மைக்காலத்தில் ஒரு சில நாடுகள் மாறியிருக்கலாம்—பகைகொண்ட நாடுகளே ஆகும்.

அதாவது சுமார் 50 இலட்சம் மக்களைக் கொண்ட இஸ்ரேலைச் சூழ இதைவிட அதிகமாக மக்கள் தொகையைக் கொண்ட 22 அரபு நாடுகள் உள்ளன. இவையாவும் இஸ்



ஜெயசிக்குறுய் எதிச் சமர் வெற்றிவிழா
1998



கிளிநொச்சி இடப்பெயர்வு
1996



குமுதினிப் படகு படுகொலை
1985



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரேலுடன் வரலாற்றுப்பகை கொண்டுள்ளன. அதிலும் பெற்றோலியத்திற்கு சர்வதேச சந்தையில் கிடைக்கப்பெற்ற முதன்மையினால் இவற்றில் பல பெரும் செல்வந்த நாடுகளாகவும் உலக அரசியலில் செல்வாக்குதாக்கம் புரியக்கூடிய நாடுகளாகவும் மாறிவிட்டன.

இந்த நிலையில் இஸ்ரேல் தனது பாதுகாப்பை உறுதி செய்வதாயின் அதன் மக்கள் தொகையில் பெரும்பாலானோர் ஆயுதப்பயிற்சி பெற்றிருப்பதும், யுத்தத்திற்கு என்றும் தயார் நிலையில் இருப்பதும் தவிர்க்கப்பட முடியாதவையாகவே உள்ளன. ஆனால், இவ்வாறானதொரு, சூழ்நிலையில் இஸ்ரேல் மட்டுமல்ல, பகை நாடுகள் பெருமளவில் கொண்ட சிறிய நாடுகளுக்கும் இதைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதாகவும் இல்லை.

ஆனால், இது தனியாக தமது தேசத்தின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் சிறிய நாடுகளுக்கு மட்டும் உதாரணமாக கொள்ளப் படக்கூடியவை அல்ல. ஒடுக்கப்படும் சிறுபான்மை இனத்தவர்களுக்கும் முன் உதாரணமாகக் கொள்ளத்தக்கவையாகும். இது கட்டாய ஆயுதப்பயிற்சி என்றோ அன்றி இராணுவப் பயிற்சி என்றோ அர்த்தப்படுத்தக் கூடியதல்ல. அது தவறான கூற்றுக்களாகும்.

சிறுபான்மை இனம் ஒன்றை ஜனநாயகம் என்ற ரீதியிலோ அன்றி வேறு எந்த வடிவிலோ ஆட்சியில் இருக்கும் பெரும்பான்மைச் சமூகமானது ஒடுக்க முனைகையில் சிறுபான்மை இனமானது தாம் உயிர் வாழ்வதற்காகப் போராடவேண்டியுள்ளது. அப் போராட்டத்தில் வயது, பால் வேறுபாடு இன்றி சிறுபான்மை இனம் ஏதோ ஒருவகைகளில் போராட்டத்தில் பங்கு கொண்டே ஆக வேண்டும். அப்பொழுது தான் ஒடுக்குமுறையாளர்கள் எதிர்கொள்ளத்தக்க வலுவை சிறுபான்மை இனம் பெறமுடியும்,

ஆட்சியிலுள்ள பெரும்பான்மை இனம் அரசின் ஆசிர்வாதத்துடன் போதிய ஆயுத, நிதிவளத்துடனும் ஒடுக்கு முறையில் ஈடுபடத்தயாராகின்றது. ஆனால் சிறுபான்மை இனத்தைப் பொறுத்து அவை சாத்தியமானவை அல்ல. ஒப்பீட்டு ரீதியில் ஆளணிக் குறைவு மட்டுமல்ல. நீண்டகாலமாக ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்து வருவதினால் காணப்படும் பொருளாதார நலிவில் இருந்து ஒடுக்குமுறைக்கு எதிரான போருக்கான ஆயுதப்பற்றாக்குறைவரை நெருக்கடிகள் பலவாகும். ஆனால், இவை எவ்வாறு இருப்பினும் ஒடுக்கு முறையாளர்கள் இராணுவத்தை ஏவிவிடும் போது தமது எதிர்ப்பைச் சிறுபான்மையினர் ஆயினும் ஒரே நிலையில் காட்டினால் அதனை பெரிய இராணுவத்தாலும் தோற்கடித்து விட முடியாது.

இவ்வாறான நிகழ்வுகளே வியட்னாமிலும், ஆப்கானிலும் ஏன் அமெரிக்காவிலும் நடந்தது. உயர்ந்த வளங்களையும், மிகப் பலமானதுமான இராணுவ வளங்களைக் கொண்ட அன்றைய உலக வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்க்க முற்பட்டதினால் தோல்விகாண வேண்டிவந்தது. இதேபோன்றே 18ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் அமெரிக்காவிலும் நிகழ்ந்தது. அன்றைய வல்லரசும், பெரும் கடல் பலம் பெற்றதுமான பிரிட்டன் போரில் தோல்வியுற்று அமெரிக்காவில் இருந்து வெளியேற வேண்டிவந்தது.

> உயர்ந்த வளங்களையும், மிகப் பலமானதுமான இராணுவ வளங்களைக் கொண்ட அன்றைய உலக வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்க்க முற்பட்டதினால் தோல்விகாண வேண்டிவந்தது.

அதாவது ஏனெனில், மக்கள் சிறுபான்மை இனத்தவர்கள் என்பதாக இருந்தாலும் அனைத்து மக்களும் போராட்டத்தில் பங்காற்றும் போது தமது தேசத்தில் அதாவது தாயகத்தில் ஆக்கிரமிப்பு இராணுவத்தைவிட அவர்கள் சிறுபான்மையினராக இருக்கப் போவதில்லை.

அதாவது ஆக்கிரமிப்பாளர்கள் ஒரு லட்சம் இராணுவத்தினையோ அன்றி இரண்டு லட்சம் இராணுவத்தினையோ யுத்தமுனைக்கு அனுப்பலாம். ஆனால் இது போராடும் மக்கள் கூட்டத்தின் எண்ணிக்கைகளைவிட விசேடமாக போராடும் வலுவுள்ள மக்கள் கூட்டத்தினைவிட அதிகரித்த தொகையாக இருக்க முடியாது.

அத்தோடு போராட்டம் சிறுபான்மையினரின் தாயகத்தில் இடம் பெறுவதினால், இங்குள்ள அனுகூலங்களை ஆக்கிரமிப் பாளர்களைவிட அவர்கள் கண்டுகொள்வது இலகுவானதாகும். அதாவது தமது தாயகத்தில் அவர்கள் பரீட்சையம் மிக்கவர்கள் ஆகையினால் தமது பாதுகாப்பை உறுதி செய்வதும் இலகுவானதாகும்.

இந்த நிலையானது ஈழத்தமிழ் மக்களுக்கும் பொருத்தப்பாடானது. சுமார் ஒருலட்சம் ஆயுதப் படையினர் வடக்கு — கிழக்கில் நிலைகொண்டிருப்பதாக வைத்துக்கொண்டாலும் கூட சுமார் 30லட்சத்திற்கும் மேற்பட்ட வெளியேறிய தமிழர் தவிர்த்து மக்கள் வாழும் பூமியில் பல லட்சம் மக்கள் போராடக்கூடிய வலுவுடையவர்களாக உள்ளனர். இந்த நிலையில், சிறீலங்கா இராணுவத்தை தமிழ் மக்கள், வெற்றிகொள்வது தோற்கடிப்பது என்பது மிகப்பெரும் காரியமாக இருக்கமாட்டாது.

இந்தவகையில், சிறுபான்மை இனம் ஒன்று ஆக்கிரமிப்பாளர்களின் அச்சுறுத்தலுக்கு அஞ்சிப்போராடாது ஒதுங்குவது தவறான அச்சத்தில் ஏற்பட்டதாகும். இது தனது தேசத்திற்கும், மக்களுக்கும் செய்யவேண்டிய கடமையை நிராகரிப்பது போன்றதுமட்டுமல்ல, தமது தேசத்தை தாமே ஆக்கிரமிப்பாளருக்கு தாரைவார்த்துக் கொடுப்பதற்கும் சமனானதாகும்.

**— ஜெயராஜ்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்கொத்திப் பாம்புகள்

கௌதம புத்தரின்
வாயிலிருந்து
கனிவாய் உதிர்ந்த
வார்த்தைகள்
காற்றிலே அடித்துச்
செல்லப்படும்
சருகுகளாய் இன்று.

போரின் கொடுமைகளைத்
தாங்க முடியாது
புழுக்களாய் நெளிகின்ற
மக்களின்
இரத்தச் சகதிக்குள்
புதைத்த கால்களை வெளியே
எடுக்க முடியாது
திண்டாடுகின்றன
'தேசத்தை நேசிக்கும்'
கட்டாக்காலி நாய்கள்.

மக்களின் வேதனைகளைப்
புரியாது
நாளொன்றுக்கு
விதம் விதமான முகங்களுடன்
மலருகின்ற
வெண்தாமரைப்பூவில்
போருக்கு புத்துயிர் அளிக்க
புதிதாக வந்தமர்கின்றன
பச்சைநிறம் பூண்ட
கண்கொத்திப்பாம்புகள்.

சமாதானப்புறாக்கள்
சாகடிக்கப்பட்ட நிலையில்...
கண்கொத்திப்பாம்புகள்
தாமரை இதழ்களின் அழகில்
தங்களைப்
பறிகொடுத்துவிட்டு
திரும்பவும் இங்கே
கக்குகின்றன
கடந்த காலத்தில்
தங்களின் நெஞ்சினில்
தேக்கி வைத்த
இனவாத நஞ்சுகளை.

**அலெக்ஸ்**
**பரந்தாமன்**



# வாழ்க்கை வாழ்வதற்கே

சோகத்தை சுமந்து.. சுமந்து...
சுரணையற்றுப் போனது
போதும்.

இனி வாழும் நாட்களை நினைத்து
மனதில் வைராக்கியம் கொள்.

இடைவிடாது வந்து
உன் இதயத்தில் செருகிக்
கொள்ளும்
இன்னல்களைத் துடைத்தெறி.

விரக்தியுற்று அழுவதைவிட
விடிவுக்கு வழி என்னவென்று
வினாக்களைத் தொடு.

அப்போது...
மின்னி மறையும் ஒளிபோல
அதில் தெரியும்
உனக்கொரு வழி.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நீரின்றி பயிர் அழிதல் எவ்வாறு நிகழும்

**முத்தையன் கட்டு நீர்ப்பாசன பிரிவிற்குள் ஒருபார்வை செலுத்தப்படும் இவ் ஆக்கத்திலே, நீரைப் பேணும் வழிவகையின் மறுபக்கம் என்ன என்பதும் சொல்லப்படுகின்றன.**

-பாணு-

நீரைப் பயன்படுத்தும் வழிவகையில் பல மாற்றங்களை ஏற்படுத்திப் பசுமை எழுச்சியை காண வேண்டிய வேளை எம்மை நெருங்கியுள்ளது.

பருவமழை தவறி, குளங்கள் வற்றிப்போன நிலையில் வன்னி நிலம் பயிருக்காகப் போராடும் வேளையில், வானம் பொய்க்காது மழை பொழிந்தாலும் குளங்களில் நீரைத் தேக்கமுடியாத நிலையிலேதான் நாட்கள் நகர்ந்து வருகின்றன. நடப்பு நிலைமையும் அவ்வாறே நிகழும் என்பதை நினைவில் நிறுத்துவோம்.

சிறீலங்கா அரசின் திட்டமிட்ட பாராமுகத்தினால் இற்றைக்கு இருபது வருடங்களாகத் தூர்ந்த குளங்களும், நீர்பாயாத சிற்றாறுகளுமே வன்னிநில மக்கள் வாழிடங்களில் இப்போது பலவாக இருப்பவையாகும்.

இவ்விருள் வேளையிலும் ஊக்கமுள்ள விவசாயிகளின் உறுதுணையோடும், தமிழீழ மக்களுடைய ஒத்திசைவோடும், சிறுசிறு குளங்களிலும் நீரைத் தக்கவைக்கும் முயற்சியில் சென்ற ஆறு ஆண்டுகளாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டு வரும் உண்மையை மறுக்க முடியாது.

இது இவ்வாறாக, வானத்து நீரை நம்பியிருக்கும் குளங்களே வன்னி நிலத்துக் குளங்கள் என்பதே யதார்த்தம். பாலியாறு மட்டுமே இதற்கு விலக்கு.

சிறு முன்னுதாரணமாக முத்தையன் கட்டிய முத்தையன் கட்டுக் குளத்திற்குட்டபட்ட நீர்ப்பாய்ச்சல் நிலத்தை எடுத்துக்கொள்வோம்.

கரைதுறைப்பற்று, ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு பிரதேச அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்கள், அத்துடன் முல்லைத்தீவு நிர்வாக மட்டத்தில் மூன்றில் இரு பகுதிகளை உள்வாங்கிய நீர்ப்பாசனப் பிரிவே, முத்தையன்கட்டு நீர்ப்பாசனப்பிரிவு நீர்ப்பாசனப் அலுவலகள்) என்ற பெயரில் குறிக்கப்படுகின்றவையாகும்.

நீரேந்தும் பிரதேசமாக ஏறக்குறைய 532.0 சதுர மைல்கள் கொண்ட முத்தையன்கட்டு நீர்ப்பாசனப் பிரிவில், சூரியனாறு, சவராறு, நாயாறு, கோடாலிக்கல்லுஆறு, பேராறு, பாலியாறு, மருதப்பூவல்லிஆறு, தோராவில்ஆறு, பிரமந்தன்ஆறு, நெத்தலிஆறு கனகராயன் ஆற்றின் பகுதி ஆகியவை அடங்கும்.

இவ் ஆறுகளின் படுக்கையில் அமைந்த குளங்களில் ஏறக்குறைய 150 குளங்கள் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளவை. ஏனைய 62 குளங்கள் பயனுள்ளவையாயினும் நீண்ட காலப் பேணலற்ற காரணத்தினால் அவைகளும் நீரைத் தேக்கிவைக்கும் திறன் குறைந்தவையாக மாறும் நிலையே வரும் காலத்தில் ஏற்படும். நீண்ட போராட்டம் நடத்தும் நிலையுள்ள நிலத்திடையே இதுபற்றி விழிப்புணர்வு விவசாயிகளுக்கு இருக்க வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீரை எவ்வாறு பயன்படுத்துவது, நீரை சிக்கனமாகப் பேணுவது என்பதை விவசாயிகள் தெரிந்துகொண்டு, அவ்வாறு நடக்க வேண்டிய தேசக் கடமை இக் காலத்தில் நம்மிடையே ஏற்பட்டு வருகிறது.

நீர், செலவில்லாமல் கிடைப்பது என்ற எண்ணம் சாதாரணமாக தமிழ் மக்களிடையே பரவியுள்ளதை எவரும் அறிவர்.

வளம் மிகுந்த நாட்டை வாழ்விடமாகக் கொண்ட ஓர் பரம்பரை என்பதால் எம் மக்களிடம் இவ் எண்ணம் ஆழப்புதைந்து போயிற்று.

நீண்டகாலமாக அதாவது ஆறு நூற்றாண்டு காலமாக எமது தமிழீழ மக்கள் சந்திக்காத வாழ்வியல் சந்திப்புக்களை இக் காலத்தில் சந்தித்து வருவதை சரித்திரம் மறவாது.

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்ற சொற்தொடர் நீர் வீண் விரயமாவதை விவசாயிகள் எவ்வாறு தடுப்பது என்ற கருத்தை மாத்திரம் கொடுத்திடமாட்டாது.

மறுவளமாக இச் சொற்தொடரின் அர்த்தமானது குறைந்த நீரில் எமது மக்களுக்குத் தேவையான நிறைந்த இலாபம் தரக் கூடிய பயிர்களை எவ்வாறு உருவாக்குவது என்ற உட்பொருளையும், அறிவையும் ஊட்டும் சொற்றொடராகவே மக்களிடையே பொதிந்துகொள்ள வேண்டும் இது காலத்தின் தேவை.



உலகின் நாடுகளில், உச்சமான நிலையிலுள்ள நாடுகளில் சிலவற்றில் வற்றாத ஆறும் வளைந்தோடும் நதியும் பெருகியிருக்கவில்லை. மாறாக, ஆங்காங்கே பாலைவனங்களே பரந்துள்ளன.

ஆயினும், அப்படியுள்ள இடங்களிலெல்லாம், ஆச்சரியப்பட்டு மூக்கு நுனியில் விரலை வியக்கும்படி வளர்ந்திருப்பவைகள் பசுந்தரைகள், பாலைவனப் பசுந்தரைகள், இவற்றை மக்களே வானுயர வளர்த்து வைத்துள்ளார்கள் என்பதை இன்று நாம் அறிகின்றோம்.

இது எவ்வாறு சாத்தியமாயிற்று என்று உலகமே வியக்கும் அளவிற்கு அவர்கள் முன்னேறியிருக்கையில் பாலைவனத்தின் சாயலிலே ஆயிரத்தில் ஒரு பங்கு சாயல் கூடப் படியாத வன்னி நிலப் பரப்பில் நீரின்றி அழிதல் எவ்வாறு நிகழலாம்?



சங்க காலத்திலும், அதன் பின்னரும் குறிப்பாக அந்நியர் வருகைக்கு முன்னர் நீரைப் பாடாதவர்கள் இருக்கவில்லை. நீரையும், நிலத்தையும், நெல்லையும் நாட்டின் உயிராக எண்ணி வாழ்ந்த சம்பவக் கோவைகள் சரித்திரமாக இருக்கின்றன.

நீரைப் பேணுதல் ஒரு பண்பாடு என்பதும், பண்பாட்டு முதிர்ச்சியின் மூலக்கூறுகளில் ஒரு பிரதான அம்சம் என்பதும் உணரப்படும்போது, பொருண்மிய வளர்ச்சி தானாக ஓர் இனத்திடையே மலர்ந்துவிடும் என்பது மனத்திடை இருத்தவேண்டிய விடயமாகும்.

நீரைப் பேணுவதை மக்கள் பெருமையைக் கருதியபடியினால்தான் மக்களின் ஆதரவைப்பெற மன்னன் குளங்களைக் கட்டினான். கோயிலும் குளமும் மன்னன் கடன் என்று வழமை ஏற்பட்டது. ஊரிலே ஊருணி அமைத்தாலும், கிணறு கட்டுவதும் புகழ்மிக்க அறச்செயல் என்ற ஓர் பாரம்பரிய கௌரவம் ஏற்பட்டது.

இவ் வகையான ஓர் நிலையில், ஏற்பட்ட குளங்கள்தான் முத்தையன்கட்டுக்குளம் போன்ற ஏனைய குளங்களாகும்.

சூரியனாறு

நீரேந்தும் பிரதேசம் 29.0 சதுர மைல்

இது பயன்பாட்டில் இல்லை நாவலன் குளம். சிவ ஆலங்குளம், கரம்பன்குளம், புழுதிக்கால் குளம் இவைகள் பயனற்ற நிலையில் இருப்பவை.

சவர் ஆறு

நீரேந்தும் பிரதேசம் 12.0 சதுரமைல்

15 குளங்கள் திருத்தமற்றுப் பயன்படாத நிலையிலுள்ளன. 4 சிறு குளங்கள் பாவனையிலுள்ளவை. ஆயினும் ஒட்டுமொத்தத்தில் இதன் பயன்பாடு குறைவு.

நாயாறு

நீ.பி. 73.0.ச.மைல்

நான்கு சிறு குளங்கள் போக 28 குளங்கள் பாவனைப்படாத நிலையிலுள்ளவை.

இவ்வாற்றுத் திட்டத்தின் கீழுள்ள தண்ணி முறிப்புக்குள வானில் சென்ற 1987–இன் பின் ஏற்பட்ட நீர்க்கசிவு காரணமாக 19 அடி உயரத்தில் நீரைத் தேக்க முடியாமல் 14 அடி உயரத்திற்கு மட்டுமே நீர் தேக்கப்படுகிறது. இதன் அடி நீர் பயன்படாதுபோவது குறிப்பிடத்தக்கது.

கோடாலிக் கல்லாறு

நீ.பி. 29.0.ச.மைல்

இவ் ஆற்றுப் படுக்கையின் கீழ் 29 சிறிய குளங்கள் நீர் வசதியுடன் இருக்க 23 குளங்கள் கைவிடப்பட்ட நிலையிலுமுள்ள மதவளசிங்க குளம், கணுக்பேணிக்குளம் என்பன இவ்வாற்றுப் படுக்கையிலுள்ளவை.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆறில்லா ஊர் பாழ் என்று சொல்லுவார்கள். நீரில்லா நாடு பாழ் என்பதற்கமைய, தமிழீழ நீர் வளத்தைப் பெருக்கிட ஏற்ற செயற் திட்டங்களை வகுத்திட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு எமது ஒத்துழைப்பை வழங்கிடுவோம்



பேராறு
நீ.பி.146.0.ச.மைல்

இவ்வாற்றுப் படுக்கையில் 22 சிறிய குளங்கள் நன்னிலையிலும், 60 குளங்கள் திருத்தமுறாமலும் உள்ளன. பாரிய நீர்ப்பாசனத்திட்டமான முத்தையன்கட்டுக் குளமும் இவ்விடதேயுள்ளது.

முத்தையன்கட்டுக்குளத்து நீர் மட்டம் 22 அடியாக இருந்தபோதும், பருவமழை காரணமாக நீண்ட காலமாக 18 அடிக்குள்தான் நீர் பிடிக்கும். இதனால் இக்குளத்திற்கு அருகாமையிலுள்ள சாளம்பன் என்னும் சிற்றாற்றில் வரும் நீரைத் தேக்கும் திட்டங்களும் முன்னர் விவசாயிகள் ஊடாக வைக்கப்பட்டன.

பேராறு அணைக்கட்டு

முத்தையன் கட்டுத் திட்டத்து நீர் கழிவாகாமல் பேராற்றுக்கு குறுக்கே கெருடமடு என்னுமிடத்தில் அணை மூலம் தடுக்கப்பட்டு சுமார் 100 ஏக்கர் நிலத்தை நீர்ப்பாசன நிலமாக்கவும் திட்டங்களுண்டு.

மருதப்பில்லி ஆறு

நீரேந்தும் பிரதேசம் 6.0 ச.மைல்

இவ்வாற்றுப் படுக்கையின் கீழ் 3 சிறு குளங்கள் திருத்தாத நிலையில் உள்ளன. அத்துடன் இடைக்கட்டுக் குளம் உடைப்பெடுத்திருப்பதால் திருத்தமுடியாத நிலையிலுள்ளது.

பூங்குளம், 10.65 சதுரமைல் நீரேந்தும் பிரதேசத்தைக் கொண்டதாகும். இதுவும் முழுமையான திருத்த நிலையில் இல்லை.

தேராவில் ஆறு

நீரேந்தும் பிரதேசம் 35.0 சதுர மைல்

இவ்வாற்றுப் படுக்கையின் கீழ் சிரட்டை பறிச்சான் குளம் உள்ளது. 17 குளங்கள் இவ்வாற்றுப் படுக்கையில், திருத்தமுறாத நிலையில் உள்ளன. உடையார்கட்டுக் குளம் என்னும் பெயரிய நீர்ப்பாசனத் திட்டமும் இதனுள் அடங்கும்.

உடையார் கட்டுக்குளம்

1993 மார்கழி மாதம் பெய்த பெருமழை காரணமாக முறிப்பெடுத்து வலது கரைத்துருசும் சரிந்தது. இதை மீளவும் சீர்படுத்தி உறுதியாக்குவதனூடாக புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் 1200 ஏக்கர் நீர்ப்பாசனக் காணிகளை உள்ளடக்கிய பகுதி விவசாய நிலமாகும்.

பிரமந்தன் ஆறு

நீ.பி.32.0.ச.மைல்

இவ் ஆற்றுப்படுக்கையின் கீழ் புற்குளம் என்னும் சிறுகுளமும் விசுவமடுக் குளமும் உள்ளன.

நெத்தல் ஆறு நீ.பி.47.0.ச.மைல்

இவ் ஆற்றுப் படுக்கையின் கீழ் 4 சிறிய குளங்கள் கைவிடப்பட்ட நிலையிலுள்ளன.

கனகராயன் ஆறு

இவ்வாற்றின் ஒரு பகுதி சுமார் முத்தையன்கட்டு நீர்ப்பாசனப் பிரிவிற்குள் வருகிறது. இவ்வாற்றுப் படுக்கையின் கீழ் 15 சிறிய குளங்கள் நீர்ப்பாசன வசதிகளுடனுள்ளன. ஏனைய 41 குளங்கள் திருத்தமற்று கைவிடப்படும் நிலையிலுள்ளன.

ஆறில்லா ஊர் பாழ் என்று சொல்லுவார்கள். நீரில்லா நாடு பாழ் என்பதற்கமைய, தமிழீழ நீர் வளத்தைப் பெருக்கிட ஏற்ற செயற் திட்டங்களை வகுத்திட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு எமது ஒத்துழைப்பை வழங்கிடுவோம்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரப் பொங்கல்



இரண்டாயிரம் ஆண்டுப் பொங்கலடி
தோன்றட்டும் ஆயிரம் மங்கலங்கள்
மண்ணாற்றல் யாவுமே மேல்வரட்டும்
மாற்றலர் கெய்யிடர் போய்விடட்டும்

ஆடிய பச்சைக் கதிர்களெல்லாம்
அறுவடை முடிந்து அரிசியாகி
வாடிய வயிறை குளிரவைக்கும்
வளமான தைப்பொங்கல் நாளிதடி

முத்தான நெல்லின் மணிகளோடு
முந்திரிகை வற்றல் சேர்ந்தினிக்கும்
சத்தான பயறும் கலந்தவிந்த
சர்க்கரைப் பொங்கலாய்
வாழ்வினிக்கும்

பச்சை அரிசி பால் பொங்கிடட்டும்
பட்டினி துன்பங்கள் நீங்கிடட்டும்
அச்சங்கள் நீங்கிட ஆண்டு இதில்
ஆதார பொங்கலோ பொங்கிடட்டும்

ஓடிடும் காலங்கள் ஓடிடட்டும்
ஒன்றுமில்லா நிலை மாறிடட்டும்
தேடிய செல்வங்கள் சேர்ந்திடட்டும்
தமிழ்
தேசம் மகிழ்வினில் ஆடிடட்டும்

ஆண்டுக்கொருமுறை வாற பொங்கல்
அடுத்த ஆண்டினில் வரும் பொழுது
மீண்டும் எம்மை நாங்கள் ஆளுகின்ற
மேன்மையுறு நாளாய் தோன்றிடட்டும்

வீட்டுக்கு வீடு நாம் பொங்கிடலாம்
வெற்றி விழாவாகப் பொங்கிடலாம்
நாட்டு விடுதலை கிட்டியதால்
நமக்கது சுதந்திரப் பொங்கலடி

நாவண்ணன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் தன்னுடைய இருப்பிடத்திலிருந்து சைக்கிளைத் தள்ளிக்கொண்டு தெருவுக்கு வந்தான். காலை வெயில் அவனுடைய உடலுக்குத் தெம்பூட்டியது. அவனுடைய முகத்தில் மகிழ்ச்சி தாண்டவ மாடியது. துள்ளிச் சைக்கிளில் ஏறி பெடலை மிதிக்கத் தொடங்கினான்.

முந்த நாள் அவனுக்கு எதிர் பாராத வாய்ப்பு ஏற்பட்டது. அதிகாரியும் அவனுடைய மெய்க்காப்பாளன் ஒருவனும் மட்டும் வீதியில் வந்து கொண்டிருந்தனர். அவன் தயாரானான். வழமைபோலவே அதிகாரி புன்னகைத்தான். அவனும் பதிலுக்குப் புன்னகைத்து விட்டு எண்ணிவிடலாம்.

சனங்கள் களிப்பிழந்து நடமாடிக் கொண்டிருந்தார்கள். ஆமைகளைப்போல தலையை உள்ளிளுத்துக் கொள்வதும் இரு பக்கமும் பார்த்துப் பார்த்து ஊர்வதுமாக இருந்தார்கள்.

அவன் பிரதான வீதியிலிருந்து இருப்பிடத்திற்குச் செல்லும் வீதியில் சைக்கிளைத்

# தோழன்

—பொலிகையூரான்—

அவனுடைய மகிழ்ச்சிக்குக் காரணம் தனக்குத் தரப்பட்ட பணியொன்றை செவ்வனே நிறைவேற்றியதுதான். அந்தப் பணியை நிறைவேற்ற அவன் இரண்டு கிழமைகள் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது,

அந்தப்பகுதி மக்களின் துன்பங்களிற்கு மூலகாரணமாக இருக்கின்ற அந்த இராணுவ அதிகாரியைச் சுடுவதே அவனுக்குத் தரப்பட்ட பணி.

இராணுவ அதிகாரியைப் பல நாட்களாக அவதானித்தான். அதிகாரி செல்கின்ற வீதியிலேயே அடிக்கடி அவன் சென்று வந்தான், இருவரது முகமும் ஒருவருக்கொருவர் பழக்கமாகிவிட்டது. அதிகாரி அவனைப் பார்த்துப் புன்னகைப்பான். அவனும் பதிலுக்குச் சின்னச் சிரிப்பை உதிர்த்து விட்டு நகர்வான்.

அவனால் சில நாட்களாக அதிகாரியை ஒன்றும் செய்ய முடியவில்லை. அதிகாரி பரிவாரமாக இராணுவத்தினர் புடைசூழவே நடமாடினான்.

அவர்களைத் தாண்டிய சில நொடிப்பொழுதில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் இருவரையும் சுட்டு விட்டு வேகமாய் நகர்ந்து மறைந்தான்.

அவன் உள்த் தெருவிலிருந்து பிரதான வீதிக்கு ஏறினான். வீதி களை கட்டியிருந்தது, வீதியை வெள்ளைச் சீருடைகள் நிறைந்திருந்தன. இராணுவ ரோந்து அணியினரின் உந்துருளிகள் இடைஇடையே வேகமாய்க் கடந்தன,

அவன் சென்ற அலுவலை முடித்துக்கொண்டு திரும்பிய போது பகலவன் உச்சிக்கு வந்திருந்தான்.

முன்னர் இந்த வீதியின் இரு பக்கமும் நிழல் மரங்கள் பல நின்றன. அந்த நாட்களில் பகலவன் இந்த வீதியில் அதிகம் ஆட்சி செய்வதில்லை.

ஊருக்குள் புகுந்த அவர்கள் அவற்றைச் சாகடித்து விட்டார்கள். தென்னைகள் பனைகள் மண் கவ்வின. இப்போது வீதியில் நிழல் தரும் மரங்களைவிரல் விட்டு

திருப்பினான், பள்ளிக்கூடம் விட்டுச் சென்றுகொண்டிருந்த சிறுவர்கள் சுற்றிவளைத்து நின்று அந்த நாய்க்குட்டிக்குக் கற்களால் எறிந்து கொண்டிருந்தார்கள். நாய் வலியால் ஈனமாகக் கத்தியது, அவனுக்கு எல்லைமீறிய கோபம் வந்தது. சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு சிறுவர்களை ஓட ஓட விரட்டினான்.

நாய்க்குட்டியின் உடலில் இரத்தச் சிதறல்கள் தெரிந்தன, அவன் இரக்கத்தோடு நாய்க்குட்டியைப் பார்த்தான். அது முனகியபடி வாலையாட்டி அவனுக்கு நன்றியைத் தெரிவித்தது.

அவன் இருப்பிடத்திற்கு வந்துவிட்டான். நாய்க்குட்டிக்கு எறிந்த சிறுவர்களை விரட்டியதை நினைத்துப்பார்த்தான். அவன் கூட சின்னவயதில் நாய்க்குக் கல்லால் எறிந்திருக்கிறான். ஆனால் இப்போது நாய் என்றால் அவனுக்குப் பெரிய துணைபுரியும் தோழனைப்போல முன்னர் நடந்த சம்பவக் கோர்வை அவன் மனதில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படமாக விரிந்தது.

அவன் அந்தப் பகுதிக்குள் வந்தபோது சனங்கள் இராணுவக் கட்டுப்பாட்டையும் மீறி அவனுக்கு ஆதரவளித்தனர். மூன்று வேளையும் அவர்கள் மிகுந்த இன்னல்கள் மத்தியிலும் உணவளித்தார்கள்.

பக்கத்து வீட்டு அக்கா அவன் இருப்பிடத்தில் பலமணி நேரம் அடைந்து கிடப்பதைப் பார்த்துவிட்டு, நூலகத்திலிருந்து புத்தகங்கள் எடுத்து வந்து படிக்கக் கொடுப்பாள்.

அந்த வயதானவர் தன்னுடைய சைக்கிளை அவன் வேலைக்குப் பயன்படுத்தக் கொடுத்துதவினார்.

இப்படியாக அவன் இருந்த வேளையில் அவனுடைய இருப்பிடத்திற்கு அந்த நாய் வந்தது. அவன் தன்னுடைய சாப்பாட்டில் ஒரு பகுதியை அதற்கு வைத்தான். அந்த நாய் அவனோடு நிரந்தரமாகத் தங்கிவிட்டது,

ஒரு நாள் இரவு 7 மணியிருக்கும் தூரத்தே நாய்கள் குரைத்தன. நாய்கள் குரைத்ததன் தொனி அவர்களின் நடமாட்டத்தை உறுதிப்படுத்தியது,

நாய்களின் குரைப்பொலி அண்மையில் கேட்கத் தொடங்கியது. அவன் தன்னுடைய பொருட்களையெல்லாம் எடுத்துக்கொண்டு தடய மழித்து தயாராக இருந்தான். அவனது இருப்பிட நாயும் குரைக்கத் தொடங்கியது. அவன் உசாரானான். அவர்கள் அவனை நெருங்கிவிட்டதை உணர்ந்தான்.

குண்டின் கிளிப்பைக் கழற்றி விட்டு லிவறை இறுகப்பிடித்தபடி இருப்பிடத்தை விட்டு வெளியே வந்தான்.

மறைந்திருந்த அவர்களில் ஒருவன் அவனுடைய கையை எட்டிப் பிடித்தான். அவனுடைய கையில் குண்டைக் கண்டதும் "குண்டைக் கழற்றிட்டான்" எனக் கத்தியபடி அவனுடைய கையை விட்டு விட்டு சற்றுத்தூரம் ஓடி நிலத்தில படுத்தான். மற்றவர்களும் நிலத்தோடு படுத்துக்கொண்டார்கள்.

அவன் அந்த வாய்ப்பை பயன்படுத்தி பக்கத்து வீட்டு மதில்களைத் தாண்டி ஓடினான். இனி அவர்கள் வரமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தியதும் ஒரு வீட்டில் சட்டை ஊசி வாங்கி லிவர் விடுபடாதபடி குத்திக் குண்டைப் பாதுகாப்பு நிலைக்குக்கொண்டுவந்தான்.

ஒரு நாள் கழித்து தனது இருப்பிடத்திற்குச் சென்றான். அவனுக்குக் கவலை முட்டியது. அவனது தோழனாக இருந்து அவன் உயிர் தப்ப உசார்ப்படுத்திய நாய் அவர்களின் சூட்டுக்கு இலக்காகி செத்துக்கிடந்தது,

அவன் தனது இருப்பிடத்தின் பின்புறம் குழி தோண்டினான். தன்னுடைய சறத்தால் நாயைச் சுற்றிக் குழியில் இட்டு குழியை மண்போட்டு மூடினான்.

இருப்பிட முற்றத்தில் பூத்திருந்த பூக்களைப் பறித்து அவ்விடத்தில் வைத்துச் சற்று நேரம் அமைதியாய் நின்றான்.

அவனுக்கு உணவு அனுப்புகின்ற அம்மா வந்திருந்தாள்.

"தம்பி இஞ்சை இனி இருக்காதை. அவங்கள் உன்னைத்தேடி பேந்தும் வருவாங்கள். அண்டைக்கும் தூரத்திலை வாகனத்தை விட்டுப்போட்டுத்தான் உன்னைத்தேடி வந்தவங்களாம்".

அவன் அன்றோடு தன்னுடைய இருப்பிடத்தை மாற்றிக்கொண்டான். தனக்குச் சைக்கிள் தந்த ஐயாவிடம் சென்றான்.


"வா தம்பி என்ன ஏதும் தேவையே?"

"இல்லை ஐயாவேற இடத்துக்கு நான்போறன். அதான் உங்கடை சைக்கிலைத் தந்திட்டுப் போகலாமெண்டு தான் வந்தனான்".

"இல்லை தம்பி நீ வைச்சிரு போற இடத்திலை உனக்கு அங்கை இஞ்சை போக உதவும்".

"அப்ப உங்களுக்கு?"

"நான் எங்கை போறது. அப்படிப் போறதென்றாலும் நடந்து போவன்" அவன் ஐயாவிடம் விடைபெற்று புதிய இடத்திற்குச் சென்றான். அங்கும் உணவு தர அம்மாவும் புத்தகங்கள் தர அக்காவும் கிடைத்துவிட்டனர். ஏன் அவனை எதிரியிடமிருந்துதப்ப உசார்படுத்த நாயொன்றும் மீண்டும் நட்பாகி விட்டது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"விஸ்மனை சுட்டுப் போட்டாங்களாம்" அந்தச் செய்தி காட்டுத்தீ போல் ஊர் எங்கும் பரவியதும், முருகன் கோயில் சப்பறத் திருவிழாவே அச்சாணி உடைந்த தேர்மாதிரி அல்லாடிப்போயிற்றுது சப்பறத்திருவிழா என்றால் பெரும் எடுப்பில் தான் வருடாவருடம் நடக்கிறது. அன்னதானமும் மேளமும் தாளமும் என ஒரே குதுாகலம். நேர்த்திகளும் அன்றுதான் அதிகம் காவடிகள்...கரகங்கள்...தீச்சட்டிகள். ..தீமிதிப்புக்கள்... என சனங்கள் வெளியில் காட்டிக் கொண்டு காவுகளை திறந்த படியே இருந்தார் சாப்பாடுகள் கொடுத்து உறங்கவும் வைத்தார். அவனை ஒரு நேரம் காணாது விட்டால் அவருக்குப் பசி எழாது இமைகள் மூடாது. மனம் இறுகித்தகிக்கும். எங்கேனும் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டால் மூச்சு நீளும். தெருவில் நின்று போறவர்கள் வருகிறவர்களில் விஸ்மனைத் தேடுவார்.

சிவப்பருக்கும் விஸ்மனுக்கும் உள்ள உறவு அந்தப் கோயிலால் ஏற்பட்டது. அவன் அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பாய் வாசிகசாலைகளும் தான் அவர்களை கவனிக்கும்.

அவர்கள் நிரந்தர இடப்பெயப்வாளர்கள் என்றபடியால் கோயில் காணியிலேயே அவர்களுக்குக் கொட்டில் போட்டுக்கொடுத்து, "சங்கர் குடியிருப்பு" என்றுமுதல் மாவீரரான அந்த வீரனின் பெயரையும் குடியிருப்புக்குச்சூட்டினார்கள்.

வருடங்கள் உருண்டோடின. அவர்களின் சொந்த இடம் அந்த ஊராகவே மாறியது, திருமணங்களை அந்த ஊரிலேயே

# ஓர் இரவின் எழுதல்கள்

நிரம்பி வழியும்.

சப்பறத் திருவிழா சிவப்பருடையது சிவப்பற்றை திருவிழா என்றால் உச்சம். சிவப்பற்றை திருவிழாவை வெல்ல எவரும் முடியாது. இன்றும் ஐந்து மூடை அரிசிக்கும், ஆறு கூட்டு மேளத்திற்கும். ஒழுங்குகள் செய்திருந்தார் ஆனால் விஸ்மனின் மடிவு அவரை ஒடித்து விட்டது. விஸ்மன் அவர் அணைத்தபிள்ளை. அவர் மட்டுமல்ல அந்த ஊரும் கொஞ்சக்காலம் அவனை அணைத்துத்தான் இருந்தது.

எங்கள் ஊரின் கோலங்களை மிதித்து, உறவுகளைப் பிரித்து, வசந்தங்களை முகாரிகளாக்கிவிட்டு பசையாய் எங்களின் வாழ் நிலங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்த வெறியர்களின் அச்சங்களுக்குப் பயந்து, அந்த ஊர் விஸ்மனுடனான நெருக்கத்தை கொஞ்சம் குறைத்துக் கொண்டது.

சிவப்பரும் குறைத்தது மாதிரி நியமிக்கப்பட்ட காலத்தில் தான் அந்தக் கோயிலிலும் பிரச்சினை வெடித்தது.

அது நிர்வாகப் பிரச்சினை பதினைந்து வருடங்கள் இருக்கும் பலாலியிலிருந்து சனங்கள் இடம் பெயர்ந்து அந்த ஊருக்கு வர, அவர்கள் முதலில் பாடாசலை ஒன்றில் தான் இருந்தார்கள். முன்பு இடம் பெயர்வுகள் என்றால் விழிகள் அதிசயத்துப்பார்க்கும்; பரிதாபமும் கொள்ளும் இப்ப அப்படியல்ல அனைவரும் துன்பங்களைச் சுமந்த ஏதிலிகள் ஆயிற்று!

வந்த சனங்கள் அந்தஊரில் பத்துக் குடும்பங்கள் தான். அவர்களுக்கு மூன்று நேர உணவையும் கோயில் நிர்வாகமே கவனித்து வந்தது முன்பு அப்படித்தான் ஏதும் கண்ணிவெடிகள் நிகழ்ந்தால் தான் சனங்கள் இடம் பெயர்ந்து வருவார்கள், அநேகம் செய்து அந்த ஊருக்கும் தங்களுக்குமிடையில் ஒரு இறுக்கமான உறவை ஏற்படுத்தினார்கள். அந்த உறவால் முருகன் கோயில் திருவிழா ஒன்றை தங்களுக்குத் தரும்படி கேட்டார்கள். அதனை நிர்வாகத்தில் இருந்தவர்களில் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை.

"இவங்கள் இந்த ஊரில்லை வந்தான் வரத்தாங்கள் இவங்களுக்கு என்னெண்டு எங்கட கோயிலிலை திருவிழாவைக் குடுக்கிறது?" என்று மறுத்தார்கள். ஆனால், சிவப்பரும் அவர்சார்ந்தவர்களும்.

"அவங்கள் இந்த ஊர் இல்லாட்டியும் எங்கட இனம். இஞ்சைதானே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவங்கள் போடுற பணங்களாலும் தான் கோயில் உண்டியல் நிறைஞ்சு கொண்டிருக்குது. அவர்களுக்குத் திருவிழாவில் ஒண்டை குடுக்கத்தான் வேணும்!" என்று



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பிடிவாதமாய் நின்றார்கள்.

பிரச்சினைகள் முற்றியது. சண்டைகளாய் நீண்டது, பிணங்கள் வலுப்பெற்று, ஊர் பிளவுபட்டு திருவிழாவே பெரிசாய் நடவாமல் ஐந்து வருடங்கள் பூசைகளோடே நின்றன அந்த வேளைதான் விஸ்மன் அந்த ஊர் பிரதேசப்பெறுப்பாளனாய் நியமிக்கப்பட்டிருந்தான். அவன் அந்த ஊருக்கு வந்ததும் முதலில் தூக்கியது அந்தக் கோயிலின் நிர்வாகப் பிரச்சனையைத்தான்.

ஒவ்வொரு பிரச்சனையையும் அக்குவேறு. ஆணிவேறாகப் பிரித்து ஆராய்ந்தான். அதன் பெறுபேற்றைக் கூறுவதற்காக சகலரையும் கோயிலுக்கு அழைத்தான். அனைவரும் கோயிலுக்கு வந்தார்கள்.

"நாங்கள் ஒவ்வொருவரும் சின்னப் பிள்ளைகள் மாதிரித் தான் இருக்கிறம். எதையும் சிந்தித்துப் பாக்கிற பக்குவம் எவருக்கும் இன்னும்வரேலை. மனங்களில் பிரதேச வேறுபாடுகளில் வரக்கூடாது. நாங்கள் எல்லாரும் தமிழர்கள், நான் பெரிசு நீபெரிசு எண்டு இருக்காமல் நாடு பெரிசு எண்ட மனப்பான்மை உங்கள் எல்லாருடைய மனங்களிலும் வளரோணும். அவர்கள் இந்த ஊரில் இருக்குமட்டும் ஒரு திருவிழாவைத்தானே கேட்டார்கள். எங்கள் எல்லாருக்கும் ஒற்றுமைவேணும். நாங்கள் ஒன்றாக நிற்காத வரைக்கும் எங்கட நிலம் இருளில் தான் இருக்கும்."

என்று கூறி இன்னும் பல விடயங்களைத் தெளிவு படுத்தினான். அவனின் கூற்றை ஏற்று அனைவரும் ஒற்றுமையாக திருவிழாவை செய்தார்கள்.

விஸ்மன் அந்த ஊருக்கு ஒரு விடிவெள்ளியாக ஒளிர்ந்தான் அவனின் எந்தச் சொல்லையும் ஊர்கேட்கும். அவனை நேசித்ததனால் தான் இன்று அவன் சரிந்து கிடக்க அந்தக்கோயிலும் தனது அலங்காரங்களை இழந்து நிற்கிறது.

ஐயர் மட்டும் கோயிலில் நின்றார். கோயிலில் வேறு எந்தச் சனங்களுமில்லை ஐயருக்கு கோயிலில் பூசைகள் செய்யவே மனம் வரவில்லை. விஸ்மனின் உருவம் அவருள் நிழலாடிக் கொண்டிருந்தது. ஆறு காலப் பூசைகளையும், மணிகள் எழுப்பாது அமைதியாகவே செய்வதாக முடிவெடுத்துக்கொண்டு மூலஸ்தானத்துக்குள் நுழைந்தார்.

இரவுதான் விஸ்மன் சுடப்பட்டான் சுட்டவர்கள் அசிற்றையும் முகத்துக்கு ஊற்றி விட்டுச் சென்றனர். விஸ்மன் மேல் அவர்களுக்கு அளவு மீறிய அவர்கள் முன்பு சுதந்திரமாக இரவுகளில் வீதிகள் எங்கும்



திரிவார்கள்... வீடுகளுள் நுழைவார்கள்... இஸ்டப்படி நடப்பார்கள்... அவர்களின் அந்த அடாவடித்தனங்களை கட்டுப்படுத்துவதற்காக விஸ்மன் விழித்திருந்து அவர்களை தாக்கி விட்டு மறைவான். அவனுக்கு அச்சங்கொண்டு அவர்கள் பெரிசாக இரவுகளில் திரிவதில்லை சிலவேளைகளில் திரிந்தால் திரிந்தவர்களில் சிலர் திரும்பமாட்டார்கள். அந்த ஆக்ரோஷத்தில் தான் அவர்கள் அசிற்றை ஊற்றினார்கள்.

விடிந்ததும், அவனின் இடது காலில் தழும்பும் இடது கையில்லாத உடலும்தான் விஸ்மனை ஊரவர்களுக்கு அடையாளப்படுத்தியது. அந்தத் துக்கச் செய்தியால் அடுப்புகளில் நெருப்புகள் கூட எரியவில்லை. விழிகள் எல்லாம் நனைந்திருந்தன. ஊரைமேம் படுத்தவே தன்னை அர்ப்பணம் செய்தவன் உயிர் இன்றிக் கிடக்கையில் எப்படி ஊர் சிரித்து மகிழும்?

அச்சங்கள் ஒவ்வொரு உணர்வுகளுக்கும் விலங்கிட்டுக் கொண்டிருந்தன. உயிர் ஆசையில் அந்த அணைந்த மெழுகுவர்த்தியை அவர்களால் அழகு படுத்த முடியவில்லை.

சிவப்பருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. விஸ்மனை எப்படியும் போராளிகளிடம் கொடுக்கவேணும் என்ற துடிப்பில் சைக்கிளை எடுத்துக்கொண்டு போராளிகளைத் தேடினார். போராளிகள் நிலைமையை அறிந்திருந்தால் இவ்வளவுக்கு வந்து விஸ்மனை காவிச் சென்றிருப்பார்கள். விஸ்மன் தனியத்தான் அநேகம் திரியிறவன் இடுப்பில் "பிஸ்டல்" இருக்கும் அப்படித் தனிய திரிந்தவேளைதான் சுடப்பட்டிருக்கிறான்.

சிவப்பரின் விழிகளில் போராளிகள் தென்படவில்லை. முன்பு என்றால் ஒரு போராளி மாவீரன் ஆகினால் ஊரே எழுச்சி கொள்ளும். அவனின் வித்துடல் ஊர்வலமாகும். ஊரேகண்ணீர் வடிக்கும். தெருக்கள் எல்லாம் தோரணங்களாலும் கறுத்தக்கொடிகளாலும் துக்கம் கொள்ளும். ஆனால், இன்று எதுவுமற்ற நிலையில் அநாதரவாய் விஸ்மன் கிடப்பது நினைக்க சிவப்பரின் நினைவூற்று வீக்கமெடுத்தது; நொந்து வலிபெருகியது. பெடல்களை வேகமாக மிதித்தார்.

காகங்கள் கரைந்தபடி பறந்து திரிந்தன. அவைகள் துக்கத்தைப் பறைசாற்றுவதாய்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவருக்குப்பட்டது. வேலிகளில் செவ்வரத்தம் பூக்கள் எல்லாம் இதழ்களை விரித்து காற்றுக்கு அசைந்தன. அந்தப் பூக்கள் அவருக்குள் ஒரு புரட்சியை கிளறியது. ரத்தம் சிந்துவதால் தான் விடியலைப் பெறலாம் என்ற யதார்த்தத்தை அந்தச் செவ்வரத்தம் பூக்கள் அவருக்கு உணர்த்தியது.

விஸ்மனை அந்த இடத்திலேயே விதைக்கவேணும். அந்த நிலம் விழுங்கிகள் இல்லாத காலத்தில் அவனுக்கு அதிலொரு நினைவாலயம் கட்டவேணும் என்ற வைராக்கியம் நெஞ்சில் எழ சைக்கிளை வேகமாக ஓட்டி விஸ்மனுக்குப் பக்கத்தில் நிறுத்தினார். அவனுக்குப் பக்கத்தில் சதாசிவம் அழுதுகொண்டு நின்றார். கண்கள் சிவந்து முகம் வீங்கி இருந்தது.

சதாசிவம் ஒருநாள் அந்த இடத்தில்தான் மயக்கமுற்று விழுந்தார் கற்கள் தலையில் குற்றியதால் ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அந்தத் தெருவால் விஸ்மன் வாகனம் ஒன்றில் வந்து கொண்டிருந்தான் அவரைக் கண்டதும் உடனே வாகனத்தை நிறுத்தினான்.

அவர், ரத்தம் பெருக மண்ணில் தோய்ந்து கிடப்பதை பார்க்க உயிர் உருவுவது மாதிரி இருந்தது அவனுக்கு. அவன் அப்படித்தான். தான் நேசித்த மக்களுக்கு இன்னல்கள், இடர்வுகள் நிகழ்ந்தால் துடித்துக் கொள்வான்.

"நானண்ணை இந்த மக்களுக்காகத்தான் ஆயுதம் தூக்கினான் எனக்கு முன்னால எந்தமக்களும் கண்ணீர் வடிக்கக்குடாது." இப்படித்தான் கூறிக்கொள்வான்.

சதாசிவத்தை நெஞ்சோடு அணைத்துத்தூக்கி, வாகனத்தில் ஏற்றிக்கொண்டு போய் வைத்தியசாலையில் சேர்த்தான், ரத்தப் பெருக்கு அதிகமாய் ஏற்பட்டதால அவருக்கு உடனே ரத்தம் தேவைப்பட்டது. சதாசிவத்தின் ரத்தமும் ஒரே பிரிவு என்றபடியால் விஸ்மனே ரத்தத்தைக் கொடுத்தான்.


சதாசிவம் அந்த விடயத்தை பெரியசத்தமாய் சொல்லிக் கத்திக்கொண்டு சிவப்பரைக் கட்டியணைத்தார்.

இப்படித்தான் அந்த ஊரின் ஒவ்வொருவரும் அவனைப் பற்றி ஒவ்வொரு கதைகள் சொல்லுவார்கள்.

"சிவப்பண்ணை விஸ்மனை இப்படி அநாதரவா நாங்கள் விடுறதே?" சதாசிவம் கேட்டார்,

"அதுக்கு நான் ஒரு முடிவு எடுத்துப் போட்டன். சதாசிவம் இந்த இடத்திலயே விஸ்மனை விதைக் கோணும்"

"நாங்கள் ரண்டு பேரும் இதைச் செய்தாலண்ணை நாங்கள் விஸ்மன்ர ஆக்களை அணைக்கிறனாங்கள் எண்டு எங்களுக்கேதும் அவங்கள் செய்து போடுவங்கள். சனங்கள்



எல்லாமண்ணை விஸ்மனை நினைச்சு அழுது கொண்டிருக்குதுகள். நாங்கள் எல்லாச் சனங்களும் சேர்ந்து விஸ்மனை விதைச்சம் எண்டால்..."

"அப்படி எண்டாதசதாசிவம் அவங்கள் வந்தாலும் எங்கட சனங்கள் ஒண்டும் பயப்பிடாமல் உறுதியா நிக்ககோணும். அவங்கள் சுடத் துவக்கைத் தூக்கினாலும் விஸ்மனுக்கும் எங்களுக்குள்ள உறவை அவங்களுக்குச் சொல்லோணும்"

"ஓமண்ணை முந்தி தங்கட இடங்களில் இருந்து செல்லடிச்சு எங்களைச் சாக்காட்டிக்

கருணை ரவி

கொண்டிருக்கேக்கை தானாகவே விஸ்மன் எங்களுக்குப் பதுங்குகுழியள் வெட்டித்தரேக்கைதானே செல்வந்து விஸ்மன்ரை ஒரு கையைக் கொண்டுபோனது"

"ஓமடா சதாசிவம் எங்கட சோத்தில வந்த பிள்ளை இப்படிக் கிடக்க நாங்கள் என்னெண்டு பாத்துக்கொண்டு நிக்கிறது. எங்கட பிள்ளையை நாங்கள் தான் அடக்கம் செய்யணுமெண்டு எங்கட சனங்கள் எல்லாம் அவங்களுக்குச் சொல்லோணும்"

"ஓமண்ணை இந்த விசயங்களை எங்கட சனங்களுக்கு விளங்கப்படுத்தி எல்லாச் சனங்களையும் இந்த இடத்துக்கு அழைக்கோணும். ஒவ்வரு வீடுகளுக்கும் போவம்"

இவருக்கு ஒரு இறுக்கமான முடிவுடன் ஒவ்வொரு வீட்டுப் படலையையும் திறந்தனர். அவர்களின் கூற்றுக்களை அனைவரும் ஏற்றனர். ஐந்து மணிக்கு விஸ்வமனின் இடத்துக்குச் சனங்களை வரும்படி கூறிவிட்டு இருவரும் வந்தனர்.

நேரம் ஐந்து மணியைத் தாண்டியும் எவரும் விஸ்வமனின் இடத்துக்கு வரவில்லை. சிவப்பருக்கு சனங்கள் மேல் எந்தகக் கோபமும் ஏற்படவில்லை. உயிர் பற்றிய ஆசை எவருக்கும் இருக்கும் தான். எப்படியும் விடயம் அறிந்து அவர்கள் வந்தார்கள் என்றால், தங்கள் உயிர்கொல்லிக் கட்டைகளால் சகலரையும் விழுத்தா விட்டாலும், சிலரையேனும் விழுத்துவார்கள். அந்தப் பயங்களில்தான் அவர்கள் வரவில்லை அவர்களின் பயங்களில் நியாயங்கள் இருக்கின்றன என்பதனை உணர்ந்தவருக்கு அச்சம் எழுந்து நெஞ்சில தாண்டவமாடத்தொடங்கியது. அந்த உயிர் குடிக்கும் பேய்கள் அதிகமாக உலாவத் தொடங்கிவிட்டார்கள் அந்த இடத்தில் நிற்க சிவப்பருக்கு ... பயம் பீச்சியடித்தது. சதாசிவத்தையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போனார்.

சூரியன் விழுந்து இருள் நிலத்தைக் கௌவத்தொடங்கியது. நத்துக்கள் மரங்களில் கத்திக் கொண்டிருந்தன. சில்வண்டுகள் இரைந்தன. சிவப்பரின் மனதில் பயம் கருக்கட்டத் தொடங்கியது; நத்துக்கள் கத்தினால் ஏதும் கெடுதிகள் நடக்கும் என ஊர் கதைத்துக் கொள்வதை ஞாபகிக்க.....

விஸ்மனைவிதைக்கவேணும் என்ற துடிப்பால் அந்தப் பயக்கருத்தரிப்பு குறைப்பிரசவமாய் சிவப்பரிலிருந்து சீளாய் வடிய மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு சதாசிவத்தோடு விஸ்மனின் இடத்துக்குச் சென்றார்.

மின்மினிப்பூச்சிகள் விஸ்மன் கிடந்த ஆலமரத்துக்குக் கீழே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. மின்குமிழ்கள் ஒளிவீசும் துயிலுமில்லமாய் அந்த இடம் சிவப்பருக்குப்பட்டது ஒரு புதிய தெம்பு பிறந்தவராய் மண்வெட்டியை எடுத்து விஸ்மனுக்கு அளவாய் குழி வெட்டினார்.

சிவப்பரும், சதாசிவமும் சேர்ந்து விஸ்மனை வெள்ளைச் சேலையால் போர்த்து குழிக்குள் வளர்த்தினார்கள். விழிகள் நனைய மண்ணை அள்ளிப் போட்டார்கள். குழிநிரவியதும் பூவரசம் கதிகால் ஒன்றை சிவப்பர், விதைத்த இடத்தில் ஊன்றிவிடடு வந்தார்; அது உயிர்த்து எந்த நேரமும் துளிர்ப்பாய் நிற்கவேணும் என்பதற்காக!

விடிந்தது வழமையைவிட அந்த விடியல் வித்தியாசமாகவே இருந்தது. மேகம் கறுத்து மெல்லிய காற்று வீசிக்கொண்டிருந்தது அது மழையின் அறிகுறி! நீண்ட நாட்களின் வெய்யிலில் நிலம் இறுகி கிளம்பிய புழுதிகள் எலலாம் அடங்கிப்போகின்றன. இனி தும்மல் தடிமன் எதுவும் வராது. மூக்கை சேலையால் மூடாமல் இனித்திரியலாம் என்ற துளிர்ப்போடு சிவப்பர் விஸ்மனை விதைத்த இடத்துக்குச் சென்றார்.

விதைகுழியின் மேல் ஊன்றிய பூவரசம் கதிகாலைப் பார்த்ததும் சிவப்பர் பூரித்துப் போனார். உடல்ரோமங்கள் எல்லாம் நிமிர்ந்து தேகம் சில்லிட்டன. அப்படி அவர் எந்த நாளும் பூரித்ததில்லை. கதிகால் நிறைய மாலைகள் இருந்தன. யார் போட்டது? நெஞ்சில் வினாக்குறி சிலுவையாய்க் கனத்தது. விதைகுழிக்குக்கிட்ட ஓடினார். விதைத்த இடமெல்லாம் பூக்கள் நிறைந்திருந்தன. இதழ்கள் ஒவ்வொன்றிலும் நீர்த்தெளியல்கள் இரவு மழையோ... பனியோ... எதுவும் பெய்யவில்லை அப்படி என்றால் அந்த தெளியல்கள்....?

இரவு ஊர் எழுந்திருக்கின்றது கண்ணீர் வடித்திருக்கின்றது என்பதனை நினைக்க விஸ்மனின் கனவை இந்த ஊர் சுமப்பதாய் இருந்தது. சிவப்பருக்கு மனம் துள்ளி முருகன் கோயிலுக்கு ஓடினார். இன்று தேர்த்திருவிழா.

# ஜாக்கிரதை

படா...ர்
பெரியதோர் ஓசை
பெறுமதியான ஓர் பொருள்
பலபொருள்களை
கட்டடம் நொருங்கவில்லை
கிபீர் நொருங்கவில்லை
கடற்கலங்கள் கரும்புலித்
தாக்குதலா...
இல்லை
இது வேறு சப்தம்
கதைகள் சிறுகதைகள் காவியங்கள்
காப்பியங்கள்
நாடகங்கள் நாட்டியங்கள்
பாடல்கள் பட்டிமன்றங்கள்
அறிவியல் செய்திகள் ஆத்திரச்
செய்திகள்
அத்தனையும் கேட்கலாம்
கேட்ட ஒலி என்ன?
குப்பையினுள்ளும் குன்றிமணிகள்
கிடக்குமே
எவை குப்பைகள்?
எவை குன்றிமணிகள்?
கொழும்பு சர்வதேச வானொலி,
வானம்பாடி
யாழ் பிராந்திய வர்த்தக சேவை
இவை என்ன?
புலிகளின் குரல்
தமிழீழ வானொலி இவை என்ன?
பத்துமணி ஆகியது
பத்தியது கோபம்
சத்தியப் போரில் மோகம்
அமைதியைக் காணத் தாகம்
முதுமையிலும்
கொதிக்கிறது தேகம்
நேயர்கள்
கேட்டுக்கொண்டிருப்பது
கொழும்பு சர்வதேச வானொலி
நேரம் பத்துமணி செய்திகள்
வாசிப்பவர்
யாரோ ஒருவர்,
நேற்று முன் தினம் பாதுகாப்புப்
படையினருக்கும்
பயங்கரவாதிகளுக்கும்
படா ...ர்!!
செய்தி கைதியாகியது
மானம் என் மகனுக்கு
விளையாட்டு
என்று அன்று சங்ககாலத்தில்
முழங்கிய வீரத்தாயின்
வழித்தோன்றல்
சோழப்பரம்பரை தமிழ்வீரப்
பரம்பரை
அதர்மம் செய்பவன் பயங்கர
சீ...வெட்கம்.
பயங்கரவாதம் என்ற வெய்ய
சொல் செவிபுகமுன்
தள்ளாடும் வயதினிலே
சாய்ந்திருந்த முதியவரின்
ஊன்று கோலால் தட்டப்பட்ட
'சுப்பர் பனசொனிக்' றேடியோ
சுக்கு நூறாகியது,
அது தான் சத்தம்.

-பூநகரி சசிகாந்த்-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம்

# நேர்காணல்

## "போரை ஊக்குவிக்கும் படைப்புக்களை இன்று நாம் பாட வேண்டும்"



இவர் ச.வே.பஞ்சாட்சரம் என்று தமிழ் இலக்கிய உலகம் அறியும், மதிக்கும் கவிஞர். இன்றும் மரபுக் கவிதையின் அடியழிந்து போகாமல் காப்பாற்றும் மரபுக் கவிஞர். ஈழ மண்ணின் மூத்த கவிஞர்களில் ஒருவர். இரண்டு தலைமுறைகளுக்கு முந்திய கவிஞர். இடையறாது இன்று வரை தொடர்ச்சியாக எழுதிவருபவர். கவியரங்குக்கு ஒரு .வே.ப என்று ஒரு காலமிருந்தது. அரசியற் கருத்துக்களையும் சமூக விடுதலை எண்ணங்களையும் அங்கதச் சுவை சொட்டச்சொட்ட இவர் கவிதைகளை அரங்கில் கேட்பது அலாதியான அனுபவம். இனப்பற்றும் மதப்பற்றும் இவரது இரண்டு விழிகள். அன்று தொடக்கம் இன்றுவரை தமிழ்த் தேசத்தின் விழிப்புக்கும் வளர்ச்சிக்கும் தன் பேச்சாலும் கவியாலும் பெரும் பணியாற்றி வருபவர். மரபுக் கவிதையே இவரின் மனதுகிசைவானாலும் புதுக்கவிதையிலும் இவருக்குப் பிரியம்.

இணுவிலில் இருந்து இடம் பெயர்ந்து ஆசிரியராக தற்போது அக்கராயன்குளத்தில் வசிக்கும் இவர் 'புலிகளுடன் வந்தேன்' புலிகளுடன் வாழ்கிறேன், புலிகளுடனே தான் ஊர் புகுவேன்' என்று இன்றும் சொல்லும் இனமானமானவர்.

**உங்கள் இளமைக் காலத்தைப் பற்றிச் சொல்லுங்கள்?**

சுயம்பாடும் ஒரு மாமனுக்கும், பண்டித வித்துவான் – என் குருவான ஒரு மாமனுக்கும் மருமகனாக நிகண்டு படித்த ஒரு பாட்டனுக்குப் பேரப்பிள்ளையாக, தான் ஒரு எழுத்தானாகிவிட வேண்டுமென்று துடித்த ஒரு அண்ணனுக்குத் தம்பியாக, ஓர், ஏழை விவசாயிக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தேன். பாட்டன் பராக்குக் கதைகள் சொல லக்கேட்டும் நாவலர் வெங்கடா சலையரால் தொடக்கப்பட்டு ஆடலும் பாடலும் கூத்துமான கலைகள் மயமாக விளங்கிய இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வி பெற்றதோடு நாதஸ்வரக் கலைஞர்களின் இன்னிசை வெள்ளம் இரவு பகல் பாயும் இணுவிற் சூழலில் ஊறி வளர்ந்ததால் பிஞ்சு வயதிலேயே இசைப்பித்தனாகி மெல்ல மெல்ல இலக்கியம், நாடகம் போன்ற கலைகளை மயங்கி ரசிக்கும் ஒருவனானேன். இடையில் உடுவில் 'மான்' பாடசாலையில் சேர்ந்தமை சாதி உணர்வு மிக்க குடும்பத்துப் பிள்ளையான என்னை பல சமூகப் பிள்ளைகளும் கலந்து பயிலும் அப் பாடசாலை ஒரு சமதர்ம மனித நேயப் பரந்த மனப்பாங்காளனாக உருமாற்றியது. உயர்நிலைக் கல்விக்காகத் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்த சம்பவம், அங்கு ஆண்டுதோறும் நிகழ்ந்த "இலட்சிய ஜெயந்தி" விழாவின் கலை நிகழ்ச்சிகளுடன் வித்துவான் க.வேந்தனார் போன்றவர்களிடம் கற்கக் கிடைத்த வாய்ப்பினால் அவர்களால் என் தமிழ்ப்புலமை பாராட்டப்பட்டமையும் எனக்கு என்னிடம் தமிழாற்றல், கற்பனைத் திறன் என்பன பலர் மெச்சுமளவுக்கு உள்ளன என உணர்த்தி வைத்தன. சங்கீதம் படிக்க முயன்றேன். வறுமை அனுமதிக்கவில்லை. என் அண்ணன் கொண்டு வரும் கதை, கவிதைப் புத்தகங்களையும் வாசிக்கத் தொடங்கி அந்தப் பிஞ்சு வயதிலேயே பாரதியார், பாரதிதாசன், பொன்னிவளவன், சோமசுந்தரப்புலவர் போன்ற கவிஞர்களின் கவிதை நூல்களை வேட்கையோடும் படித்தேன். இவ்வாறு என் இளமைக் காலத்தில் வறுமையோடும் நோய்களோடும் மல்லாடிக் கொண்டும் கலைமயமான உள்ளமும் ஈடுபாடுகளும் என்னுள் மௌனமாகக் கருவுற்றுப் பூத்துக் குலுங்கப் பெற்றேன்.

**இலக்கிய ஈடுபாடு அல்லது**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இலக்கியத்துடனான உறவு எவ்வாறு ஏற்பட்டது?**

படிக்கும் போது ஒரு நாள் சமயபாட வேளை வித்துவான் வேந்தன் வகுப்பில் நுழைகிறார். என் அருகில் இருந்த நண்பன் குணரத்தினம் அவசரமாக ஒரு தாளை எடுத்துக் கொண்டு எழுதுகிறான். "உதென்ன" என்று கேட்டபோது "நான் எழுதிய கவிதை! சேரிடம் திருத்துவிக்கப் போறன்" என்கிறான். எனக்கு ஒரே வியப்பு. "பெரும் கவிஞருகளெல்லோ கவிதை எழுதுவினம்? உன்னைப் போல் என்னைப் போல" என்று தொடர்ந்த என்னை இடைமறித்துப் "பஞ்சர்! இப்படி இப்படி எழுதித்தான் அவையும் கவிஞரானவை. நல்ல தமிழ்ப்புலியான – ரசிகனான நீர்கூடக் கவிதை எழுதலாம்!" என்கிறான். "எப்படி எழுதுகிறது?" என்று நான் கேட்க "உமக்கு ரசிப்பான ஒரு விசயத்தைப் பற்றி நல்ல இரவுத் தனிமையில் எழுதிப்பாரும் – பாட்டுப் பாய்ந்து கொண்டு வரும்" சொல்லிவிட்டு அவன் ஆசிரியரிடம் சென்றுவிட்டான். அன்றே இரவுப் பாடங்களை படித்துமுடித்து, வீட்டில் எல்லோரும் உறங்கிவிட்ட நிசப்தமான நள்ளிரவில் தாளையும் பேனாவையும் கையில் எடுத்தேன். "அடக்கமுடை ஆரணங்கே! என் அன்புக்காதலியே!" எனத் தொடங்கி "அன்ன நடையாளே! நுடங்கும் இடையாளே!" என்று முன்னேறி "தூணாயிருந்தவன் நான் நொய்ந்து – மெலிந்து தின்று துரும்பாகி நிற்பதற்குக் காரணம் நீ அறியாயோ?" என்று என் ஆக்கம் ஒரு பக்கம் நிறைந்ததும் பூர்த்தியானது. படித்துப் பார்த்த எனக்குத் தலை கால் தெரியாத புளுகம். அப்படியானால் நானும் கவிஞனா? என்ற வினா என்னிதயச் சுவரெங்கும் எதிரொலித்தது. மறுநாள் இப்பாடல் வகுப்பில் சக மாணவர்களால் படித்து இரசித்துப் பாராட்டப்பட்டது எனக்கு மேலும் தன்னம்பிக்கையைத் தந்தது.

இன்னொரு நாள் ஆங்கிலப் பாடநேரம் Love என்ற ஆங்கிலக் கவிதை ஆசிரியர் சி.முருகவேள் வாசித்து விளக்கி முடிக்கிறார். (அவர் நல்ல கவிதை ரசிகன். பாரதிதாசனின் கம்பீரமான கவிதைகளை வகுப்பில் கொண்டுவந்து வாசித்துக் காட்டி எங்களைக் கவிதை ரசிகர்களாக வளர்த்து வந்தவர்) அன்று "எங்கே இப்ப படித்த இந்தக் கவிதையின் முதல் செய்யுளைத் தமிழில் யாராவது மொழி பெயர்த்துக் காட்டுங்கள் பார்ப்பம்" என்றார். நான் சில நிமிடங்களுள் "வாசித்துக் காட்டவா சேர்?" என்று எழுந்து நின்றேன். அவர் வியப்போடு என்னைப் பார்த்தபடி "சரி சரி வாசி" என்றார்.

"குன்றின் சாரலில் வழியதனருகில்
நின்று சிதைந்த சமாதியின் மருங்கில்
அன்றொரு நாள்நான் கழித்த தோர் மணியை
என்றுமென் சிந்தையில் தேக்கி மகிழ்வேன்"

நான் பாடி முடிக்கவில்லை. "எடே பஞ்சாட்சரம்!" என்று பிரமித்தவர், "நீ மின்னப் போகிறாயடா!" என்று ஆசி கூறாமல் கூறிவிட்டார். அன்றிலிருந்து பல கவிதைகளை எழுதிப் பார்த்தேன். முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'அல்லி' என்ற மாத சஞ்சிகையில் நான் அனுப்பிய "செந்தாமரை மலரே" என்ற கவிதை வெளிவந்தது கண்டு ஊக்கம் பீறிட தொடர்ந்து இலங்கையின் நாளிதழ்கள் வார, மாத சஞ்சிகைகளில் எழுதுவது மட்டுமன்றி நூற்றுக் கணக்கான கவியரங்குகளிலும் பங்கு பற்றினேன். எனக்கென ஒரு ரசிகர் கூட்டமே உருவாகிவிட்டது.

**ஈழத்து இலக்கியம் கடந்த 50 ஆண்டுகளிலும் சமூக அரசியல் தளங்களைப் பிரதிபலித்தே வந்துள்ளது. நீங்கள் எழுதத் தொடங்கியபோதிருந்த இலக்கியக் கோட்பாடுகள், போக்குகளில் உங்களின் ஈடுபாடுகள் எப்படி இருந்தன?**

இலங்கை சுதந்திரம் பெற்றபின் மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது தமிழினத்தின் தலைவர்கள் (தந்தை செல்வநாயகம் தலைமையில்) அமைத்த சமஷ்டி அல்லது தமிழரசுக் கட்சி அந்தக் காலத்தில் ஈழத்துத் தமிழ்மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிற்று. தமிழர் குறைந்த பட்சம் பிரதேச சுயாட்சியாவது பெறவேண்டும் என்ற கொள்கையுடைய எழுத்தாளர்களே 'ஈழகேசரி' 'சுதந்திரன்' பத்திரிகைகளில் இன உணர்வுக் கவிதைகளை எழுதி வந்தனர். அரசியல் கலவாத தத்துவ, சமூக சீர்திருத்தப் படைப்புகளும் இன உணர்வுக் கவிதைகளை எழுதி வந்தன. சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது இடதுசாரி எழுத்தாளர்கள் ஏராளமாகத் தோன்றினர். தென்னிலங்கையிற் போல் இன்னும் மேலாக இடதுசாரிக் கொள்கைகளை ஈழத்தமிழ் மக்களிடையே பரப்பும் முயற்சிக்கு இலங்கை அரசும் சீனா, சோவியத்யூனியன் போன்ற நாடுகளும் வழங்கிய நிதியுதவிகள் இவ்வெழுத்தாளர் வெளியீட்டு வசதிகளைப் பெருக்கியளிக்க அணிதிரண்ட அந்த எழுத்தாளர்குழு தம் முதுகில் தாமே தட்டிக்கொள்வது போல, அந்த அணிக்கு எல்லா எழுத்தாளர்களையும் குறுக்குவழியில் கவர்ந்திழுக்கும் கபட நோக்கம் கொண்டு தமக்குத் தாமே "முற்போக்கு எழுத்தாளர் சங்கம்" என்று பெயர் சூட்டிக் கொண்டு இலக்கிய முயற்சிகளில் மும்முரமாக இயங்கியது. இவ்வணியின் கற்பனாவாதங்களில் மயங்காமல் இந்த நாட்டின் பேரினவாதிகள் சிறுபான்மையினரை அழித்து ஏக சிங்கள இலங்கையாக இத்தீவை மாற்றும் வெறிகொண்டவர்கள் என்ற தெளிவோடு, இடதுசாரி ஊதுகுழல்களை அம்பலப்படுத்தி தீர்க்க தரிசனத்தோடு, தமிழினப் பண்பாடு கலைத் தனித்துவங்களுக்கு அழுத்தங்கொடுத்து எழுதிய எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர்களே "தமிழெழுத்தாளர் சங்கத்தினை"ச்சார்ந்தவர்கள். இந்தக் கால கட்டத்தில் தமிழீழத் தாயகப் பிரதேசங்களை – வவுனியா ஈரப் பெரியகுளம், அம்பாறை, திருமலை முதலியவற்றை திட்டமிட்ட மண் கொள்கைக் குடியேற்றங்கள் மூலம் சிங்கள இனவெறி அரசுகள் கபளீகரம் செய்து கொண்டிருந்தன. மேலும் குடும்ப நலத்திட்டம் என்ற பெயரில் "2 பிள்ளை போதும்" என்ற கருத்தடைக்கு தமிழரை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊக்கியதன் மூலம் தமிழின அழிப்பை திட்டமிட்டு மேற்கொண்டு வந்த சிங்களப் பேரினவாதச் செயல்களைக் கவிஞர் காசி ஆனந்தனும் நானும் கவியரங்குகளிலும், பத்திரிகைகளிலும் உக்கிரமாக, ஆவேசமாகச் சாடி வந்துள்ளோம்.

1958–ல் 83–ல் தமிழர் மீது சிங்களக் காடையர்கள் நடத்திய இனவெறிப் படுகொலைத் தாக்குதல்களால் முற்போக்குக் கும்பம் மூச்சடங்கி மூலைக்குள் முடங்கி விட்டது. இடதுசாரிக் கொள்கைகளை நெஞ்சார ஏற்றுச் சிங்கள இனத்தின் நேர்மையை மனமார நம்பிப் பாடித்திரிந்த இடதுசாரிக் கவிஞன் புதுவை இரத்தினதுரை பேரினவாதிகளின் சுயரூபங்கண்டு அதிர்ந்து, குமுறி, ஐக்கிய இலங்கைக் கொள்கையின் நயவஞ்சகத்தை எதிர்த்து "தமிழனையும் வாழ விடு எங்கள் தாய் மண்ணை விட்டோடு பேரினமே!" என்று ஆயுதமேந்திய புலியணியில் புகுந்து கனல்கக்கும் கவிதைகள் பாடி விடுதலைப் போராட்டத்துக்கு உந்துசக்தியாக – இன்று உழைக்கின்றார். காசி ஆனந்தனையும் என்னையும் பொறுத்தவரை தமிழீழ விடுதலையை அன்றும் இன்றும் நெஞ்சார யாசித்துப் பாடியே வருகிறோம்.

**நமது கவிதை மரபில் தமிழின உணர்வுக் கவிதைகளும் சமூக விடுதலை, வர்க்கப் போராட்டம் போன்ற தொனிப்பொருளிலான கவிதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. மரபுப் போராட்டம் கூட இதைச் சார்ந்தும் விலகியும் – நடந்திருக்கிறது. இன்றைக்கு இதையெல்லாம் கடந்து புதிய பிரச்சினைகளோடும் புதிய கவிதைகளோடும் ஒரு நிலைக்கு வந்துவிட்டோம். என்றாலும் இதையெல்லாம் திரும்பிப்பார்க்கிறபோது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?**

தமிழுக்கு ஒரு தனியரசு உண்டு. ஆனால் தமிழுக்கு – தமிழ் கலைகளுக்கு – பண்பாடு பழக்கவழக்க விழுமியங்களுக்கு என்றுமே அழிவு, சிதைவு ஏற்பட இடமில்லை என்ற நிலை தமிழ் வழங்கும் எந்த நிலத்திலுமில்லை. குறிப்பாக ஈழத்தில் அழிவுச் சவால்களுக்குத் தமிழின அழிப்பு நோக்கினை 2300 ஆண்டுகளாக உயிர் இலட்சியமாகக் கொண்டு மூர்க்கத்தனமாகச் செயற்படும் சிங்களப்பேரினவாதத்துக்கு எதிராக தமிழினமிங்கு காலூன்றி நின்று போராடத் தேவையான ஆன்ம பலம் தமிழினத்திற்கு இங்கு ஊட்டப்பட வேண்டியது தவிர்க்க முடியாத இனக்கடமையாகிறது. இந்த ஆன்ம இலட்சியப் பணியில் கவிஞன் ஈடுபட்டு வந்தவராயினும் இன்னும் முனைப்புப் போதாது என்றே கூறவேண்டும். ஒன்றுபட்ட ஒற்றுமையுள்ள ஓர் ஆன்மபலம் மிக்க தமிழ்ச் சமுதாயம் இங்கு உருவாகுவதற்குத் தடையான உட்பூசல் பெருக்கும் சாதி வேறுபாடுகள், வர்க்க வேறுபாடுகள், சீதன தனியுடைமை வேட்கை, பெண்ணின ஒடுக்குமுறை, இவற்றுக்கெதிராக ஈழத்தமிழ்த் தேசிய அடிப்படையிலான கருத்துப் புரட்சிகள் ஏற்படவைக்கப் போதுமான இலக்கியப் பணியிங்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு வளரவில்லை. காரணம் தமிழீழ தேசியம், தமிழீழ தேசாபிமானம் இங்குடமிட்டு முழுமையாக வளர்க்கப்படாமையே ஆகும். மரபுப் போராட்டம் எமது மொழியின் செம்மைக்கும் இம்மொழியில் தோன்றும் சிரஞ்சீவித்துவத்துக்கும் வழி ஏற்படுத்த வேண்டும் என்று வாதிட்டது. இரு பொருள் மரபு, மொழி மரபு பற்றியது. இன்று எம்மிடையே புகைந்து கொண்டிருக்கும் மரபுப் போராட்டம் வேறு. பொருள் மரபு பற்றி பிரச்சினை இல்லை. ஆனால் கவிதை யாப்பமைதி கொண்டமைந்தால் அது மரபுக் கவிதை என்றும் யாப்பு குறிப்பாக ஓசை ஒழுங்கு எதுகை மோனை பேணப்படாமல் சுதந்திரமாக எழுதப்பட்டால் அது புதுக்கவிதை என்றும் அழைக்கப்படுகின்றன. இவ்விரண்டுமே இருவேறு வடிவங்கள் தான் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதைவிட்டு சிலர் "அது தான் கவிதை" "இதுதான் கவிதை" என்று வீணாக வாதிடுவதில் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் ஈடுபடுவது பொறுப்புணர்ச்சியற்ற செயலாகும்.

**கவிதைக்கும் அரசியலுக்கும் உறவை கடந்த 3,4 தசாப்தங்களில் வெளிவந்த ஈழத்துக் கவிதைகள் நன்கு புலப்படுத்தி இருக்கின்றன. இன்றைய போராட்டத்தினையும் வரலாற்றையும் பிரதிபலிக்கும் கவிதைகள் பற்றிச் சொல்லுங்கள்?**

கடந்த 4 தசாப்தங்களில், இடதுசாரி அரசியல் சார்ந்த கவிதைகள் முதலிரு தசாப்தங்களுடன் பின்னணிக்குட் போய்விடத் தமிழ்த் தேசிய அரசியல் கவிதைகள் முதல் 3 தசாப்தங்களில் ஒடுங்கி ஒலித்து வந்தபோதும் 4–ம் 5–ம் தசாப்தங்களில் ஆயுதப் போராட்டம் வெடித்ததிலிருந்து போராட்ட வாழ்வின் உரிமைக்கோரிக்கை கவிதைகள் ஓங்கி ஒலித்து வருகின்றன. முழுமையான சுய அர்ப்பணிப்போடு கவிஞர் காசி ஆனந்தன் புதுவை இரத்தினதுரை தொட்ட ஒரு நீண்ட பட்டியல் சமைத்த பழைய, புதிய போராளிக் கவிஞர் கூட்டம் நெஞ்சுக்கு நாக்குக் கொடுத்து உணர்ச்சிக்கீதம் இசைத்துக்கொண்டே இருக்கின்றது. ஆனால் இந்திய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெறக்காரணமாகப் படிக்காத பாமரனும் விளங்கி, உணர்ந்து சன்னதங் கொள்ள வைக்குமளவுக்குப் பாரதியின் கவிதைகளில் காணப்பட்ட எளிமை, தெளிவு, விளக்கம் இந்த கவிதைகளும் பெற்றிடும் போதுதான் நிறைவான உடனடி அறுவடை இங்கு கிடைக்க வழியுண்டாகும் என்பது எனது தாழ்மையான கருத்து.

**நமது கவிதை எதிர்கொள்ளுகிற நெருக்கடிகள் இப்போது எவையாக இருக்கின்றன? இன்றைய படைப்பாளி இவற்றை எவ்வாறு எதிர்கொள்ள முடியுமென நினைக்கிறீர்கள்?**

இலங்கைத் தமிழனின் கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை நெரிக்கின்றன். அச்சுத்தாள், பொருண்மிய தடை, அச்சிடும் விலையேற்றம் அரச அச்சுறுத்தல்கள் இச் சவாலைக் கடந்து சாதனைபுரிய வேண்டுமானால் ஓலைச் சுவடிக் காலத்துப் புலவனின் மனவுறிதியோடு மனதுக்குள் கவிதை வைத்துச் செப்பஞ் செய்து உச்சமாக மெருகேற்றி பொருண்மை முக்கியத்துவம் வாய்ந்த கவிதைகள் மட்டும் அளவாகப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படைத்து சிக்கனமாக அச்சிட்டு வெளியிடல் வேண்டும். மக்களிடையே பரவலாகக் கவிதை ரசனையை ஏற்படுத்துவதில் பெரும் வெற்றிப் பணி புரியும் கவியரங்குகளை ஊர்கள் தோறும் நடத்துதல் வேண்டும். கம்பனே சொன்னான், கவிதைகள் செவிநுகர்கனிகள் என்று. அடுத்து விடுதலைப் புலிகள் இயக்கமே முன்னின்று, இங்கு படைக்கப்படும் உன்னதமான போராட்டக் கவிதைகளைத் தேடித்தொகுத்து இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற வெளிநாடுகளில் அச்சிட்டு நவீனமான அமைப்பில் வெளியிடுவதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தின் நியாயப் பாட்டையும் சர்வதேச சமூகத்துக்கும் புலப்படுத்திச் சர்வதேச மனச்சாட்சியை எம் போராட்டத்துக்கு சார்பாகக் கிளர்ந்தெழ வைக்கவும் முடியும்.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்து உடனடிப்பிரதிபலிப்பை பாமர மக்களிடையேயும் ஏற்படுத்தும் பாடல்களாக இவ்வாக்கங்கள் அமைவதற்கு வழி கவிஞன் பழைய. கவிதைகளை நிறையப் படித்துக் கவிதையின் நெளிவு சுழிவுகளை அழகுகளை அறிந்து கையாண்டு தன் கவிதைகளைப் படைத்தலாகும். உலகில் 0.5 சதவீதமான மக்களே கவிதை வாசிக்கிறார்கள் என்கிறது ஒரு கணிப்பீடு. இங்கோ எனில் இன்றைய நிலையில் இன்னும் குறைந்த சதவீதத்தினரே கவிதை வாசிக்கின்றனர் எனலாம். இதனால் கவிதையை எளிதாக விளங்க வைக்க ஒரு கவிதையில் கருத்துக் கோவையை வெளியிடுவதில் ஒரே உத்திமுறையை மீண்டும் மீண்டும் பாவித்து வாசகன் கவிதை வெள்ள ஓட்டத்தில் சுலபமாக இழுத்துச் செல்லப்பட வைக்க வேண்டும்.

இராணுவப் பிரதேசத்தில் வாழும் எழுத்தாளர்கள் தங்கள் மனதுக்குத் துரோகம் இழைக்காமலும் வரலாற்றுப் பொறுப்புணர்ச்சியோடும் அதற்குரிய தர்மத்தோடும் எழுதவேண்டும்.

இன்னொரு சவால் இன்று ஈழத்தில் பெருவழக்காக வெளிவரும் புதுக்கவிதைகள் போரின் அவலங்களை, மக்களின் நீண்டு செல்லும்

# விடியலுக்கான ஒத்திகை



காலையில் பயிற்சி முடித்த
கையோடு
காட்டுக்கு விறகுவெட்டப்
போவதாய்
அதிகமான தந்தையர்
சொல்லிப்போயினர்.
மதியம் உலையேற்றி
இறக்கியதும்
பின்னேரப் பயிற்சிக்கேகினர்
தாயார்
பள்ளிவிட்டு வந்ததும்
பானையை வழித்துத்
துடைத்துவிட்டு
மந்துகெத்திய புலவில்
சிறுவர்களின் மாலைநேர
விளையாட்டு.
துப்பாக்கியென ஏந்திய
விறகுக்கொள்ளியுடன்
பிசகின்றிய சத்தியப்பிரமாணம்.
இடுப்பில் வழவும்
காற்சட்டையை
இறுகப் பிடித்தபடி
ஒன்று காலைப்பரத்தி
விழுந்ததும்
மற்றதனைத்தும் மண்ணிற்
புரளுகின்றன.
காலையில் வேர்களுக்கான
பயிற்சி
மாலையில் விழுதுகளுக்கான
விளையாட்டு.
ஊர்மனையை ஒத்தனவாக
நெருப்புக்குஞ்சுகளும் நீச்சல்
பழகுகின்றன.
நாளைய வாழ்வுக்கான
இன்றைய ஒத்திகை.
ஆழ்மனதில் வரையப்படுகிறது
வாழ்வின் யதார்த்தம்.
சிறகேயின்னும் சரியாக விரியாத
குஞ்சுகளின் விளையாட்டுக்
குறிப்புணராது
நாளையுன்
வயலிலிறங்குவேனெனச்
சொல்கிறதாம் வெள்ளம்.
அரித்தரித்து எம்கரையெல்லாம்
கரைக்கும்
ஆக்கிரமிப்பு வெள்ளமே!
நெருப்புவை எம்தேசத்துக்கு
எரிந்து போகின்றோம்.
எனினும் பாதம் பணியோம்.
இன்றைய பூக்களாக நாங்கள்.
நாளைய பூக்களாக விரியும்
மொட்டுக்கள்.
வேரறும் வரை விளங்கும்
எம்மரங்கள்.
ஆழப் பாய்ந்த வேரை
அறுக்கவா முடியும்?
இப்போ ஊர்முழுதும் ஒரு
உற்சாகமும் போட்டியும்
யார் முதலில் உன்னைச்
சந்திப்பதென்று

—மாலிகா—



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துயரங்களை ஒப்பாரி வைக்கின்ற அளவில் சலிப்புக் கவிதைகளாக அமைந்து ஏற்கனவே சுயமாகச் சலித்து மரத்துப் போய்க் கிடக்கின்ற மனங்களில் தம்போராட்ட வாழ்க் கையில் மட்டுமன்றி கவிதை படிப்ப திலேயும் சலிப்பை ஏற்படுத்தி வரு கின்றனர். இந்தப் பழக்கப் பின்பற் றல் தோசத்திலிருந்து விடுபட்டு நோயை, உத்தரிப்பை, பிலாக்கணம் வைப்பதோடு நின்றுவிடாமல் இந்த நோய்க்கு மருந்தைக் கண்டுபிடிக்க முடியும், பிடித்தே தீருவோம் என்று வீராவேசமும், தர்மத்தின் சந்தேக மற்ற வெற்றிப்பேறு பற்றிய நம்பிக் கையும் பீறிடப்பாட்டை முடிக்க வேண்டும். உதாரணமாக கவியேறு காசியானந்தனின் "பகைவன்பாய லாம் உடல்கள் சாயலாம்! எனினும் தமிழீழம் பணியாது. அகமும் புறமுமாய் உயிர் கலந்த நம் அன்னை மண் பாசம் தணியாது" என்பது போன்ற நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டும் வகையில் இக் கவிதைகள் அமையும் போது தமிழீழப்பிரஜைக்கு காலம் அவசியம் வேண்டிநிற்கும். தன்னம்பிக்கையும் உறுதியும் வீரமும் நெஞ்சிலே ஆன்மாவிலே மிக்கெழும் புத்தெழுச் சியுடன்.

**கவிதை குறித்த விரிவான ஆழமான புரிதலை இன்னமும் வளர்க்கவேண்டி இருக்கறதல்லவா? மொழி சார்ந்தும் வாழ்வின் அனுபவம் சார்ந்தும் இயங்கும் மிக முக்கியமான படைப்பு கவிதையே. கவிதைப் பிரக்ஞை இன்னும் முதன்மைப் படுவதற்கு மொழியியலில் செயற்படுவோரிடத்துக் கூட அக்கறை குறைவாக இருக்கிறதே. இது உங்களுக்கு எப்படியான உணர்வை ஏற்படுத்துகிறது?**

மொழியின் – சொற்களின் நய மான உச்சமான பொருத்தப்பாட் டுடன் கூடிய கையாளுகையே கவி தையின் உயிர்ப்பாகவும் – இவ் உயிர்ப்பமைந்து கவிதை பிறப்பெடுத்த உணர்ச்சியே உந்து சக்தியாகவும் – அவ் உணர்வெழுச்சிக்கு கருத்துப் பற்றி ஆழ்ந்த விளக்கப்பாடே மூல காரணமாகவும் அமைவதை நாம் உணர்ந்து கொண்டால் நல்ல கவி தைபாடும் வல்லமையை எங்கெங் கிருந்து பெறலாம் என்று விளங்கிக் கொள்ளலாம். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்று பாரதி கூறுவது கவிஞனிடம் உண்மையை உண்மை யாக உணரும் நுணுக்கமான ஆழமான சிந்தனை இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. "உள்ளத்தில் உள்ளது கவிதை. அதைச் சொல்லத் தெரிவது கவிதை" என்ற நாமக் கல்லூராரின் வாக்கு நயம்படச் சொல்லும் ஆற்றல் கவிஞனுக்கும் அவசியம் என்கிறது. இவ்வாற்றலை கவிஞன் எப்படிப்பெறலாம். புதிதா கப் புரிதலுக்கான ஆய்வுகளில் இறங்கி காலம் தாழ்த்த முன்னம், இதுவரை சங்ககாலத்தில் இருந்து இன்றுவரை வெளிவந்தவற்றுள் குறைந்தபட்சம் பெயர்பெற்ற கவிதை களையாவது "நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்" என்றி ருக்கும் கவிஞர்கள் சுழியோடித் துருவிப் படிக்கும்போது கவிதைக் கலையின் அற்புத இரகசியங்களின் நுட்பங்களைப் புரிந்து கொள்வர். கவிதைபற்றிய பிரக்ஞை இவர்களி டையே முதன்மைப் பட்டு பயன்தரும். அவற்றைப்பயன்படுத்தி எங்கள் தனித்துவம், காலத்தின் தனித்துவம் சுடர அற்புதக்கவிதைச் சிருஷ்டிகளை, நாடு விரைந்து விடுதலை பெறும்படி படைக்கலாம். அனுபவம் கவிதைக்கு உண்மைத் தன்மைக்கு வழங்கி கவிஞனிட மிருந்து வாசகனுக்கு கருத்தையும் உணர்வையும் தொற்றவைப்பது. எனவே பட்டறிந்து பட்டுணர்ந்து பாடப்படும் கவிதையே இயல்பான தாகத் தாக்கம் ஏற்படுத்தும் சக்தி வாய்ந்ததாக அமைய முடியும். "நெஞ்சு நிறைய ஊட்டப்பட் அரசியல் ஞானம் இலட்சியங் களோடு போர் முனைப்புடன் போர்க் களத்தில் நிற்கும் ஒரு போராளியால்தான் போரின் உண்மை முகத்தை தத்துவ ரூபமாகச் சொல் லோவியமாக கவிதையாக வடித்து தரமுடியும். அவர்களையும் பாட ஊக்குங்கள். போராட்டம் இன்னும் வலிமையைப் பெறும்" என்கிறேன். மேலும் மொழியியல் சமூகவியல் ஆய்வுப் பணிகளில் ஈடுபடுபவர்க ளுக்கும் கவிதை ரசனை பேருதவி பயக்க வல்லது என்பது மறுக்க முடியா உண்மை. ஆயினும் அவர்கள் சிந்தனை முழுக்க முழுக்க மையங்கொண்டிருப்பது மொழி இயந்திரத்தின் செம்மைப் பாட்டில் என்பதால் அவர்கள் கவிதையின் பௌதீக உறுப்புக்களை மொழி இலக்கணங்களைப் பற்றியே சிந்திப்பர், பேசுவர். கவிதை உள்ளடக்கத் தைப்பற்றி அவர்கள் அக்கறைப்பட நியாயம் இல்லை. அதற்கு மேலாக மொழிரீதியாக அவர்களின் வழி காட்டலை இயன்றளவு ஏற்றுக் கொள்ளப் பார்ப்பதே கவிஞர்களின் கவித்துவம் ஆரோக்கியப்பட உதவும்.

மாபெரும் காவியங்கள் போரை மையங்கொண்டு எழுதப்பட்டிருக் கின்றன. இன்றைய நமது காலமும் வாழ்வும் போருடன்தான் இணைந் திருக்கின்றன. நமது கவிதைகளில் போர் பற்றியோ போர் வாழ்வு பற்றியோ இன்னும் குறிப்பிடத்தக்க காவியப் படைப்புக்கள் எழவில் லையே?

எழவில்லையென்று சொல்வதற் கில்லை. இன்னமும் எழுந்து வெளி வரவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். போர் நடந்து கொண்டிருக்கிறது. கவிஞர் ஒருவரோ பலரோ அல்லது எல்லோருமோ ஈழவிடுதலைப் போராட்ட வர லாற்றை இன்று வரையான வளர்ச் சிக் கட்டம் வரை பாடிவிட்டு இனிவருவதையும் இறுதி முடிவை யும் பாடக்காத்திருக்கலாம் இது சாத்தியமான நிலமையும். பாரதக் கதை குருஷேத்திரப் போர் முடிந்து தர்மன் பட்டம் சூட்டிய பின்புதான் வியாசராலும், இராமாயணப் போர் முடிந்தபின்புதான் இராம காவியங் கள் வான்மீகி போன்றோராலும், வடநாட்டுப் படையெடுப்பில் வெற்றி கண்டு மீண்டும் சேரன் செங்குட்டு வன் கண்ணகிக்கு கோட்டம் எடுத்த பின்தான் சிலப்பதிகார காவியம் அவன் தம்பி இளங்கோவாலும் பாடப்பட்டன. இலியட், ஒடிசி போன்ற மேலை நாட்டுக்காவியங் களும் போர் முடிந்தேபாடப் பட்டிருக்கும். இது போல ஈழ விடுதலைப்போர் வெற்றி காணும் நாளை அடுத்து ஒன்றுக்குப்பல ஈழ காவியங்கள் வெளிவரலாம். ஆயினும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள் சொல்வது போல் போரை ஊக்கும் படைப்புக்களை நாம் இன்று பாடவேண்டும்.

**போராட்டத்துக்கு வளம்தர எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் பல கவிஞர்கள் தம்மை அர்ப்பணித்திருக் கிறார்கள். தம் படைப்பினூடாகச் சர்வதேச அளவில் தமது போராட்ட நியாயத்தை நிலைப்பாட்டைப்புலப் படுத்தி இருக்கிறார்கள். எங்களுடைய படைப்பாளிகளை நோக்கினால் கடந்த 15 வருடங்களில் சறுக்கல்களும் வழி தவறல்களும்தானே அதிகமாய் இருக் கின்றன. இதுபற்றி என்ன சொல் கிறீர்கள்?**

தனியுடமைப் பைத்தியத்திக்கும் குடும்ப மேம்பாட்டு அங்கலாய்ப் புக்குமே தலைமுறை தலைமுறை யாக தத்துப்பிள்ளையாக வளர்ந்த ஈழத் தமிழினத்தின் ஒரு சாதாரண குடிமகன் தன் சொத்து – தன்புகழ் – தன் சமூக அதிகாரம், அந்தஸ்து, வளர்ச்சி என்பன உத்தரவாதப்படுத் தப்பட்டு விட்டால் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது என்று திருப்திப் பட்டு விடுகின்றான். அயல் வீடுகள் தீப்பற்றி எரிந்தாலும் பக்கத்து வீட்டில் பல மனித உயிர்கள் பலிகொள்ளப் பட்டாலும் அவன் கிலேசப்படுவ தில்லை. இத்தகைய மனங்களை விரியச்செய்து தேசத்திற்கும் இனத் திற்கும் அவற்றின் மூலம் தனக்கும் நன்மை தேடும் மனித ஜென்மமாகப் பண்படுத்தத் தம் இலக்கியப் படைப் புக்கள் மூலம் உழைக்கவேண்டிய தார்மீக கடமைப்பாடுடைய நம் எழுத்தாளர்களோ பாமர மக்களையும் இடித்து முந்திக்கொண்டு சொத்து, புகழ், அதிகாரம் என்ற சுயநல இலக்குகளை நோக்கிச் செட்டை கட்டிப் பறக்கிறார்கள். ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் கருக்கட்டி உருப்பெற்றுக்கொண்டி ருந்த ஆரம்ப காலத்தில் “அடியடா! பிடியடா!” என்று ஆயுதப்போருக்கு வாலுருவிப்பாடிய கவிஞர்களில் சிலரில் தாங்களே ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதா மகன்கள் என்று மார்தட்டி மேடைகளிலிலும் சஞ்சிகைகளிலும்முழங்கிய மூத்த தலைமுறைப் பிரமுக எழுத்தா ளர்கள் இப்போது கவிமணிப் பட்டம் தேடிச் சூட்டிக்கொண்டு விழாக் கொண்டாடி மலர் வெளி யிட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

மேலும் பிறநாடுகளில் விடுதலைப் போராட்டங்களுக்குப் பல கவிஞர் கள் தம்மையே அர்ப்பணித்திருக் கையில் இங்கு அப்படி எவருமே இல்லையே என்று நீங்கள் ஆதங் கப்படுவதாக உணருகிறேன். ஏன் தமிழீழ விடுதலைப் போரை ஆதரித் துப்பாடிய கவிஞர் பாண்டியூரான் தென் தமிழீழத்தினுள் புகுந்த ஆக்கிரமிப்பாளர்களால் பச்சையாகப் படுகொலை செய்யப்படவில் லையா? தமிழீழப் படைப்பாளிகள் ஒருவேளை முழுத் தமிழீழம் அந்நியச் சிங்கள இராணுவத்தால் ஆக்கிர மிக்கப்பட நேர்ந்தால் உயிர் அர்ப்பணிப்புக்குத்தப்பவா முடியப்போகிறது? மேலும் தமிழீழப் போராட்ட நியாயப்பாடு குறித்த காசியானந்தன் முதலான எங்கள் கவிஞர்களின் படைப்புக்கள் குறைந்த அளவிலேனும் சர்வதேச நாடுகளில் ஒலிக்கின்றமையை நீங்கள் மனங் கொள்ள வேண்டும்.

**எழிலி, தண்டலை என்று இரண்டு முக்கியமான கவிதைத் தொகுப்புக் களை சிறப்பாகத் தந்த நீங்கள், பிறகு கவிதைகளில் அந்தளவுக்கான சாத னைக்கு முயலாதது ஏன்? இதை உங்களிடையே ஏற்பட்ட ஒரு தேக்க மாக நீங்கள் உணரவில்லையா?**

உங்களைப் போலவே என் கவி தைப் பணி விடயத்தில் பல நண்பர் கள் கணிப்பிட்டிருக்கிறார்கள். அவர் களைப் பொறுத்தமட்டில் எழிலி, தண்டலை ஆகிய இரு பிரசித்தி பெற்ற கவிதை நூல்களை அடுத்து “சின்னஞ்சிறு கதைகள்” எனும் மகுடத்தில் 45 சிறிய வடிவம் கொண்ட என் ஒரு பரிசோதனைக் கதை படைப்புத் தொகுதி நூலாக வெளிவந்தது. “சுதந்திரன்” முதலான பல பத்திரிகைகளின் பாராட்டைப் பெற்றதும் “இன்பாவானில்” எனும் ஒரு அகத்துறைக் கவிதைத் தொகுதி வெளிவந்து விற்பனையானமையும் அவர்களால் கால இடைவெளியில் மறக்கப்பட்டுவிட்டன. அந்நூலே கவிஞர் நவபால கோபாலன் அவர்கள் தாமும் ஒரு கவிதைத் தொகுதி வெளியிட தூண்டுதலாய் அமைந்தமையோடு பல ரசிகர்களின் பாராட்டையும் எனக்குப்பெற்றுத் தந்தது. “தமிழ் இலக்கணப் பூங்கா” என்னும் இலக்கண நூல் 1–ஆம் பதிப்பு ஆயிரம் பிரதிகள் பத்து மாதங்களிலும், 2–ம் பதிப்பு இரண் டாயிரம் பிரதிகள் ஒரு வருடத்திலும் விற்பனையாகி 3–ம் பதிப்பாக மூவாயிரம் பிரதிகள் அச்சிட்டுக் கொண்டிருக்கையில் அமைதிப் படை வருகை – என்மீது அதன் விசாரணைகள் – என் 14 வயதுப் பாலகன் அப்படையினால் கைது – சிறைவைப்பு என்ற கலக்கங்களால், அச்சிட்ட அச்சகம் ஓர் உதிரி இயக் கத்தால் பறிமுதலான பதட்டத்தால் ஒருசில வருடங்கள் என் இலக்கிய, இலக்கணப் பணிகள் இடையீடு பட்டனவாயினும் அமைதிப் படை விலகிச் சென்றபின் என் கவிதைகள் ஆன்மீகம் கலந்த அரசியற் கவிதை களாக ஜனனம் பெறத் தொடங்கின. ஆயினும் எழிலி, தண்டலை நூல்க ளையும் மிஞ்சிய சாதனைகளாக இதுவரை ஈழமண்மீட்புக்கு தம் இன்னுயிர் விலைகொடுத்த மாவீரர் வரலாறுகளாக 20 வீரகாவியங்கள் நான் இயற்றி நூலுருவில் வெளிவந் துள்ளன. சமகால ஆயுதப் போராட் டங்களை போராளிகளின் போராட்ட களச் செய்திகளை, போராளிகளின் போராட்டம் சம்பந்தமான அனுப வங்களை உத்தரிப்புக்களை, தியாகங் களை வரலாற்றுப் பதிவுகளாக – இலக்கிய நயமும் காவிய இலட் சணங்களும் பொதிந்து பக்தி சிரத்தையோடு பாடி வெளிவரும் படி செய்துள்ளேன். தமிழினம் 4000 ஆண்டுகால நாகரீகம் கொண்ட தாயினும் தனக்கென ஒரு வரலாற்றை ஆதாரபூர்வமாக எழுதிவைக்க வில்லை. அல்லது ஒருவன் எழுத ஒருவன் அழித்தோ எங்கள் இனத் தொன்மை வரலாறு இருளில் தள்ளப்பட்டுவிட்டது. எனினும் சங்க இலக்கியச் செய்யுள்களில் இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் இன்று தமிழினத்தின் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றை அறிந்துகொள்ள உதவு கின்றன. வரலாற்றை மூடி மறைக் கும் இப் பாரம்பரியம் இன்னமும்




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்திலும் தொடரலாம். அவ்வாறு தொடரும்போது மன்னன் அதியமானை ஊக்கப்படுத்தி அவனது தகடூரை முற்றுகையிட்ட பெருஞ்சேரல் இரும்பொறையை எதிர்த்துப் போரிட வைத்த ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் போன்ற பல சங்கப் பாடல்கள் எப்படி வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றனவோ அவ்வாறே சுவைபட ஈழவிடுதலைப் போராட்டச் சம்பவங்களை உள்ளடக்கிப்பாடிய வீர காவியங்களும் இக்கால வரலாற்றுச் சான்றேடுகளாக விளங்கும். எனவே என் கவிதை தேக்க நிலை அடைந்ததாகத் தங்களால் கருதப்படும், இக்கால கட்டத்திலேயே இந்த வரலாற்றுக் காவியங்களாக Master Piece படைப்புக்கள் படைக்கப்பட்டமையை இங்கு குறிப்பிடல் அவசியம். இவ்வீர காவியங்கள் ஒரு வெளிநாட்டில், விரைவில் தேசவிடிவின் பின் தொகுத்து நூலுருவமாக வெளிவரச் செய்வது ஏக்கமாகும். மேலும் இவற்றைவிட இதுவரை நான் எழுதிவந்த 32 நூல்களுள் இருபது வரை தாங்கள் குறிப்பிட்ட தேக்கக்காலப்பகுதியிலேயே வெளிவந்துள்ளமையை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். என் கவிதைகளுள் சிரஞ்சீவித்துவம் பெற்றதாக ஒன்றுகூட அமையாமல் போகலாம். ஆனால் தமிழீழ வரலாற்றில் மிகமிகப் பயங்கரமான காலகட்டத்தில் துயரப்படும் என் சகோதரர்களோடு நானும் என் கவிதைகளும் இயன்றளவு துணை நிற்கின்றதாகிய புண்ணியம் ஒன்றே எனக்குப் போதுமானது.

# பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்



கப்டன் பண்டிதர்
சின்னத்துரை ரவீந்திரன்
வல்வெட்டித்துறை
(25.12.1959 - 09.01.1985)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கப்டன் பண்டிதர் 1985ஆம் ஆண்டு தை 9ஆம் திகதி அச்சுவேலியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை சிங்களப்படைகள் முற்றுகையிட்ட போது இடம்பெற்ற மோதலில் வீரச் சாவடைந்தார்.

பண்டிதர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். அதுமாத்திரமன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதப் பராமரிப்புக்கும் நிதிவளங்களுக்கும் பொறுப்பாளராக இருந்தார். வல்வெட்டித் துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையை பிறப்பிடமாக கொண்டவர். அவர் வீரச் சாவடைகின்றபோது வயது இருபத்தி நான்கேயாகும். 1977ஆம் ஆண்டு அமைப்பில் இணைந்து விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும்உழைப்பு, இலட்சியப் பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் பண்டிதர் சகபோராளிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழத் தேசியத் தலைவரின் நேசம்மிக்க தளபதியாக விளங்கிய பண்டிதர் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகப் பொறுப்புக்களை சுமந்ததோடு மட்டுமல்லாது பல வெற்றிகரமான தாக்குதல்களிலும் கலந்துகொண்டார்.

தமிழீழ விடுதலைக்காய் இன்னுயிரை நீத்த இவ் வீரமறவனின் நினைவோடு எம் பணி தொடர்வோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு சின்னப்பறவையின் சிறகசைப்பினில்...

ஒரு சின்னப்பறவையின்
சிறகசைப்பினில் சிலிர்த்துப் போயினோம்
நாம்
எம் வானம் மகிழ்வுற்றது அன்றுதான்
உண்மையில்
எம் உணர்வுகளின்
சிலிர்ப்பினைச் சொல்வதானால்
சிறகில்லாமலே
வானிடை பறந்தேகினோம் நாம்.
எம் தாயின் பிரசவத்தில்
இது சுகப் பிரசவமல்ல
அவளிற்கு வேதனை நிறைந்தது.
இருந்தும்
அவளும் தன் பறவையின் சிறகசைப்பில்
பூரித்துத்தான் போனாள்.

கனவுகளில் பறந்து
களைப்புற்றிருந்த நினைவுகள் நீங்கி
நனவாகிய நாளில்
வீரர்கள் துயிலும் நிலத்தில்
பூச் சொரிந்தது!
வரலாற்றினது வலிமை
உன் வரவு கண்டே தெரிந்தது பறவையே
நீ
விரிந்து பரந்து
முகிலினோடு உரசிப் பறந்திரு
பறவையே!!
இறக்கைகள் முளைத்தெழ
கிளர்ந்தெழும் ஆயிரமாய்...
பறவைகள் விண்ணோகும் என.

**தமிழ்மாறன்**

# காலத்தின் முறிவு

வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளில்
என் கனவுகள் படபடத்தன
என் முற்றத்தில்
என் வீதியில்
நீண்ட என் சுவடுகள் முளைத்திருந்தது
காலக்காற்று
என் கனவுகளை ஏந்தியேந்தி
ஓவியத் தூரிகையாகியது.
பிறகொரு நாளில் -
காலக்காற்று தன்கைகளில்
அழிவின் துடைப்பங்களை ஏந்தி
குருதி வழிய விசுக்கியாடியது
என் முற்றத்தில்

என் வீதியில்
குருதி புரண்டு கிடந்தன
சில வெண்புறாக்கள்.
அவற்றின் இறகுகளுக்குள் பிணைந்திருந்த
என் வண்ணத்துப்பூச்சிகள்
நிறமிழந்து துடித்தன
காலக்காற்று கர்ஜித்தது
என் கனவுகள் முடிந்து போனதாய்.
அதுக்குத் தெரியவில்லை
இனி என் காலத்தை
நான் உருவாக்கப் போவது.

**சித்தாந்தன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லோரும் எல்லாமும் விடுதலைப் போருக்கே
## (நாட்டைக் காக்கும் போரில் ருஸ்ய மக்களின் பங்களிப்பு)

1918 ஆம் ஆண்டின் வசந்த காலம் அது!

முற்றுகைக்குள்ளே புதிய ருஷ்யா மூழ்கிக்கிடந்தது. முடிமன்னன் ஜார் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு பாட்டாளிகளின் வெற்றி வரலாற்றில் பதியப்பட்டு ஓராண்டு மட்டுமே ஓடியிருந்தது.

வணிகர், பெரும் முதலாளிகள், நிலப்பிரபுக்களின் முனைப்பால் புரட்சியை வென்ற ருஷ்யா பஞ்சத்துக்கெதிராகப் போராடவேண்டிய நிலையில்... முற்றுகை வளையத்தை முற்றாக இறுக்கின 'நேச நாடுகள்'

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் தலைமையில் 14 நாடுகள் புதிய ருஷ்யாவின் புரட்சிக் குருத்தினைக்கிள்ளி யெறியக் கிளர்ந்து நின்றன.

விதைத்து, நீர்விட்டு வளர்த்து கதிர்களை அறுத்த பாட்டாளி பட்டினிப் பாயில் நலிந்துகிடந்தான். குலாக்குகள் எனப்படும் பெரும் நிலப்பிரபுக்கள் பருத்த நில அறைகள், தம் வயிற்றுக்குள் ஏழைகளின் உழைப்பு வியர்வை ஆகியவற்றைப் பதுக்கித் தாளிட்டன. முற்றுகை முழக்கம் பெரிதாகக் கேட்கத் தொடங்கியது. களத்திலே நின்ற 'செஞ் சேனை' வீரர்களுக்கு ஆயுதப் பற்றாக்குறை, காலணி உடை பற்றாக்குறை, உணவுப்பற்றாக்குறை.

அரசும், போல்ஷ்விக் கட்சியும் மக்களிடம் கோரிக்கை விடுத்தன. விடுதலை விரும்பும் மக்கள் தம்மிடம் இருந்த உடைமைகளை விரும்பி ஈந்தனர். ஆனால் முதலாளித்துவ முதலைகளின் மனமோ, நிலவறையின் கதவோ திறக்கவில்லை.

சோவியத் அரசு உபரி வசூலிப்புச் சட்டம் என்ற மிகக் கண்டிப்பான புதிய சட்டத்தைப் பிறப்பித்தது. தேசத்தின் உடனடித் தேவையோடு மக்கள் அனைவரையும் ஈடுபடுத்துவதே அச் சட்டத்தின் நோக்கம்.

"குடியானவர் தமது சொந்தத் தேவைபோக மிதமிஞ்சிய தானியங்களை உணவுப்பண்டங்களை அரசாங்கத்திடம் கொடுக்கவேண்டும்" சட்டம் இப்படிக் கூறியது. குடியானவர்களும் பஞ்சத்தில் நலிந்தவர்கள்தான். இருந்தாலும், கொடுத்தனர் பணக்காரர்கள் வளைய மறுத்தனர்.

"பணம் படைத்தவர்களுக்கு ஆளுக்கு ஒரு மேலாடை போதும். அவர்களிடம் அதிகப்படியாக உள்ளவையைப் பறிக்கவேண்டும். ஏழைகள் தமது கடைசி உடைவரை விடுதலை நேசத்தோடு வழங்குகின்றனர். பணக்காரரும் அவ்வாறே தங்களிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளட்டும்" என்று கடும் வார்த்தைகளிற் கூறினார் லெனின்.

நீர்விட்டு வளர்த்து கதிர்களை அறுத்த பாட்டாளி பட்டினிப் பாயில் நலிந்துகிடந்தான். குலாக்குகள் எனப்படும் பெரும் நிலப்பிரபுக்கள் பருத்த நில அறைகள், தம் வயிற்றுக்குள் ஏழைகளின் உழைப்பு வியர்வை ஆகியவற்றைப் பதுக்கித் தாளிட்டன. முற்றுகை முழக்கம் பெரிதாகக் கேட்கத் தொடங்கியது

சோவியத் நாட்டில் உபரி வசூலிப்பும், பொது மக்கள் கடப்பாடு கடுமையாக்கப்பட்டன. மக்கள்அனைவரும் வீடுகளைவிட்டு வெளியே வந்த போர் முனையில் உழைத்தனர். முற்றுகைக்கு முகங்கொடுத்து வெற்றியை விளைவிக்கத் தம்மைத் தாமே சுயவிருப்ப இராணுவசேவைக்குள் ஈடுபடுத்தினர். பஞ்சம் தனது பற்களால் மக்களைக் கடிக்கத் தொடங்கியது.

அரை வயிற்றுக்கு மட்டுமே போதக் கூடிய உணவு பகிர்வுச் சீட்டு மூலம் வழங்கப்பட்டது.

அனுமதிச் சீட்டு மூலமே உடை விநியோகிக்கப்பட்டது.

போக்குவரத்துச் சாதனங்கள் எல்லாம் போர்க்கடமைக்கு மட்டுமே ஈடுபடுத்தப்பட்டன. அனுமதிச்சீட்டு இருந்தால் மட்டுமே மக்கள் அவற்றிலே பயணிக்க முடியும். போர் பஞ்சம் இந்த இரண்டையும் எல்லோரும் எல்லாமும் தேசத்தின் விடுதலைக்கே என்ற இறுக்கமான கட்டுப்பாட்டினால் ருஷ்யா வெற்றி கொண்டது. இது தான் "போர்க்காலக் கம்யூனிசம்" என்று பேசப்படுகிறது.

இந்த வரலாறு, இரத்தம் , வியர்வை, கண்ணீர், பசி, துன்பம், அத்தனையும் கொண்டததுதான் . ஆனால் தேசத்தின் மக்கள் அனைவரும் திரண்டு சுயகட்டுப்பாட்டுடனும், தன்னம்பிக்கையுடனும் ஈக உணர்வுடனும் செயற்படும் போது எத்தகைய முற்றுகைகளையும் உடைக்கலாம் என்பதை ருஷ்யாவின் எழுச்சி எடுத்துக் காட்டுகிறது. முற்றுகைக்குள்ளான கோட்டையாக இன்றிருக்கிறது தமிழீழம். உடைத்து வெளிவரும் வழியை ருஷ்யாவின் வரலாறு சொல்கிறது.

தமிழீழ மக்கள் என்ன செய்தார்கள் என்பதை நாளைய வரலாறு சொல்லும் .

முற்றுகை உடைப்பா...? முற்றுகைக்குள் இன அழிவா?




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ‘கண்கள் கூறும் வார்த்தைகள்’



எம்மினம் படும் இந் நிலை காணும் கண்களே,
கூறும் வார்த்தை என்ன?
அஞ்சல் ஊடாக எரிமலைக்கு.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனோபலத்தின் முன்
கவசபலம் என்ன செய்யும்?